T. 2144

Sri Ramajayam



# SRI RAMAYANA JYOTHISHADI

**(IN TAMIL)**

NEWEST RESEARCH - SPECIAL STUDY

## REAL TREASURE OF PREDICTIVE ASPECT
**of Sri Ramayana**

*with a Foreword by*

Sreeman Sir. S. VARADACHARIAR, B.A., B.L.,
*Retired Judge, (Sometime Chief Justice), Federal Court*

BY

SRI P. GOPALARATNAMAYYANGAR, B.A.
**VAKIL : : RANIPET**

**PUBLISHED BY THE AUTHOR**

**1955. Price Rs 1-8-0**

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ ராமாயண ஜ்யோதிஷாதி

Federal கோர்ட் ஜட்ஜ், சிலகாலம் ப்ரதம ஜட்ஜ்,

ஸ்ரீமான் Sir S. வரதாச்சாரியர் ஸ்வாமியின்

மதிப்புரையுடன்,

ராமாயணத்தில் முன்னறிவிப்புப்பற்றிய

புதிய ஆராய்ச்சியின் அரிய நூல்

பொருட் பொக்கிஷம்

இயற்றியது :

ஸ்ரீ. பா. கோபாலரத்னமய்யங்கார், B.A.,

வக்கீல், ராணிப்பேட்டை. (N. A. Dt.)

ரசுரிப்பது ஆசிரியர்.

1955

விலை ரூ. 1—8—0

முதல் பதிப்பு - 1955.

ரத்னம் அச்சகம், மதராஸ் - 1.

ஸ்ரீ:

# ஸமர்ப்பணம்

ஸ்ரீபூமி நீளாதேவீ ஸமேதாய ஸ்ரீமதே நாராயணாயநம:
ஸ்ரீ அம்ருதவல்லீ ஸமேத ஸ்ரீ யோகா நரஸிம்ஹாய நம:
ஸ்ரீ ரங்கநாயகீ ஸமேத ஸ்ரீ ரங்கநாதாய நம:
ஸ்ரீ வேங்கடநிவாஸாய ஸ்ரீ பத்மாவதீ நாயகாய ஸ்ரீநிவாஸாய நம:
ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத்ஸமேத ஸ்ரீராமாய நம:
ஸ்ரீ ஹயக்ரீவாய நம:

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி
[திருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றியாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத் துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே.

1. பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்-வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன் விண்ணகர்.

2. மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை-என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேனே.

3. எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில் மற்
றெக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேதவிமலர் விழுங்கும் என்
அக்காரக் கனியே யுன்னையானே.

4. காரார் குடந்தை கடிகை கடல்மல்லை
ஏரார் பொழில்சூழ் இடவெந்தை நீர்மலை.

5. எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து
இங்கில்லையா லென்றிரணியன் தூண்புடைப்ப
அங்கப்பொழுதே அவன்வீயத் தோன்றிய—என்
சிங்கப்பிரான் பெருமை யாராயும் சீர்மைத்தே.

ஸ்ரீ கடிகை எனும் ச்லாக்யமானதும் வேங்கடம், பாற்கடல்,வைகுந்தமாகிய திவ்விய ஸ்தலங்களோடு சேர்த்து ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டதுமான கடிகாசல க்ஷேத்ரமென்னும் சோளசிம்மபுரத்தில் தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசை இருக்கும் அக்காரக் கனியான ஸ்ரீ அமிர்தவல்லீ ஸமேத யோகா நரசிம்ம ஸ்வாமிக்கும் அவருடைய உத்ஸவரான உள்ளூர் கோவிலிலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மரென்றும் அழகிய சிங்கர் என்றும் பக்திப் பிரீதியால் அழைக்கப்படும் ஸ்ரீ பூமி நீளா தேவீ ஸமேத திவ்யஸௌந்தர்ய நரசிம்ம பக்தவத்ஸலருக்கும் சின்னமலை ஸன்னிதிகளிலிருக்கும் ஸ்ரீ பூமி நீளாதேவீ ஸமேத ஸ்ரீ ரங்கநாதருக்கும் ஸீதா லக்ஷ்மண ஸமேத கோதண்ட ராமருக்கும், ஸாதாரணமாய் ஸ்ரீராமர் ஏள்ளியிருக்கிற இடங்களில் எல்லாம் கைகூப்பி நிற்பது அல்லது நின்ற திருக்கோலமாயோ பீறந்தபடியாகவோ இராமல் அபூர்வமாய் சங்கசக்ரதாரியாய் யோகாஸனத்தில் வீற்றிருக்

கும் கோலங்கொண்ட ஸ்ரீ யோகாஞ்ஜநேயருக்கும் இச்சிறு நூல் பக்திபூர்வகமாய் ஸமர்ப்பணம் பண்ணப்படுகிறது.

விசேஷகாலங்களில் இஷ்டமானவர்களை நினைத்துக் கொள்வதுபோல் இந்நூலை ஸமர்ப்பணம் செய்யும் சமயம் பரலோகத்திலிருந்து சிலசமயங்களில் எனக்கு திவ்ய தரிசனம் தந்தருளும், என்னிட ஸாஷ்டாங்க சேவைக்கும் சகல வித பூசை மரியாதைகளுக்கும் உரியவர்களான, என்னிட முன்னறி தெய்வங்களான தாயாரையும், தகப்பனாரையும், தமையனாரையும் என் அன்புக்குரியவளாகவும் என் செல்வக் களஞ்சியமாயுமிருந்த தாரத்தையும் என் நினைவிற்குக் கொண்டுவருகிறேன்.

घटिकाचलशृंगाग्रविमानोदरवासिने ।
निखिलामरसेव्याय श्रीनृसिंहाय मङ्गलम् ॥

उदीचीरङ्गनगरसुमनस्तोमसूरिभिः ।
नित्याभिवृद्धयशसे नरसिंहाय मङ्गलम् ।

கோபாலரத்னம் என்னும்

**ராஜகோபாலன்.**

ओं हरिः ओं

श्रीमते रामानुजाय नमः

श्रीनिवास महागुरवे नमः

अस्मद्गुरुभ्यो नमः

श्रीघटिकाद्रिस्थलनित्यवासरसिकेभ्यः कोयिल् कन्दाडै

श्रीनरसिंहमहागुरुभ्यो नमः

श्रीरंगनाथमहादेशिकाय नमः

श्रीमते श्रीनिवासमहादेशिकाय नमः

श्रीमते वेदान्तरामानुजमहादेशिकाय नमः

श्रीरंगनाथदिव्यमणिपादुकाभ्यां नमः

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

यस्य द्विरदवक्त्राद्याः पारिषद्याः परश्शतम् ।
विघ्नं निघ्नन्ति सततं विष्वक्सेनं तमाश्रये ॥

श्रीराघवं दशरथात्मजमप्रमेयं
सीतापतिं रघुकुलान्वयरत्नदीपम् ।
आजानुबाहुमरविन्ददलायताक्षं
रामं निशाचरविनाशकरं नमामि ॥

वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः ॥

# ப்ரார்த்தனை

அரியை, அயனை, அரனை, அவரவர் தேவிமார் பரிவார ஸஹிதம், ஸ்ரீமஹா விஷ்ணுவை ஸ்ரீபூமி நீளாதேவீ ஸமேதராயும், ஸ்ரீசதுர்முகனை காயத்ரீ ஸாவித்ரீ ஸரஸ்வதீ ஸமேதராயும், ஸ்ரீமஹேச்வரனை உமாபார்வதீ ஸமேதராயும் தியானித்து என் மனக்கண் முன்னே நிறுத்தி சிரஸால் வணங்கி ஷோடசோப சாரம் ஸமர்ப்பித்து துதித்து, தடையைத் தடுக்கும் தெய்வமாகிய சிவமைந்தனை விக்நேச்வரரை, விஷ்வக்ஸேநரை, வினாயகரை, வேழமுகத்தோனை திருவடி பணிந்து தொழுது ஸ்தோத்திரம் பண்ணி இச்சிறுநூல் தடங்கலே வராமல் தங்குதடையின்றி பூர்த்தியாய் இதில் எடுத்துரைத்திருக்கும் விஷயம் முதல் நூலாய்த் தழைத்தோங்கி நிற்க அனைவரும் ஆசீர்வதிக்குமாறு வணக்கத்துடன் பிரார்த்தித்து இந்நூல் தலைவரான ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத் ஸமேத ஸ்ரீராமபிரானான ஸர்வலோக சரண்யனை வேறு சரணமில்லாத அடியேன் பற்பல தடவை சரணமடைந்தேன், இப்போதும் சரணமடைகிறேன். இனியும் கடைசி நிமிஷம் வரை ஸதா அடைந்துக்கொண்டே இருக்க விரும்புகிறேன்.

ஸ்ரீராமரே தன் ப்ரீத்யர்த்தம் தன்னருளால் இவனால் பல பட்டாபிஷேகங்கள் கண்டருளினாப்போல் இச்சிறிய நூலை இந்த எளிய ஜீவாத்மாவைக்கொண்டு செய்துவைத்துக் கொண்டிருக்கிறார். இதற்கு பலனளிப்பது அவருடைய திருவருள்.

ஸ்ரீபகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான், (மேலே கடைசியாக வரையப்பட்ட ச்லோகத்தில்) அருளியிருக்கிறபடி ஸர்வ தர்மத்தையும்விட்டு அவரை சரணமடைகிறேன், மற்றது அவர் கிருபை.

"அஞ்சிலே யொன்று பெற்றானஞ்சிலே யொன்றைத்தாவி
யஞ்சிலே யொன்றாறாக வாருயற்காகவேகி
யஞ்சிலே யொன்று பெற்ற வணங்குகண்டயலாரூரி
லஞ்சிலே யொன்றை வைத்தானவ னெம்மையளித்துக் காப்பான்."

4. மாருதியானவர் எங்கெங்கு இராமபிரானது கீர்த்தனம் நிகழ்கின்றதோ அங்கெங்கெல்லாம் சிரத்தின் மேற்குவித்தகையனாய் ஆனந்தக் கண்ணீர் நிரம்பிய கண்ணனாய் நிற்பர் என்றதினால் இந்நூலின் தொடக்கத்திலிருந்தும் இத்துடனும் இருக்கிறார். அவரையும் பஞ்ச பூதங்களையும் பக்திபூர்வமாக ஸேவிக்கிறேன்.

5. உலகில் ஸகலருக்கும் எல்லாவற்றிற்கும் லக்ஷ்மீகடாக்ஷம் அவசியம். ஸ்ரீமஹாலக்ஷ்மி கடைக்கண்ணால் கடாக்ஷித்தால் முக்தி உள்பட ஸர்வைச்வர்யமும் சித்திக்குமாகையால் மனதால் எண்ண முடியாத ப்ரதித விபவமுடைய மங்களத்திற்கெல்லாம் மங்களந் தருபவளான ஸ்ரீமாவிஷ்ணுவின் வக்ஷஸ்தலத்தில் ப்ரீதியாயமர்ந் திருக்கும் லோக மாதாவை நான் ஸ்தோத்திரம் பண்ணுகிறேன். ஒரு குறிப்பிட்ட கோரிக்கையை வேண்டக்கூடியவனல்லன். எனக் கெது நல்லதென்று என் தாயாருக்கு விருப்பமோ அதையருள வணக்கமாய் பிரார்த்திக்கிறேன். ஸ்ரீமஹாவிஷ்ணுவை பஞ்ச மஹா புதங்களான சங்க சக்ர கதா சார்ங்க கட்கங்களுடன் ஸேவிக் கிறேன். சுதர்சனம் பாஞ்ச ஜன்னியம் கௌமோதகீ நந்தகம் சார்ங் கம் இவைகளையும் தனியே ஸேவிக்கிறேன்.

6. அடுத்தபடியாக ப்ரஹ்மாவின் நாவில் வசிக்கும் மஹாஸரஸ் வதியினருள் வேணும். நாக்கசைந்தால் நாடசையும் என்னுமாப் போல் நாவிற்கு மஹிமைஉண்டு. மனதில் எவ்வளவு எண்ணினாலும் சரியாய் வெளியிடத் தெரியாவிடில் ப்ரயோஜனமில்லை. எந்த கலை தான் வரும்! கவிகள் எப்படி தோன்றுவார்கள் !. சரமாரியாய் வார்த்தை வராமல் என்னைப்போல் தவிக்கவேண்டியதுதான். கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு என்கிறபடி வாணி கருணைபுரிந்தால் அரசரோடு சரியாசனத்திருக்கலாம். திருநாவிற் கரசி பூர்ணமாய் அநுக்ரஹிக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

7. இவர்களிருவர் அருளும் சித்திக்கும்படி செய்யும் மஹாசக் தியைப்பற்றிப் புகழ்ந்து வரங்கோர என்னாலாகாது. தானாகவே கருணைகொண்டு வரங்கொடுத்து பலரை ஈனஸ்திதியிலிருந்து

உன்னத ஸ்திதிக்கு உயர்த்தியிருக்கிறாள் மஹேச்வரீ. சிலரை மஹா கவிகளாக்கி யிருக்கிறாளன்றோ மஹாகாளி. அந்த துர்க்கா தேவியும் என்மேல் தயைபுரிய வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

---

सहस्रफणाय विद्महे सर्पराजाय धीमहि तन्नोनन्तः प्रचोदयात् ।

8. ஸஹஸ்ரபணாய வித்மஹே ஸர்ப்ப ராஜாய தீமஹி தன்னோ னந்தப்ரசோதயாத். ஆதிசேஷனை திருப்பாற்கடலில் ஸ்ரீமந் நாராயணனுக்கு அனந்தசயனனாய் பூமியில் குடை முதலிய பலவித கைங்கர்யங்களைப் புரியும் ஆயிரந்தலை கொண்டு பூமியைத் தாங்கும் ஸ்ரீராமாவதாரத்தில் லக்ஷ்மணனாயும் இந்த யுகத்தில் உடையவராகவும் அவதரித்த, அநேகந்தடவை எனக்கு கனவில் திவ்யதரிசனந் தந்தருளும், ஸர்ப்பராஜனை ஸர்வவிதமாயும் ஸர்வகாலமும் அடியேனுக்கு அருள்புரிய அடிபணிந்தழைக்கிறேன்.

9. गरुडवाहनगुरुकटाक्षवीक्षणप्राप्तिरस्तु ।
कुङ्कुमाङ्कितवर्णाय कुन्देन्दुवदनाय च ।
विष्णुवाह नमस्तुभ्यं पक्षिराजाय ते नमः ।
मङ्गलं भगवान्विष्णुर्मङ्गलं मधुसूदनः ।
मङ्गलं पुण्डरीकाक्षो मङ्गलं गरुडध्वजः ॥

கருடவாகன குரு கடாக்ஷவீக்ஷணப்ராப்தி ரஸ்து
குங்குமாங்கிதவர்ணாய குந்தேந்து வதநாயச,
விஷ்ணுவாஹ நமஸ்துப்யம் பக்ஷிராஜாயதே நமஃ
மங்களம் பகவான் விஷ்ணுஃ மங்களம் மதுஸூதநஃ,
மங்களம் புண்டரீகாக்ஷோ மங்களம் கருடத்வஜஃ

ஆகாசத்தில் சஞ்சரிக்க மஹாவிஷ்ணுவிற்கு வாகனமான குங்கும வர்ண உடலும் தூல்வெள்ளைத்தலையும் கழுத்துமுடைய அழகிய பக்ஷிராஜாவை கிருபைபுரிய பிரார்த்திக்கிறேன்.

10. ஸூர்ய, இந்து, பௌம, புத, வாக்பதி, காவ்ய, ஸௌரி, ஸ்வர்பாநு, கேது நவக்கிரக தேவதைகளை ஸேவிக்கிறேன். இவர்களை என் சொந்தமாய்ப் பாராட்டி சாதாரணபேர்களாலேயே வரைந்திருக்கிறேன். ஆதிக்கிரந்தத்திலுள்ளதை அப்படியே எழுதுவதுடன் நிற்காமல் அங்காரகன் சனிபகவான் முதலியவர்களைக் குறித்து என்னிட உக்தியுரைகள் வேறே செய்திருக்கிறேன். என்பிசகுக்கு மனப்பூர்வமாய் மன்னிப்புக் கேட்கிறேன். விழுந்து விழுந்து ஸேவிக்கிறேன். எல்லா கிரகங்களையும் ஸ்தோத்திரம் பண்ண விரும்புகிறேன். அப்படிச் செய்ய இவர்களே அருள் புரிந்து என்னை க்ஷமித்து ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறேன். பனிரண்டு ராசிகளையும் அவைகளில் ஸஞ்சரிக்கும் 27-நக்ஷத்திரங்களையும், அவைகளுடையவும் கிரகங்களுடையவும் அதிதேவதைகளையும் ஸேவிக்கிறேன். எல்லாரும் அருள்புரிய வேண்டுகிறேன்.

11. ஆதிகாவ்யத்தை அருளிய மதுரமே அவதாரமான வால்மீகி மஹர்ஷியைத் தெண்டனிட்டு ஸ்துதிக்கிறேன். ஆழ்வார்கள் அனைவரையும் ஸ்ரீ ஆண்டாளையும் ஆசாரியாள் அத்தனை பேர் திருவடிகளிலும் சரணடைந்து அடிபணிந்து ஸாஷ்டாங்க தெண்டன் ஸமர்ப்பித்து அருள்புரிய அழைக்கிறேன். எம்பெருமானார் திருவடிகளே சரணம்; ஜீயர் திருவடிகளே சரணம்.

12. தன்னருளால்தானே குருவாகி என்னைத் திருத்தி தீமை நீக்கித் துய்யனாக்கிய தூப்புல்தெள்ளமுது தேசிகனை "வேதாந்த தேசிகமஹம் சரணம் ப்ரபத்யே" என்று கனவிலும் நினைவிலும் சரணடைந்திருக்கிறேன். தென்னாசார்ய ஸம்பிரதாயத்தார் வம்சத்தில் கௌசிக கோத்ரத்தில் பிறந்த அடியேனுக்கு இம் மஹான் இத்தனை தடவைதான் இன்னின்னவிதமாய் திவ்யதரிசனம் தந்திருக்கிறார் என்று எடுத்துரைக்க முடியாது. நான் ஒரு சமயம் தரித்திரத்திலாழ்ந்திருந்தபோது ஸ்ரீஸ்துதிசாதித்தருளிய பாதுகாஸஹஸ்ரகர்த்தா கவிதார்க்கிக ஸிம்மம் என் கனவில் தேஜோமயமாய் பளபளவெனும் பொன் மேனியுடன் திவ்யத்வாதச புண்ட்ரத்துடன் தோன்றி "ஸ்ரீஸ்துதியை ஆறுமாதம் பாராயணம்

பண்ணினால் உன்வறுமை நீங்கும்" என்று அருளினார். அவர் நியமனப்படி ஸ்ரீஸ்துதியை பக்திச்ரத்தையுடன் படனம்பண்ணி பலனடைந்தேன். இப்போதும் பிரதிதினமும் மூன்று தடவை அந்த திவ்யஸ்தோத்திரத்தை ஸேவித்து வருகிறேன். இவ ரருளால்தான் இச்சிறுநூல் எழுதும் எண்ணம் உதித்ததென்று எண்ண இடமிருக்கிறது. ஸ்ரீமந்நிகமாந்த தேசிகனருளே அருள். வேதாந்ததேசிகஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே. அடியேனிட குருமுகமாய், ஸ்ரீமதாண்டவன் ரங்கநாத மஹாதேசிகன் மூல மாய் ஆத்மஸமர்ப்பணம் ப்ரபத்தி பண்ணச்செய்த இம் மஹாசார் யார் தன்னருளால் (மற்றெவ்விதத்திலும் அர்ஹதை அற்ற) அடி யேனை தாயார்மூலம் சரணாகத வத்ஸலனுடைய திருவடித்தாமரை களில் சேர்த்து முக்திபெறச் செய்வாரென்று திண்ணமாய் எண்ணி ஸதா கைகூப்பித் தலைவணங்கி பிரார்த்திக்கிறேன்.

13. இவ்வளவிலும் நின்றவா நில்லாநெஞ்சினையுடையவனாயி ருக்கிறேன். என் மனது எப்படி மாறுமோ என்று பயமிருப்பினும் கூடியமட்டில் 'தெளிந்து பெருமாள் ஸேவையில் ஈடுபடுகிறேன். என்னைத் தன் ஸன்னிதிக்கு வரவழைத்து ஸேவை தந்தது அன் றியில் தானே எழுந்தருளி எனக்கு பலதரம் கனவில் திவ்விய தரிசனம் அருளிய திருவள்ளூர் ஸ்ரீ கனகவல்லீ ஸமேத வீர ராகவரை இப்போதும் எப்போதும் ஸேவிக்கிறேன். மாயம் செய் யேல் என்னையே என பிரார்த்தித்து எதற்கும் அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே என்று பெரிய பெருமாளிடம் விண்ணப்பிக்கிறேன். பலவித உலக ஆசை நோயேபட்டொழிந்தேன் நுன்னைக் காண்பதோர் ஆசை யினால் நாயேன் வந்தடைந்தேன் நல்கி என்னை யாட்கொண் டருளே" என திருவேங்கடமுடையானைப் பிரார்த்திக்கிறேன். முக்திதரும் நகரமேழதனுள் முக்கியமாம் கச்சிதன்னில் உறையும் பெருந்தேவி நாயக பேரருளாளர் ஸ்ரீ வரதனை தேவராஜ! தயாஸிந்தோ! தேவதேவ! ஜகத்பதே! எனதப்பனே! உன் னுடைய அளவற்ற கருணையினால் 33-வருஷ வைசாக. உத்ஸவ

கருடஸேவை தந்தாப்போல் இன்னமும் உன் கடாக்ஷம் குளிர்ந்த வாடையாலும் அமிர்தத்தாலும் அடியேனைக் குளிரக் குளிப்பாட்டும். மனதிற்கு நிம்மதி தந்து உன்னையல்லாமல் மற்றொன்றும் வேண்டா வரந்தந்து எனக்கு ஸர்வ மங்களமுமுண்டாக ஆசீர்வதித்து இந்நூலை அநுக்ரஹிக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

14. தமிழ்க் கவியரசு கம்பரையும், ஹிந்திக் கவி ச்ரேஷ்ட துளசிதாஸரையும், ஸ்ரீராம பக்த சிகாமணி தியாக ப்ரஹ்மத்தையும் மனமுவந்து ஸேவிக்கிறேன். இவர்களிட கிரந்தங்களை ஸேவிப்பதனல் எனக்குண்டான ஆனந்தத்தைச் சொல்லியேமுடியாது.சிற்சில சமயங்களில் கம்பராமாயணத்தையும், துளசிதாஸருடைய ஸ்ரீராம சரிதமானஸத்தையும் படிக்கும்போது பரவசமாய் எல்லாம் என் முன்னே நிகழ்கிறுப்போலவே தோன்றிவிடுகிறது. அந்த அதிசய அநுபவத்தை அயலாருக்கு அறிவிக்க இயலாது. வால்மீகியையும், இவர்களையும், இதர ராமபக்தர்கள் யாவரையும் மனமுவந்து ஸேவித்து எல்லாரும் வாருங்கள் இப்பல இன்பக் கடல்களில் அமிர்தத்தை பருகுங்கள் என அழைக்கிறேன்.

15. முன்னறிவதைப்பற்றி பேசும்போது எல்லோரையும் காட்டலும் ச்ரேஷ்ட தமிழ் மஹாகவி சுப்ரமண்ய பாரதியாருக்கு டிலைமை ஸ்தானம் தரவேணும். ஜோஸ்யம் முதலிய ஸஹாயமே இல்லாமல் வரப்போவதை தீர்க்கதரிசியாக உணர்ந்தவர் அம்மஹானே. அவரை லோகமே புகழ்கிறது. தமிழுக்கு அவர்செய்த பெரு நன்மை சொல்லி முடியாது. தமிழரல்லாதவர்கள் அவருடைய பேரன்பை அறியமுடியாது. அவருடைய கவிகளை நல்ல வழியில் இதர பாஷைகளில் எல்லாம் மொழி பெயர்த்தால் நன்மை உண்டாகும்.

கடைசியாய் துளசிதாஸ் அருளியிருக்கிறபடி மனுஷ்யனுடைய செய்கைகளைக் கவரக்கூடிய எல்லா சக்திகளையும் தெய்வ தேவாதிகளையும் எனையாளும் ஆவியையும் பக்த பாகவதர்களையும், ஆனவாள் ஆகாதவாள் நடுநிலைமையுள்ளவாள் எல்லாரையும் இந்நூலுக்கும் எனக்கும் ஸர்வ மங்களமுமுண்டாக ஆசீர்வதிக்க வணங்கி ஸேவித்து பிரார்த்திக்கிறேன்.

Sri Ramajayam.

Sreemathay Hayagreevaya Namaha.

# SRI RAMAYANA JYOTHISHADI

## FOREWORD

BY

Sreeman Sir, S. VARADACHARIAR, B.A., B.L.,

*Retired Judge, (Sometime Chief Justice)*

*Federal Court of India.*

In this interesting booklet, the author has essayed to bring together all the information in the Ramayana bearing on the practice of "prediction" as it obtained in ancient times. The information has been grouped and discussed under four main heads *Jyothisha,* (Astrology proper) Samudrika Lakshana (Physionomy), Omens and dreams. Under the head *Jyothisha,* the indications derived from Jataka (Horoscope), Gochara (Periodical movements of the Grahas) and Muhurtha (the time when an event takes place or is to take place) are discussed as sub-heads. The Ramayana of Valmiki is taken as the basis for the study but materials from the works of Kamban and Tulasidas have been now and then taken notice of. Explaining the the difference in significance between *Jyothisha* and the interpretations of omens and dreams, the author observes that omens and dreams are not to be understood as *influencing* the course of events, but only as *indicating* what is going to happen. Even as regards the significance of Grahas, he poses the question whether an Avatar or incarnation of Divinity, which is deemed to be Omnipotent, not subject to the law of Karma, can become subject to planetary influences; but, as in the Rama Avatar, the Divinity was carefully kept in the background and Sri Ramachandra lived and acted only as a human being, the enquiry is pursued on this basis.

The author discusses at some length the positions of *Grahas*, in Sri Ramachandra's Horoscope as gatherable from Valmiki's description. He repudiates the suggestion that the relevant Slokas in the Ramayana may be later interpolations. He also combats the view that the description in the Ramayana as to five Grahas (including the Sun) being in the *Uchchasthana* (ascendant) at the time of Sri Rama's birth could not be correct. He maintains that Sri Rama was born in the month of *Mesha*, in *Navami Thithi*, under the Star *Punarvasu* and in the *Kataka Lagna*. He notes that no reference has been made to the position of Budha, (Mercury) and infers that perhaps not much importance was attached to it. Incidentally, he also gives some details about the horoscopes of the other three brothers and their bearing on some aspects of the lives of the brothers. Reference has been made, in passing, to the familiar gibe that even the great preceptor *Vasishta* so fixed the Muhurtham for Sri Rama's installation as *Yuvaraja*, that it proved wholly inauspicious, leading to the exile of Rama and the death of his father. The author maintains that the relevant verses in the Ramayana show that the *muhurtham* was not fixed by *Vasishta*, but he merely acquiesced helplessly in the suggestion of King Dasaratha that the installation should take place the very next day.

In conclusion, the author avows that he is not well-versed in astrology and that his knowledge of Sanskrit is limited and in due humility he expresses his hope that the points dealt with in this book may, by reason of this very publication, become the subject of fuller discussion by persons better qualified than himself.

Madras,
22-10-55

(*Sd.*) **S. Varadachari.**

---

My most sincere gratefulness for the kind foreword.

**Humble Author.**

ஸ்ரீராமஜெயம்

# முன்னுரை

1. ஸ்ரீராம மஹிமை ஸர்வலோகாம்ருதம். ஸ்ரீராமாவதாரத்தையும் ஸீதா கல்யாணத்தையும் தேவர்கள் முதலியோர் கொண்டாடினார்கள் என்றறிகிறோம். ஸ்ரீராம சரிதம் சதகோடி ப்ரவிஸ்தரம் என்றார் ஒருவர். இப்போது கோடான கோடி ப்ரவிஸ்தரமாகி எண்ண இயலாதவவ்வளவு அதிகரித்துக்கொண்டே பெருகுகிறது. அதில் இந்நூல் ஒரு திவலையிலும் சிறியது.

2. ஸ்ரீராம பக்தி ப்ரவாகம் ஸ்ரீராம மஹாபர்வதத்தில் உற்பத்தியாய் ப்ரவஹித்துக் கொண்டிருந்த உபநதிகளைத் திரட்டி ஸ்ரீராமாயண ப்ரதம பெருநதியாக வால்மீகி மஹரிஷி ஸ்ருஷ்டித்தார். அதன் வெள்ளம் பெருகி **கம்பராமாயணம், துளசிதாஸ் ராமாயணம்**, வங்காள ராமாயணம் முதலிய பல கிளைகளாகி ஸ்ரீராமபக்தி மஹா பாற்கடலில் ப்ரவஹித்தன. இன்னம் பல கிளைகள் தோன்றி பாய்ந்துக்கொண்டே இருக்கின்றன. எல்லா காலத்திற்கும் அவ்வெள்ளம் பாயவும் செய்யும். இவையல்லாமல் ஸ்ரீராம சரிதத்தைப் பாடினவர்களும் எழுதியவர்களும் ஸ்ரீராமபக்தி பண்ணுபவர்களும் கோடான கோடியர். **ஸ்ரீ தியாகப்ரஹ்மம்** ராம பக்தியிலாழ்ந்து பரவசமாகி அமிர்தசாரமாக இன்னிசைபாடி ஆகாசத்திலிருந்தே பொழிந்து நிரப்பினாற்போல் கான மழை வெள்ளப் பெருக்கிட்டுவிட்டார். பக்திக்குக் குறிப்பிட்ட மார்க்கமென்பது ஒன்றில்லையன்றோ. பக்திக்குப் பாட்டு எல்லா உபாயங்களிலும் மேலானதன்றோ. தியாகராஜ கீர்த்தனைகளை அர்த்தம் தெரியாதவர்கள் கேட்டால் கூட, இன்னிசையினாலேயே, பாஷை தெரியாதவர்களுக்குக்கூட ஆனந்தம் தருகின்றனவென்றால் அர்த்த

முன்தெரிந்து பக்தியிலும் ஈடுபட்டு, சங்கீத வித்வான்கள் கானஞ் செய்யவும் கேட்டால் உண்டாகும் பேரின்பத்திற்கு எதைத்தான் ஒப்பிடமுடியும்? மலர்த்தடக்கையால் தத்துவ அமுதை அள்ளி ஞன் எனக் கண்களால் அருந்தினன் அளியோன் என விதுரன் ஸ்ரீகிருஷ்ண பகவானை அநுபவித்தபடி ஸ்ரீராமவமுதை செவிக ளாலும் மனதாலும் அருந்தி ஆனந்தமநுபவியாதவன் கூட இருக்க முடியுமோ? பாடப்பாட ருசியல்லவோ!

3. லக்ஷோபலக்ஷ மார்க்கங்களில் இன்னிசையால் பக்தியைப் பரப்புவது ச்லாக்கியமான வழி. மராமராவென்று தொடங்கி, ராம ராமவாகி ஜபம் பண்ணியதாலேயே, வெகு சிறந்த நற்பலன் சித்தித்து ஸ்ரீ வால்மீகி பகவான் ஸ்ரீமத் ராமாயண ஆதிகாவ்யத் தையே பாடவில்லையா? தியான, ஜப தபங்கள் தொடங்கி எடுத்த தெல்லாம் பக்தி மார்க்கங்கள்தான். ஸ்ரீராமபக்தி ஊற்ருக சுரக்க ஆரம்பித்தால் நாளடைவில் பெருகி வெள்ளமாய் பாயும். ஸ்ரீராமா யணத்தைப் படித்தாலும் கேட்டாலும் சொன்னாலும் எந்தவிதமா யாகிலும் ஸ்ரீராமபக்தி பரவச் செய்தால் ப்ரமாதமான நற்பலன்கள் சொல்லி யிருக்கவில்லையா? பலன் எதுவும் எதிர்பாராமலே மஹான்கள் ஸ்ரீராமாயணத்திற்கு ப்ரபலமான வியாக்யானங்கள் செய்திருக்கிருர்கள். பெரியோர்கள் இன்னமும் எழுதிக்கொண் டிருக்கிருர்கள். இனியும் அற்புதமாய் எழுதச் செய்வார்கள். ஸ்ரீராமபக்தி பற்பல விதத்திலும் அளவிலாமலே பரவிக்கொண்டே வருகிறது. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என் கிறபடி ஸ்ரீராமபக்தி உலகளவு என்று கூடச் சொல்லலாமோ என ஆசை. ஒவ்வொரு காவ்யத்திலுமுள்ள உட்பொருள்களை ஊன்றிப் படிக்கப் படிக்கத்தான் அறியமுடியும். கம்பராமாயணத்தில் உள்ள அதிசயங்களை ஸ்ரீ. தி. ச., ஸ்ரீ பி. ஸ்ரீ., ஸ்ரீ S. ராஜகோபால் செட்டி முதலிய பெரியோர்கள் எழுதி வெளியிடுகிறவரை அவை இல்லா மலிருந்தனவா! பொன்னை சுரங்கத்திலிருந்து எடுத்து சுத்தப் படுத்திய பிறகுதானே தங்கமாகத் தெரிகிறது. ஸ்ரீ பி. ஸ்ரீ யின் சித்ர ராமாயண வியாக்யனங்களின் அற்புதத்தை மகிழ்ந்து ஆனந்

தப்படலாமே தவிர நாம் அநுபவிப்பதை பிறர் அறியும்படி எடுத்துரைக்க முடியாது. ஸ்ரீ ராஜாஜி தனிமுறையில் 'சக்ரவர்த்தித் திருமகன்' என்று தமிழிலும், மற்றபடி ராம கதையை ஆங்கிலத்திலும் அதிசயமாய் எழுதிக்கொண்டுவருகிறார். எத்தனை பேர்தான் எழுதவில்லை, மொழிபெயர்க்கவில்லை, அவர்களெல்லாம் ஸ்ரீ ராமாமுதத்தை வைக்கும் பாத்திரங்கள் ஸ்வர்ண, வெள்ளி பாத்திரங்கள். இச்சிறு நூலை எழுதுபவன் துணிந்து அதே அமிர்தத்தை மட்பாண்டத்தில் வைத்து இதுவும் அதே தெவிட்டாவமுது என்கிறான்.

4. இந்நூல் ஒரு புத்தப்புது முறையில் நூதனமாய் ஸ்ரீ ராமாயணத்தில் ஆராய்ச்சி செய்து விஷயங்களைத் திரட்டி எழுதப்பட்டது. இந்த முறையைக் கையாண்டு சுமார் 33-வருஷங்களுக்கு முன் சில வியாசங்கள் எழுதி ஒரு மாதாந்திர ஜோதிடப் பத்திரிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டது. ஒரு புது வழியில் எழுதினால் படிப்பவர்கள் எப்படி ஏற்பார்களோவென்று ஸந்தேஹித்தும் யாராவது எழுதி இருப்பார்கள் நமக்குத் தெரியவில்லை, இனியாவது யாராவது எழுதுவார்கள் என்று எண்ணியும் தொடர்ந்து எழுதப்பட்ட விஷயம் கைவிடப்பட்டது. இப்பால் இவ்வளவு வருஷங்களாகியும் ஒருவரும் இம்முறையில் நூலெழுதவில்லை என்று தெரிந்து, கைவிட்டதை எடுத்து தொடர்ந்து விஷயங்களைத் திரட்டி, சேர்த்து எழுதி இந்நூல் வெளியிடப்படுகிறது. ஒவ்வொன்றுக்கும் காண்டம், ஸர்க்கம் ச்லோகம் முதலிய ஆதாரத்துடன் சொல்லியிருக்கிறது. இது மற்ற விசேஷமில்லாவிடினும் அதிசயமான சமாசார போக்கிஷம். இதில் விரம்ப சங்கதிகள் இருக்கின்றன. அவைகளை சரியானபடி பயன்படுத்தக்கூடுமான ப்ரயத்னம் செய்யப்பட்டிருக்கிறது.

5. ஸ்ரீ ராமர் ஜாதகத்தில் 5-கிரகங்கள் உச்சமாயிருந்திருக்க முடியாதென்று சிலருடைய அபிப்பிராயமாயிருக்கிறது. மற்றவர்களிட, அதாவது 3-ப்ராதாக்களுடைய ஜாதகங்களில் ஐந்து கிரகங்கள் உச்சமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்நூலில் ஸ்ரீ ராமர்

ஜாதகத்தில் கூட, ஐந்து கிரகங்கள் உச்சமென்று ஆதார பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் அக்காலத்தில் நக்ஷத்திரங்களின் அதிதேவதைகளுக்கு வேத முக்யத்வம் கொடுக்கப்பட்டிருந்தது என்று எடுத்துக்காட்டியிருக்கிறது. ஸ்ரீராமருடையவும், ஸீதாதேவியிடமும் சாமுத்ரிகா லக்ஷணங்களும் அவைகளால் என்ன முன்னறிவிப்பு சூசிக்கப்பட்டிருக்கிறதென்றும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

6. இதில் வாசிப்பவர் விரும்புமளவு சொற்சுவையோ, இனிப்போ, காரசாரமோ தகுந்தபடி யிராமல் குறைவாயிருப்பினும் விஷயத்தின் விசேஷத்தை முன்னிட்டு ரசமன்னமானாலும் அன்புடன் அளிக்கப்பட்டால் இன்பந்தருவதுபோல் இதை ஸ்வாரஸ்யமாய் ஏற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கப்படுகிறது.

7. நல்லவயதில், கோணக் கோணவானாலும் கோவிந்தா என்று சொல்லிவந்தால் நேர் நேராக நாராயணா எனவரும் என்று, தொடங்கியது எப்படியோ நின்றுவிட்டது. இப்போது தான் முதிய வயதில் பிணியும் எதிர்பாராத மறதியும் மனது நிம்மதிக் குறைவும் உண்டான பின் ஆகுநாள் வந்து எடுத்த கருமம் கைகூடும் ஸமயம் வந்திருக்கிறது.

8. இந்நூலின் நோக்கம், ஸ்ரீராமாயண காலத்தில் முன்னறியும் விஷயமாய் என்னென்ன முறைகள் வழங்கிவந்தன. அவைகளை யறிந்து ஜோதிஷ ஞானத்தை விருத்திசெய்து ஸ்ரீராமபக்தியையும் பெருக்கலாமென்பதும் இதை அடிப்படையாகக் கொண்டு அறிஞர் யாராவது ருசிக்கத் தக்கதாய் சாஸ்திரோக்தமாய் விஸ்தரித்து எழுதுவார்கள் என்ற எண்ணம். அதனால் இதை சங்கிரகமாய் எவ்வளவு இந்தத் தேதிவ்ரையதாக்கக்கூடுமோ அவ்வளவுஞ் செய்யப்பட்டிருக்கிறது. கால நிர்ணய ஆராய்ச்சியாளர்கள், வான சாஸ்திர கணித நிபுணர்கள் ஜோதிஷ விஷயமாய் எவ்வளவோ எழுதியிருக்கிறார்கள். அவைகளில் புகுந்து நமக்கு எட்டியதை

ஏதாவது சொல்லலாமென்றால் வெள்ளத்தில் இறங்கியமாதிரி யாகும். வாசிப்பவர்களுக்கு கொஞ்சநஞ்சம் ஸ்வாரஸ்யமிருப்பது கூட கலவரத்தில் போய்விடுமென்று அஞ்சி, விஷயங்களை விளக்க மாய் சுருக்கமாய் சொல்லக்கூடியவரை தெளிவாய் எழுதப்பட் டிருக்கிறது.

9. இந்நூலை அச்சிட்டு ப்ரசுரிக்க பற்பல ப்ரயத்தனங்கள் செய்யப்பட்டன. அவைகளில் ஒன்று இதை தஞ்சாவூர் மஹா ராஜா ஸர்போஜி ஸரஸ்வதி மஹால் நூல் நிலயத்திற்கு அனுப்பி யது. அம்மாபெரும் நூல் நிலையத்தார் இதில் மதிப்புக்குரிய விஷயங்களிருப்பதாயும் இது பிரசுரிக்கத்தக்கதென்றும் மதிப் புரை தந்தது இதை எழுதுபவனிட தன்னம்பிக்கைக் குறைவை ஒருவாறு நீக்கியதென்றே சொல்லலாம். மிகவும் குறைக்கவாவது செய்ததென்பதில் ஸந்தேஹமே இல்லை. அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

10. இது நன்றாய் அமைந்திருக்கிறது. இதை வாசிப்பவர்கள் இதன் அருமையைப் பாராட்டுவார்கள் என்று நம்பப்படுகிறது. ஒரு நூலாசிரியராக இருக்க விரும்பி முன் வருபவர் சுய நம்பிக் கைக் குறைவானவராய் இருக்கக்கூடாதென்பார்கள். அப்படிச் சொல்பவர்களில் இதை எழுதுபவருடைய அன்பார்ந்த தமயனார் ஒருவர். அப்படியிருந்தும் இவருக்கு தன் சாமர்த்தியத்தில் நம் பகம் குறைவாகவே இருந்து வந்தது. நூலைப் பூர்த்தியாய் எழுதிய பிறகு பின்னோக்கிப் பார்க்குங்கால், விஷயமஹிமை இருந்தால் ஒருவன் மிக சமர்த்தனாக இருக்க வேண்டியதவசியமில்லை என் றும் இதில் இதுவரை எடுத்துச் சொல்லப்படாத விஷயங்கள் நிரம்ப இருக்கின்றனவென்றும் தன்னம்பிக்கை அவ்வளவு குறை வாக விருக்கக்காரணமில்லை என்றும் ஏற்படுகிறது. ஆகவே இச் சிறிய ஸ்ரீராம சரிதத்தைப் படிப்பவர்கள் இதிலுள்ள நல்லதையெல் லாம், [ஜலத்திலிருந்து பாலைப் பிரித்து எடுத்துக்கொள்ளும் அன் னம்போல்] எடுத்துக்கொண்டு, நல்லதல்லாததைத் தள்ளிவிட வேணுமாய்ப் பிரார்த்திக்கப்படுகிறது.

**11.** இந்நூல் பூர்த்தியாவதற்கு இதை எழுதுபவருக்கு ஸஹாயம் அளித்தவர்கள் எல்லோருக்கும் நன்றி. (a) முக்கியமாய் இவன் காயலாவாய் எழுத சக்தியற்றுக் கிடந்தபோது இதில் பெரும்பான்மையான பாகத்தை சுத்தமாய் எழுதியதற்கு இவனிட தமையன் மைந்தன் ஸ்ரீ பா. சுந்திரத்திற்கு நன்றி.

(b) இந்த நூலைத் தயாரிக்க நூல் நிலயங்களை உபயோகிக்க அநுமதித்தவர்கள் எல்லோருக்கும் நன்றி. அதில் குறிப்பாய் சொல்லப்படவேண்டியவர் பரம பக்தர் Retired Assistant Engineer Sri P. A. ஸ்ரீநிவாஸாசாரியர்.

(c) இந்நூலை எழுதுபவனின் தேக நிலையை நினைத்து சென்ற டிசம்பர் மாத ஆரம்பத்திலிருந்து இதை சீக்கிரமாய் அச்சிட்டு பிரசுரஞ்செய்ய எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. இவனிருக்கும்போதே இது வெளிவரவேணுமே என்று பயந்து மனந் தளர்ந்து இருக்கையிலும் இதற்காக சங்கதிகளை அச்சுக்கு போகும் தேதிவரை சரியாய் சேகரிக்கவேணு மென்கிற உத்தேசத்துடன் பெரிய நூல் நிலயங்களுக்கு போய்ப் படித்துக்கொண்டிருக்கையில் ஒரு தினம் G. O. Mss. Libraryக்குப் போயிருந்தபோது Curator ஸ்ரீ T. Chandrasekharan, M.A., L.T., அவர்களை தரிசித்துப் பேசியபோது அவர் கிருபை கூர்ந்து ஊக்கமளித்து இந்த புஸ்தகம் ஒரு ஆச்சரியமான நூதன முறையில் வால்மீகி, கம்பர், துளசிதாஸ் மூன்று ராமாயணங்களிலுள்ளவைகளையும் எடுத்து எழுதப்பட்டிருக்கிறபடியால் இது எவ்வளவு சீக்கிரம் அச்சிட்டு வெளிவரக்கூடுமோ அவ்வளவு சீக்கிரமாய் பிரசுரமாக தான் சிபார்சு செய்வதாய் University Printers Rathnam Press அவர்களிடம் அழைத்துச் சென்று ஏற்பாடு செய்துக்கொள்ளச் சொன்னார். அந்த பேருதவி செய்ததற்கு அப்பெரியாருக்கு என் மனமார்ந்த வந்தனமும் நன்றியும் நேரில் செலுத்தப்பட்டதுடன் இப்போதும் இக்குறிப்பின் மூலம் வெளிப்படையாய் தெரிவிக்கப் படுகின்றன. அன்னாருடைய உபகாரத்தால் உண்டான மகிழ்ச்சி அளவிடமுடியாதது.

(d) ஸ்ரீ ரத்னம் அச்சகத்தார் அவர்களிட பற்பல வேலைகளுக் கிடையே இச்சிறிய நூலை த்வரையாய் நன்றாய் அச்சிட்டுக் கொடுத்ததற்கு அவர்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனமும் நன்றியும். புஸ்தகம் அச்சிடக்கொடுப்பது Proof பார்ப்பது இவைகள் தெரியாததினால் முதலில் கஷ்டப்பட்டது. பின்னால் நிறுத்தல் குறிகள். (punctuation marks) முதலாக எழுத்துப் பிழைகள் பதப்பிழைகள் முதலியவைகள் சமாளிக்கப்பட்டன. முன் பகுதியில் பிழைகள் நிரம்ப விழுந்திருக்கின்றன. பின்னிட்டு ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீமஹாபாரதம் ஸ்ரீபாகவதம், பாரதஸாரம் முதலியவைகளை கவிகளின் ச்லோகங்களைக் கொண்டே சுருக்கமாய் எழுதிய பண்டிட் ஸ்ரீ A. M. ஸ்ரீநிவாஸாசாரியர் திருவல்லிக்கேணி, Proof பார்க்க ஆரம்பித்தபின் பிழைகள் மிகவும் குறைந்தன. அவருக்கும் என் வந்தனமும் நன்றியும்.

12. இந் நூலை எழுதி பெருமை பெறவேணுமென்றாவது, பிரசுரஞ்செய்துவிற்றுலாபமடையவேணுமென்றாவதுகருத்தில்லை, 33 வருஷங்களாக மறைந்து கிடந்த குறிப்புகளைத் தேடிஎடுத்து ஒன்று சேர்த்து பக்தர்களுக்கு உபயோகமாகி உலகில் ஜோதிஷ ஞானமும் ஸ்ரீராம பக்தியும் அளவின்றி விருத்தியாகி பரவவேணு மென்கிற ஒரே உத்தேசந்தான். தொழிலிலேயே ஈடுபட்டிருந்த வரை இதன் பேரில் ஞாபகம் போகவில்லை. பகவானருளால் இப்போதுதான் இதைப் பூர்த்தியாக்கி அச்சிட வேளை வந்தது. செலவானதில் ஒரு பகுதி மட்டும் இந்த நூதன புத்தகத்தின் விற் பனையால் வரக்கூடியபடி ஆஸக்தியுள்ள எல்லாருக்கும் கூடிய மட்டில் எளிதில் புஸ்தகம் கிடைக்கும்படி குறைந்த விலை நிர் ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திகர்கள் அநேகர் சீக்கிரம் வாங்கிப் படிப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

13. இது புதுவழி நூலானதினால் இதன் பெருமையை சீக் கிரத்தில் அறிய முடியாமலிருக்கலாம். ஊன்றிப் படித்து சிந்தித் தால் இதன் மஹிமை வெளியாகும். இதில் சங்கதிகள் புதைந்து

கிடக்கின்றன. வெளிப்படுத்தினால் நிதி கிடைக்கும். பேரறிஞர்களுக்கு இவன் இதிலிருப்பதாகச்சொல்வதைவிட பன்மடங்கு திவ்யப் பொருளகப்படும். மற்றவைகளில்லாவிடினும் இது ஒரு பக்தி மார்க்க சுருக்க நூலரயாவது, வழி காட்டியாகவாவது, Digest or Guide ஆகவாவது, பயன்படுவது திண்ணம்.

14. இதைப் படிப்பவர்களுக்கு, ஸகலவித ச்ரேயஸ்களும் ஸ்ரீராமபிரானின் ஸம்பூர்ண அநுக்ரஹமும் ஸித்திக்க பிரார்த்திக்கப்படுகிறது.

लोकाः समस्ताः सुखिनो भवन्तु

समस्तसन्मङ्गलानि सन्तु

# T. M. S. S. M. LIBRARY, TANJORE.

*From*

**S. GOPALAN, B. A., B. L.,**
Member and Hony, Secretary,
Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library,
TANJORE.

*To*

Sri P. Gopalaratnam Aiyangar Avl., B.A.,
Pleder, Ranipet.
2/31, Edward Elliot's Rd.,
MYLAPORE, MADRAS. 4.

---

R. C. No: 56/55-56. Dated 18-4-1955

Enc.

Sir,

Ref:- Your letter ..

**We went through the manuscript you sent us. It contains valuable matter and is worth publishing.**

(Sd.) S. GOPALAN,
Hon. Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

(True extract)

# பொருளடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| முகவுரை - ஜோஸ்யம் ... | 1 |
| ஸ்ரீராமாயண காலத்தில் இருந்த சில முறைகள் ... | 2 |
| திரிகாலஜ்ஞானிகள் | |
| விச்ரவஸ் கைகசி - வேளை கெட்டதானதினால் பிரஜைகள் துஷ்டர்கள். ... | 2 |
| வரம் - கடைசி ஸந்ததி தர்மாத்மா ... | 3 |
| ஜோதிஷத்தில் அநேக பிரிவுகள். ... | 3 |
| **1. ஜாதகம்** ... | 4 |
| ஸ்ரீராமர், பரதர், லக்ஷ்மணர் சத்ருக்நர் ஜனன வேளை | 5 |
| அயன ருது மாத திதி நக்ஷத்ரங்கள் கிரகங்கள் 5-உச்சம் ... | 5 |
| பூரா அவதாரமும் - நவமி திதி ... | 6 |
| புனர்வசு நக்ஷத்திரம் ... | 7 |
| ராசி சக்கரம் ... | 8 |
| கம்பராமாயணப்படி ஸ்ரீராமர் பரதர் ஜனன வேளை | 9 |
| இலக்ஷ்மணர் சத்ருக்நர் பிறந்த காலம் ... | 10 |
| கம்பர் - ஸ்ரீராமர் ஜாதக செய்யுள் ... | 10 |
| ஜாதக பலன்கள் ... | 11 |
| ஒன்பதின் மகிமை ... | 16 |
| நக்ஷத்ர அதிதேவதை ... | 17–20 |
| புனர்வசு - அமிர்தாதி யோகங்களில் அவயோகமில்லை. | 20 |
| விட்டதை தொடங்குவது ... | 21 |
| ஸ்வோச்சஸம்ஸ்தேஷு பஞ்சஸு ஸ்ரீராமர் ஜாதகத்தில்கூட 5-கிரகங்கள் உச்சம் ... | 21–27 |

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உச்சனே உச்சனில் பார்ப்பது | ... | 28 |
| லக்னங்கள் கடக லக்ன மஹிமை | ... | 31–33 |
| கணித பாகம் | ... | 33–45 |
| **2. கோசாரம்** | ... | **46** |
| தசரதருக்கு க்ரூரவேளை கெட்ட சகுனங்கள் | ... | 47 |
| தசரதருடைய நக்ஷத்திரம் பாபக் கிரகங்களால் பீடிக்கப்பட்டது | ... | 47 |
| ஸ்ரீராமர் வயது ஊகை | ... | 49, 50 |
| ஸ்ரீராமருக்கும் வேளை கெட்டது | ... | 50 |
| ஜன்மத்தில் குரு சாதாரண வசனங்களை ஸ்ரீராமருக்கு பொருந்தவைக்கப்படாது | ... | 51 |
| வெறுங்கண்ணுல் ஆகாசத்தைப் பார்க்கிற பழக்க மறைவு | ... | 54, 55 |
| **3. முகூர்த்தம்** | ... | **57** |
| பகல் இரவுகளை ஒவ்வொன்றையும் 15-பகுதிகளாய் பிரித்தது | ... | 57 |
| நக்ஷத்திரம் முக்கியம் | ... | 59 |
| அபிஜித் | ... | 59 |
| நல்ல தினம் நல்ல நக்ஷத்ர ஆதினம் ஆரம்பம் | ... | 60 |
| கல்யாண முகூர்த்தம் | ... | 61 |
| இளவரசு பட்டாபிஷேகத்திற்கு முகூர்த்தம் | ... | 62 |
| கிருகப்ரவேச முகூர்த்தங்கள் - ஸ்ரீராமர் வனத்தில் பர்ணசாலே அமைத்ததற்கு | ... | 62 |
| பரதர் கூடாரங்கள் | ... | 63 |
| ஸ்ரீராமர் யுத்தத்திற்கு புறப்பட்ட முகூர்த்தம் | ... | 63 |
| இளவரசு பட்டாபிஷேகத்திற்கு தசரதர் முகூர்த்தம் நிர்ணயித்தார் | ... | 66 |

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| வஸிஷ்டர்பால் வழுவில்லை | ... | 67–69 |
| யோகம் விஷ்கம்பாதி | ... | 69 |
| முகூர்த்த காலம் என்பது சற்று நேரம் | ... | 71 |
| நிமிஷம் கண் கொட்டுகிறபொழுது. க்ஷணமும் அப்படியே, ஒரு மணியில் 60-ல் ஒருபாகமல்ல. | | 73–74 |
| அதற்கு எப்படி நிமிஷம் என்று பேராயிற்றோ தெரியவில்லை. | ... | 74 |
| **4. கிரக நக்ஷத்திர ஸம்பந்தாதிகள்.** | ... | 75 |
| ரோஹிணிக்கும் சந்திரனுக்கும் ரொம்ப இஷ்டம் இணைபிரியாதிருத்தல் | ... | 76 |
| அங்காரகனுக்கும், ரோஹிணிக்கும் நிரம்ப ஆகாது | ... | 76–77 |
| புதனுக்கும் ரோஹிணிக்கும்கூட ஆகாது | ... | 77 |
| கேதுவுக்கும் ரோஹிணிக்கும்கூட பகை | ... | 78 |
| ரோஹிணியையும் சந்திரனையும் சேர்த்துவைப்பது நல்லது | ... | 78, 79 |
| புனர்வசு, புஷ்யம், சித்திரைகளில் வசிப்பது சந்திரனுக்கு இன்பம் | ... | 80 |
| ராகு கேதுக்கள் - சூரிய சந்திர கிரஹணங்கள் | ... | 80–81 |
| கிரகங்களுக்குள் பகை - அங்காரகனுக்கும் புதனுக்கும் யுத்தம். | ... | 82 |
| **5. ஸாமுத்ரிகா லக்ஷணம்** | ... | 84 |
| பாலகாண்டம் முதல் ஸர்க்கத்தில் ஸ்ரீராமரின் சில லக்ஷணங்கள் | ... | 84 |
| ஸ்ரீ ராமருடைய ஸாமுத்ரிகா லக்ஷணங்கள், ஸுந்தர காண்டம் 35 ஸர்க்கம் 16-21 சு. | | |
| ஸ்ரீராமர் லக்ஷணங்கள் போலவே லக்ஷ்மணருடையவும் | | 86 |

விஷயம் பக்கம்

ஸ்ரீராமரின் ஸாமுத்ரிகா லக்ஷண விளக்கம் ... 87-92
ஷை கம்பராமாயணப்படி ... 92, 93
ஸீதாதேவியின் ஸாமுத்ரிகா லக்ஷணங்கள் ... 94
துளசிதாஸர் ஸ்ரீராமரையும் ஸீதையும் வருணிப்பதைப்பற்றி ப்ரஸ்தாவம் ... 100
ஸ்ரீராமரின் திருவடிகளில் 48-சுப ரேகைகள் ... 100
பார்வதியின் சுபலக்ஷணங்களும் கைரேகையும் ... 101
விறகு வெட்டி ராஜாவானதற்கு தாடைகளில் ... 102
சங்குசக்கரம்.

6. **சகுனங்கள்.** ... 104

சகுனத்தால் ஆவது ஆகாதது என்று முன் காட்டுகிறது ... 106
மஹான்கள் கெட்டதை நிவர்த்திக்கக்கூடும் ... 106
**தேகத்தில் தோன்றும் குறிகள்** ... 107
புருஷர்களுக்கு வலதுகண், தோள், தொடை துடிப்பது நல்லது. ஸ்திரீகளுக்கு இடதுகண், தோள், தொடை துடிப்பது நல்லது ... 107
ஸ்ரீராமருக்கும், ஸீதைக்கும் கல்யாணத்திற்கு முன் சுபசகுனங்கள் ... 107
ஸ்ரீராமருக்கு கரதூஷணவதத்திற்கு முன்னும் யுத்தத்திற்குப்புறப்பட்டபோதும் ராவணனைத் தாக்குவதற்கு முன்னும் சகுனங்கள் ... 110
ஆகாயத்தில் பூமியில் தோற்றங்கள் சப்தங்கள் ... 111
ஜீவ ஜந்துக்களால் சகுனம் ... 112
ஒரேஸமயத்தில் இரண்டுவித சகுனங்கள் ... 112
துளசிதாஸ்படி கைகேயிக்கும் பரதனுக்கும் கெட்ட சகுனங்கள் ... 113

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| பரதருக்கு ஸ்ரீராமர் வநவாஸ முடிவில் நல்ல சகுனம் | ... | 113 |
| வட இந்தியாவில் சகுனங்கள். | ... | 113 |
| ஸ்ரீராமர் கல்யாணத்திற்கு கோலம் வந்தபோது நல்லவை | ... | 113 |
| தும்மல் - இடதுபுறம் - நல்லது | ... | 114 |
| ஸ்ரீ ராமருக்கு யுத்தம் வருவதைக் காட்ட கெட்ட சகுனம், மால்யவானுக்குக் கெட்ட சகுனம் | ... | 114 |
| யஜ்ஞ யாகாதிகளில் ஸம்பவம் | ... | 114, 115 |
| இந்திரஜித் அபிசார ஓமம். | ... | 115 |
| **7. கனவு.** | ... | 116 |
| பரதர் கனா - கெட்டது | ... | 117 |
| கருப்பு சிஷித்தம் | ... | 118 |
| திரிசடை கனவு | ... | 118 |
| ஸ்ரீராமருக்கும் ஸீதைக்கும் - சுபம் வெற்றி | ... | 118, 119 |
| ராவணாதிகளுக்கு கெட்டதை அழிவைக் காட்டுபவை | ... | 120 |
| விபீஷணருக்கு நல்லவை | ... | 121 |
| துளசிதாஸ் ராமாயணப்படி கைகேயிக்கு கெட்ட கனவு | ... | 121 |
| ஷை பரதருக்கும் துஸ்ஸ்வப்னம் | ... | 122 |
| **8. முன்னறிவிப்புக் கொண்டாட்டங்கள்.** | ... | 123 |
| ஜனனகாலத்திலும், ஸ்ரீராமலக்ஷ்மணர் யாகஸம் ரக்ஷணைக்கு விச்வாமித்ரருடன் புறப்பட்டபோதும், ஸீதாகல்யாணத்தின்போதும் | ... | 123,124 |
| கம்பர் 'வீடினர் அரக்கர்' என்று ஸ்பஷ்டமாய் தேவர்கள் கொண்டாடினதாக | ... | 125 |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| துளசிதாஸ்படி கொண்டாட்டங்கள். | ... 125 |

9. பத்ரம் தே.

| | |
|---|---|
| வரப்போவதை முன் காட்டுகிறதற்கு உபயோகப் படுத்தியது | ...127-132 |
| ஸ்ரீராமர் ஸீதை தம்பதிகளுக்கும், லக்ஷ்மணருக்கும் மட்டும் ரக்ஷை | ... ” |
| இதர உபயோகங்கள் - வாழ்த்துச்சொல் ஸமயோசிதம் வழங்கப்படுதல் | ... ” |
| ஜனகர் தசரதருக்கு - வஸிஷ்டருக்கு | ... ” |
| ஸீதைக்கு ராவணனும் விஜதையும் | ... ” |
| ஹநுமார் ஸீதைக்கு | ... ” |
| ஸீதை ஹநுமாருக்கு | ... ” |
| பரஹஸ்தன் ஹநுமாருக்கு | ... ” |
| ஸுக்ரீவன் ஸ்ரீராமருக்கு | ... ” |
| முடிவுரை | ... 133 |
| அபிஜித் நக்ஷத்திரமல்ல, முகூர்த்தம். | ... 136 |
| பாதுகை பேரால் பரதர் ஆண்டார் | ... 141-2 |
| மங்களம் | ... 144 |
| விளக்க உரை | ... 145 |
| மன்னிப்புக் குறிப்பு | ... 146 |

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பாதசத்ருக்ன ஹநுமத்ஸமேத ஸ்ரீராமாய நம:

# ஸ்ரீராமாயண ஜ்யோதிஷாதி

## முகவுரை (Introduction)

—※—

### ஜோஸ்யம்

ஜோஸ்யம் என்றால் வெகு பலருக்குத் தெம்பு. வரப்போவதை சாஸ்திர பூர்வமாய் முன்னடியாய் அறிந்து தெரிவிக்கும் என்கிற ஆவல். இந்த ஆசை தொன்றுதொட்டு இருந்து வந்ததாகவும், ஸ்ரீமத் ராமாயண காலத்திலும் இந்த சாஸ்திரம் வழங்கப் பட்டதாகவும் அதில் புருஷர்களைவிட ஸ்திரீகள் அதிகம் ஈடுபட்டதாகவும் ஏற்படுகிறது. புருஷர்கள் கெடுதல் வருவதாயிருந்தால் அதை முன்னறிந்து விலக்குவதற்காக ஜோஸ்யத்தை நாடியதாக ஏற்படு கிறது. மற்றப்படி புருஷர்கள் ஜோஸ்யத்தைக் கொண்டு வரப்போவதையெல்லாம் தெரிந்துக் கொள்ள முயன்றதாக ஸ்ரீமத் ராமாயணத்தில் இல்லை. நிகரற்ற உலகப் பற்றற்ற ஜனக மஹா ராஜாவின் ராணி, ஸீதையின் தாயார், பூமியிலுதித்த

ஜானகியின் ஸாமுத்ரிகா லக்ஷணங்களை சாஸ்திர மறிந்தவர்களுக்கு காண்பித்து பலனறிந்ததாக ஸீதா தேவியே சொல்லியிருக்கிறாள் என்றால் ஸாமான்யரும், பாமரரும் பல முறைகளாலும் வரப் போகுமவைகளை முன்னமே அறிய விரும்புவதில் வியப்பில்லை. எக்காலத்திலும் முன்னறிவிக்கும் எல்லா வழிகளிலும் ஜ்யோதிஷம் முக்யமானது.

**ஸ்ரீராமாயண காலத்திலிருந்த சில முறைகள்**

ஜ்யோதிஷம் என்பது ஜ்யோதிஸ் - வெளிச்சம் என்பதிலிருந்து வந்தது. ஞானவொளி, வானசாஸ் திரத்தை யறிந்து வரப்போவதை யுரைப்பது ஒரு மார்க்கம். முக்காலத்தையும் தானகப் பார்த்துச் சொல்வது ஒரு வழி. த்ரிகால ஜ்ஞானிகள் நடக்கப் போவதை திருஷ்டித்துச் சொன்னார்கள். [பால காண்டம் ஸர்க்கம்-9. ச்லோகம்-2.] அதில் ஒன்று ஸனத்குமாரர் தசரத சக்ரவர்த்திக்கு நான்கு புத்தி ரர்கள் அவதரிக்கப் போகிறார்கள் என்றது. [பா. கா. ஸ. 11. ச். 10.] அப்படியே ருஷ்யச்ருங்கரும் சொன் னர் [பா. கா. ஸ. 12, ச். 12]. இது முதல் முறை. உத்தர காண்டம் ஸ. 9. ச். 2-ல் விச்ரவசு கைகஸியின் எண் ணத்தை அவள் சொல்லாமலே அறிந்துகொண்டு அவள் அவரை அணுகிய வேளை கெட்டதாயிருந்த தனல் அவளுக்கு உண்டாகும் ஸந்ததிகள் துஷ்டர் களாய் இருப்பார்கள் என்றது. இது ஞானதிருஷ்டி யும் வேளையின் பலனும் கலந்தது. பிறகு அந்த ப்ரஹ்ம வாக்கைக் கேட்டு அவள் பயந்து நடுநடுங்கி அவரைப் ப்ரார்த்தித்ததன்பேரில் அவர் மனங் குளிர்ந்து பூர்ண சந்திரன் ரோஹிணியுடன் பேசு

வதுபோல் அவளுடைய கடைசி ஸந்ததி தர்மாத்மா வாய் ஸத்புத்திரனாய் இருப்பான் என்றதினால் வரம் கொடுத்ததாகிறது. இவை மகான்களுக்கு மாத்திரமே சாத்யமானவை. [கடைசியில் விளக்க உரையைப் பார்க்க.]

ஜ்யோதிஷம், ஸாமுத்ரிகா லக்ஷணம், சகுனம், சொப்பனம் முதலிய பல்வேறு வழிகளும் கைப்பற்றப்பட்டு வந்தன. பின்புள்ளவைகளெல்லாம் அசல் ஜோதிஷ மார்க்கங்களல்ல. ஜ்யோதிஷம் என்பது வான சாஸ்திரத்தை நன்கறிந்து நவக்கிரகங்கள் நக்ஷத்திரங்கள் யோகங்கள் முதலிய பற்பலவைகளைக்கொண்டு பலன் கூறுவது.

சாஸ்திரோக்தமான ஜோஸ்யம் வேதாங்கங்கள் ஆறினுள் ஒன்று என்பதும் எல்லா அங்கங்களுடனும் வேதந்தானே ஸ்ரீமத் ராமாயணமாக அவதரித்ததென்பதும் ஸ்ரீமத் ராமாயணத்திலேயே சொல்லப்பட்டிருப்பது பிரஸித்தமாய்த் தெரிந்த விஷயமே. இது ராமாயணத்தைப்போன்ற ஆதி இதிஹாஸத்தில் வரையப்பட்டிருப்பது ஸகஜமே.

## அநேகப் பிரிவு

ஜ்யோதிஷத்தில் அநேகப் பிரிவுகளுள. அதில் பிரதானமான சில மட்டுந்தான் ஸ்ரீமத் ராமாயணத்தில் உரைக்கப்பட்டிருக்கின்றன. ஜ்யோதிஷத்தில் வ்யுத்பன்னர் மட்டுந்தான் அவற்றை அறியவியலும் என்பதில்லை. ஜோஸ்ய ஞானமுடைய ஸாமான்யரும் அவைகளைத் தெரிந்துகொள்ளலாம். கூடிய மட்டில் அம்மாதிரியானவர் யாவரும் அறியும்படி இதில் வரையப்படும். இந்த விஷயங்களை, விவாதத்

திற்கு இடங்கொடுக்கும்படியான சங்கதிகளையும் எடுத்துச் சொல்லி விஸ்தரித்து எழுதினால் பெரிய கிரந்தங்கள் எழுதலாம் போலும். ஆயினும், சந்தர்ப்பத்திற்கேற்ப சிற்றறிவிற்கு விளங்கிய நிர்விவாதமான சில சங்கதிகளைத் தகுந்த பகுதிகளாகப் பிரித்து ஸ்ரீராமாயணத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்ட ஜாதக விஷயத்தையும், பிரஸ்தாவிக்கப்பட்டிருக்கிற கோசாரம்; முகூர்த்தம் முதலிய ஜ்யோதிஷ விஷயங்களையும், வரப்போவதை முன்னறியும் சம்பந்தமாய் வழங்கி வந்ததாக ஏற்படும் ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்திரம், சகுனம், கனவு முதலிய இதர விஷயங்களையும் இயன்றவளவு இதில் ஆராய்ந்து எடுத்துரைக்க விருப்பம். பிழை, அபிப்பிராய பேதங்களிருப்பினும் பொருத்தருளப் பிரார்த்திக்கப்படுகிறது.

ततो यज्ञे समाप्ते तु ऋतूनां षट् समत्ययुः ।
ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ ॥ ८ ॥

नक्षत्रेऽदितिदैवत्ये स्वोच्चसंस्थेषु पञ्चसु ।
ग्रहेषु कर्कटे लग्ने वाक्पताविन्दुना सह ॥ ९ ॥

प्रोद्यमाने जगन्नाथं सर्वलोकनमस्कृतम् ।
कौसल्याऽजनयद्रामं सर्वलक्षणसंयुतम् ॥ १० ॥

विष्णोरर्धं महाभागं पुत्रमैक्ष्वाकवर्धनम् ।
कौसल्या शुशुभे तेन पुत्रेणामिततेजसा ॥ ११ ॥

यथा वरेण देवानामदितिर्वज्रपाणिना ।
भरतो नाम कैकेय्यां जज्ञे सत्यपराक्रमः ॥ १२ ॥

साक्षाद्विष्णोश्चतुर्भागः सर्वैस्समुदितो गुणैः ।
पुष्ये जातस्तु भरतो मीनलग्ने प्रसन्नधीः ॥ १३ ॥

सार्पे जातौ च सौमित्री कुलीरेऽभ्युदिते रवौ ।
राज्ञः पुत्रा महात्मानश्चत्वारो जज्ञिरे पृथक् ॥ १४ ॥

गुणवन्तोऽनुरूपाश्च रुच्या प्रोष्ठपदोपमाः ।
जगुः कलं च गन्धर्वा ननृतुश्चाप्सरोगणाः ॥ १५ ॥

देवदुन्दुभयो नेदुः पुष्पवृष्टिश्च खाच्च्युता ।
उत्सवश्च महानासीदयोध्यायां जनाकुलः ॥ १६ ॥

रथ्याश्च जनसंबाधा नटनर्तकसंकुलाः ।
गायनैश्च विराविण्यो वादनैश्च तथापरैः ॥ १७ ॥

# 1. ஜாதகம்

1. ஜ்யோதிஷம் அபார சாஸ்திரமாயிருப்பினும் நம் நாட்டில் மட்டுமன்றி, இம்மாதிரி விஷயங்களில், முன்னால் நம்பிக்கையில்லாமலிருந்த மேல் நாட்டிலும் தற்போது அது ஒரு விஞ்ஞான சாஸ்திரமாகக் கருதப்பட்டு, மிக உன்னதவளவில் விருத்தியடைந்து வருவதாயிருந்தாலும், அதில் பிராதான்யமுள்ள அம்சம் தொன்றுதொட்டு வரும் ஜாதக பாவந்தான். ஸாதாரணமாக, ஜோஸ்யர் என்றால், ஜாதகம் பார்த்துப் பயன் சொல்பவர் என்பது அபிப்பிராயம். இதைப்பற்றித்தான் முதலில் ஸ்ரீராமாயணத்தில் வியக்தமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் அது விஷயமாய் சொல்லப்பட்டிருப்பதை எடுத்துரைத்து, அதனால் விளங்குவனவற்றை ஆராயப் புகுதல் முதல் வேலையாகும்.

2. வால்மீகி ராமாயணத்தில், பாலகாண்டம், ஜனன கட்டம் என்னும் 18-வது ஸர்க்கத்தில் ஸ்ரீராமரும், அவருடைய ப்ராதாக்கள் மூவரும் அவதரித்ததைப்பற்றி சில முக்கிய விஷயங்கள் ஸ்பஷ்டமாய் கூறப்பட்டிருக்கின்றன. அவர்களில் முதல்வர்

ஸ்ரீராமர்

**ஸ்ரீராமர்**, யஜ்ஞம் முடிந்தபின், 6-ருதுக்கள் **கழிந்ததும்**, பனிரண்டாவது மாதத்தில், சைத்ரத்தில், சுக்லபக்ஷ நவமியில், அதிதியை அதிதேவதையாகவுடைய நக்ஷத்திரத்தில் (அதாவது, புனர்வஸுவில்), ஐந்து கிரகங்கள் உச்சஸ்தானங்களில் இருக்கையில், குருவும் சந்திரனும் ஒன்றாயிருக்க (அதாவது, புனர்வஸு 4-ம் பாதத்தில்), கடக

லக்கினத்தில், (அபிஜித் முகூர்த்த வேளையில்), ஸர்வ லோகங்களாலும் நமஸ்கரிக்கப்படும் ஜகந்நாதரான வர் ஸர்வ லக்ஷணங்களுடன் இக்ஷ்வாகுநந்தநனுக கௌஸல்யா தேவியிடம் அவதரித்தார். இரண்டாவ தாக, சத்திய பராக்கிரமமுடைய பரதர் கைகேயியி

பரதர்

னிடம் புஷ்ய நக்ஷத்திரத்தில், (உஷக் காலத்தில்), மீன லக்னத்தில் தோன்றி னர். பிறகு ஸுமித்ராதேவி ஆச்லேஷ நக்ஷத்திரத்

லக்ஷ்மண சத்ருக்னர்

தில், கடக லக்னத்தில், சூர்யன் வலுவாய் எழுகையில், லக்ஷ்மண, சத்ருக்னர் களைப் பெற்றாள். இவ்வரலாற்றிலிருந்து, நக்ஷத்திர மாறுதல்களும், லக்ன மாறுதல்களும் சொன்ன கிரந்த கர்த்தா, திதி மாறுதலடைந்த தாகச் சொல்லாதது கவனிக்கத்தக்கது. பூர்ண அவ தாரமும் நவமி திதியிலேயே என்பது திண்ணம். சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்தில் மூன்று நக்ஷத்திரங் களில் சஞ்சரித்திருக்கிறார். ஆகவே, கிரக மாறுதலு மில்லை. நால்வரும் பூரட்டாதி, உத்திரட்டாதி நக்ஷத் திரங்கள்போலப் பிரகாசித்தார்கள் [பா. கா.-ஸ. 18. ச். 15½]. அதாவது, ஒரே சமமான ஒளியுடைய வர்கள்.

3. இப்போது ஜாதகத்தை வரைந்து பார்ப் போம். உச்ச கிரகங்கள் ஐந்தினுள் குரு ஸ்பஷ்ட மாகச் சொல்லப்பட்டிருக்கிறார். மற்றவர்கள் சனி, செவ்வாய், சுக்கிரன், சூரியனாக விருக்கவேண்டு மென்று ஏற்படுகின்றது. இவைபோக, உச்சமாய் இருக்கக்கூடிய கிரகங்கள் இரண்டு. ஒன்று, சந்தி ரன். அவர் ரிஷபத்தில் உச்சம். ஆனால் கடகத்தில்

ஸ்வக்ஷேத்திரத்தி லிருந்திருக்கிறார். மற்றொன்று, புதன். அவர் தம்முடைய ஸ்வக்ஷேத்திரமாகிய கன்னியிலேயே உச்சம் பெறக்கூடியவர். அவர் சூரியனருகே, கூடவும், முன்னும் பின்னுமாகவும் சஞ்சரிக்கப்பட்டவர். ஆகையால் இந்தக் காலத்தில் உச்சமா யிருந்திருக்கமுடியாது. மீன, மேஷ ராசிகளில் இருந்திருக்கவேணும். ராகு, கேதுக்களுக்கு ஸ்வக்ஷேத்திரங்களும், உச்ச வீடுகளும் கிடையாது. இவர்கள் மூவரும், அதாவது புதன், ராகு, கேது, எங்கிருந்தார்கள் என்று வால்மீகி ராமாயணத்தில் கொடுக்கப்படவில்லை. பின்னே எடுத்துக்காட்டுகிறபடி, இவர்களிருந்தவிடம் கம்பராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கவில்லை. இவர்களின் நிலையை ஆராய்ந்தே அறியவேண்டியிருக்கிறது. அதற்குச் சந்தர்ப்பமும், பொழுதும், சாத்தியமும் இல்லை. மேலும் ஊகையில் இறங்கவேணுமாயிருக்கிறது. ஆகவே ஐந்து உச்ச கிரகங்கள், ஒரு ஸ்வக்ஷேத்ர கிரகம், ஆக 6-கிரகங்களைக் கொண்டே நாடவேணும். இந்த விஷயத்தை விட்டு மேலே போகுமுன், சில கிரந்தங்களில் இந்த மூன்று கிரகங்களும் இருந்த இடங்களென்று, புதனுக்கு மேஷமும் ராகுவுக்கு தனுசும், கேதுவுக்கு மிதுனமும் கொடுத்து ஜாதகம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமாயணத்தில் இல்லாமல், 9-கிரகங்களுள்ளதாய் ஜாதகம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். இதற்கு ஆதி கிரந்தத்தில் ஆதாரமில்லை. ஆனால், சிலர் சொல்வதைப்போல் வீடில்லாத ராகு, கேதுக்களைக் கிரஹங்களாக பாவிக்கப்படாமலிருக்கலாம் என்பதற்கும் இடமில்லை. என்ன காரணத்தினால் இவைகளை ஜாதக விவரங்களில் சேர்த்துச் சொல்லவில்லை என்று சொல்ல சாத்தியமில்லை. ஊகையோ? ராகு, ஸ்ரீ ராமருக்கு 25-வது வயதில் மேஷத்தில் இருந்ததாக அயோத்யா காண்டத்தில் ஸர். 4. ச். 18, 19-ல்

இருக்கிறபடியால், அதனுடைய வக்ர அதிசாரத்தைத் தள்ளி சாதாரண கதிப்படி 1½-வருஷத்திற்கு ஒரு ராசியாக பின் தள்ளிக்கொண்டே போனால், தனுசில் வரலாம் என்பதா? வால்மீகி ராமாயணம், கம்பராமாயணப்படி ஆறு கிரகங்களுடன் ஜாதகத்தைக் கொடுத்து அவைகளில்லாத மூன்று கிரகங்களை அவைகளிருந்ததாக என்பிக்கப்படும் ராசிகளில் அமைத்து சுழிக்கப்பட்டிருக்கிறது.

பரதர்

| | | | |
|---|---|---|---|
| லக்னம் 5.சுக்கிரன் | 6.சூரியன் (புதன்) | | (கேது) |
| | | | லக்னம் 1.சந்திரன் 2. குரு |
| 4. செவ்வாய் | | | |
| (ராகு) | | 3. சனி | |

ஸ்ரீராமர் லக்ஷ்மணர் சத்ருக்னர்

**கம்பராமாயணம்.**

4. இந்த விஷயமாய் ஆறே கிரகங்களைப் பற்றித்தான் கம்பராமாயணத்திலும் சொல்லியிருக்கிறதென்று முன்பே சொன்னோமல்லவா? அதைக் கொஞ்சம் கண்காணித்துவிட்டு மேலே போகலாம்.

5. தேவிமார்களுக்குப் பருவம் வந்தடைந்ததும், பூமிதேவி மகிழ்ச்சியாற் பூரிக்க, புனர்வஸு நக்ஷத்திரமும், கர்க்கடக லக்னமும் குதித்துத் துள்ள,

கௌஸல்யாதேவி ஸ்ரீராமரைப் பெற்றாள். புஷ்யமும்; மீனலக்நமும் விளங்குகையில், கைகேயி பரதனைப் பெற்றாள். இதுவரை வால்மீகிராமாயணத்திற்கும் இதற்கும் வித்தியாசமில்லை. புற்றிலே நுழையும் தன்மையுள்ள பாம்புடனே [ஆய்லேஷ நக்ஷத்திரத்துடன் (நண்டும்) கர்க்கடக லக்நமும் ஓங்கி நிற்க, (வலுவாய் எழுகையில்) சுமத்திராதேவி இளைய பெருமாளைப் பெற்றாள். (இதே வேளையில் லக்ஷ்மண சத்ருக்நர்கள் இருவரும் பிறந்ததாக வால்மீகி ராமாயணத்தில் இருப்பதைப் பார்த்தோம். கம்பராமாயணப்படி, சுமித்திரை தசமி திதியில், மக நக்ஷத்திரத்தில், சிங்கராசியில் மீண்டும் ஒரு புத்திரனைப் பெற்றாள். [இது மாறுபாடு], பிறகு அந்தணர்களும், குல குருவும் ஜாதகம் கணிக்கலாயினர். அதாவது,

மேடமாமதி திதி நவமி மீன் சமை
நீடுறு மாலை கர்க்கடக நீதிசேர்
ஓடைமாக வினை ஞுதய ராசிசோவி
நாடினே காதசர் நால்வருச்சரே.

மாதம் - மேஷம், திதி - நவமி, நக்ஷத்ரம் - புனர்வஸு, லக்நம் - கடகம். கிரகங்களில் ஸ்ரீராமரிட ஜனனலக்நத்திற்கு பதினோராமிடங்களுக் குடையவர்களான நால்வர் (நான்குபேர்) உச்சம். அதாவது, ஸ்ரீ ராமபிரான் பிறந்த கடகத்திற்கு பதினோராமிடமாகிய விருஷபாதிபதி சுக்ரனும், அதற்குப் பதினோராமிடமாகிய மீனத்திற்கதிபதி குருவும், அதிலிருந்து பதினோராமிடமாகிய மகரத்திற்கு அதிபதி சனியும், அதற்குப் பதினொன்றாகிய விருச்சிகத்திற்கு அதிபதி அங்காரகனும் தங்கள் தங்கள் உச்சஸ்தானங்களில் உச்சமாயிருந்தனர். அதாவது, சுக்கிரன் மீனத்திலும், குரு கடகத்திலும், சனி துலாத்திலும், செவ்வாய் மகரத்திலும் இருந்தார்கள். மாதம் மேஷம் என்றதினல், சூரியன் உச்சமென்றாயிற்று. ஆகவே,

ஐந்து கிரகங்கள் உச்சம். ஆதலாலே சத்ருக்நர் மக நக்ஷத்திரத்தில், சிங்க லக்நத்தில் பிறந்தாரென்பது தவிர, மிச்சம் எல்லாம் வால்மீகி ராமாயணப் படியே. இந்த ஒரு மாறுபாட்டிற்குக் காரணமாவது, அத்தாட்சியாவது உண்டோவென்று அறிஞர் ஆராய்ந்துகொள்க.

6. ஏற்கனவே சொன்னபடி, இரண்டு ராமாயணத்திலும் 6-கிரகங்களே சொல்லப்பட்டிருக்கின்றனவென்பதை மனதில் வைத்துக்கொண்டு பார்க்கலாம். சிலர் ராகு கேதுக்களை ஜோதிட வகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்றும், சில ஜ்யோதிஷ கிரந்த கர்த்தாக்கள் ஏழு கிரகங்களைக் கொண்டே கிரந்த மெழுதி யிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள். அப்படியானல், ப்ரதானமான ஏழினுள் ஒன்றான விடுபட்ட புதனைப்பற்றி ஏன் சொல்லவில்லை என்கிற கேள்வி பிறப்பதுடன், புதனைப்பற்றியும், ராகு கேதுக்களைப்பற்றியும் இதே வால்மீகி ராமாயணத்தில் பல ப்ரஸ்தாவங்களிருக்கின்றன வென்பதுடன், கோசார ரீதியாய் பலன் பார்ப்பதற்கு இவர்கள் முக்கியமாய்ப் பாராட்டப்பட்டிருக்கின்றன ரென்பதும், ஞாபகத்தை விட்டுப் போகக் கூடியவை யல்லவென்பது கவனிக்கத் தக்கது. உதாஹரணமாக, அயோத்யாகாண்டம், 4-வது ஸர்க்கம், 18-வது ச்லோகத்தில், தசரதர் தம்முடைய ஜன்ம நக்ஷத்திரம், சூரியன், அங்காரகன், ராகு முதலிய குரூர கிரகங்களால் பீடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருப்பதையும் சந்திர சூரியாள் ராகு கேதுக்களால் விழுங்கப்பட்டு விடுபட்டபோது பிரகாசித்ததுபோல் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகவே, ஸ்ரீராமாவதாரத்தில் ஜனன ஜாதகத்தில் இவைகளைச் சொல்லாததற்குக் காரணம் ஜாதகர்களின் பொதுப் பலன்

களை யறியவேண்டியதற்கு அவசியமானவற்றைச் சொல்லி மற்ற விஷயங்களைச் சொல்லவில்லை என்று கருதவுங் கூடும். சொன்னவைகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

### ஜாதக பலன்கள்

7. இந்த ஜாதகங்களின் பலன் கூறப்படவில்லை. தசாபுக்தி வகுத்துப் பலனறிகிறது, நவாம்சம் போட்டு பலன்காணல், கிரகங்கள் ஏறிய சாரங்களைக் கொண்டு பலன் மொழிதல் முதலிய வழிகளும் குறிக்கப்படவில்லை. பலனை அறியக்கூடிய ஸூசனையைக் காட்டி, படிப்பவர் ஆராய்ந்தறியட்டும் என்று விடுத்தனர்போலும். அப்படி மேம்படையாய் எட்டியவரை ஆராயப் புகுவோம்.

8. திரேதா யுகத்தில் அவதரித்த பகவான் ஜாதகத்திற்குப் பலனெடுத்துரைக்க யாராலாகும் என்றும், அது தெய்விகம் என்றும், அதைக் காண எத்தனிக்கக் கூடாது என்றும் எண்ணி, நற்காரியத்தைக் கைவிடக்கூடாது. முன்னறிந்து சொல்லி வெகுமானம் பெறப் போகிறோமில்லை. தப்பிப் போமோவென்கிற பயமுமில்லை. அந்த ரகுவீரர்களுடைய சரித்திரம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இப்பொழுது செய்யக்கூடியது யாதெனில், எந்தெந்த சங்கதி என்னென்ன காரணத்தினால் ஏற்பட்டது; கிரஹ, நக்ஷத்திரங்களின் பலாபலன்கள் என்னவிதமாய் அறியப்பட வேண்டுமென்று அக்காலத்தவர் வழங்கி வந்தனரென்பவைகளைத் தெரிந்துகொள்வதில் இஹபர பலன்கள் உண்டாகும். ஜ்யோதிஷ

ஞானத்தையும் விருத்தி செய்துக்கொள்ளலாம். அப்படி எத்தனிக்கும்போது, அப்போதிருந்த சில முறைகள் இப்போது வழங்கப்படவில்லையென ஏற்படுகிறது. ஏன், எப்போது அம்முறைகள் அநுசரணையிலிருந்து வழுவிவிட்டதென்று அறிய முடியாமலுமிருக்கிறது. அது ஒருபுறமிருக்க, ஜோதிஷ சாஸ்திரம் பற்பல முறைகளில் எவ்வளவோ விருத்தியாயிருக்கிறது. மார்க்கங்களே நூதனமானவைகளாய் விட்டிருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் பழைய வழியைக் கைப்பற்ற எத்தனிப்பது உசிதமாவெனும் கேள்வி ஸகஜமாக யேற்படலாம். ஜோதிஷமே தொழிலாயிராமல், அதில் ஈடுபட்டு பல ஜாதகங்களைப் பரிசீலனைச் செய்து வருவதில் நக்ஷத்திரங்களின் அதிதேவதையை நாடிப் பலனுரைக்கும் **அம்முறையைப் புனருத்தாரணம் செய்து** வருவதாயின் **கண்டிப்பாய் பலனுண்டாகும்** என்றே என் அபிப்பிராயம். இதிருக்க, இவ்வாராய்ச்சியி லிறங்குவதில் இன்னுமொரு பெரிய ஆமுஷ்மிக பலனுமுண்டு. ஸங்கேதமிழைத்தல், ஏளனஞ் செய்தல், தும்முகையில் நாமோச்சாரணம் செய்தல், நிந்தித்தல் முதலியவைகளால் பகவந்நாமத்தைச் சொன்னாலும் பாவங்கள் நீங்கப்பெற்று நற்பதவி யடைவார்களென்று சாஸ்திரமிருக்கிறபடியால், எக்காரணத்தைக் கொண்டாகிலும் ஸ்ரீராமநாம ஸ்மரணம் செய்வது நலம் என்றெண்ணி, பகவானின் மானுஷ-தைவிக அவதாரமாகிய ஸ்ரீராமாவதாரத்திற்கு வரையப்பட்டிருக்கும் ஜாதகத்திற்குப் பலனறியப் புகுதலும் ஒரு பக்தி மார்க்கந்தானென்றும், அங்ஙனம் பகவத் குணதி

சயங்களை சிந்திப்பதால் ஆன்மாக்கள் அச்சிந்தனையில் ஈடுபட்ட மாத்திரத்தில் பக்திமேலிட்டு ஸகல உத்தம பதவிகளையுமெய்தலாகும் என்று கருதியும், இவ்விதமாயும் பகவத் தியானஞ்செய்து கிருதார்த்தராகலாமெனும் நல்லெண்ணங்கொண்டும் இவ்வாராய்ச்சியில் புகுதலாயிற்று. ஸ்ரீ ராம சரித்திரம் நூறு கோடி ப்ரவிஸ்தரத்திற்கு அதிகப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்போது கோடானகோடி (எத்தனையோ கோடிகள்) ப்ரவிஸ்தரத்திற்கு அதிகப்பட்டது. அதாவது, எண்ணவே முடியாத அளவு கொண்டதென்றே சொல்லலாம். ஸ்ரீ ராம பக்தர்கள் பற்பல கோடியர். அதில் பலர் ஆழங் காணமுடியாத, வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அவ்வளவு ஆழ்ந்த பெரும் பக்திமான்கள். ஸ்ரீ தியாகப்ரஹ்மத்தைப்போல் பக்திரஸத்தைப் பாடிப் பாயவிட்டிருக்கின்றனர். இன்னின்ன குணங்களைத்தான் அநுபவித்தார்களென்று எடுத்துரைக்க வியலாது. மஹாத்மா காந்தியடிகளைப்போலவும் பல ஸ்தாபனக் கர்த்தாக்களும் தம்முடன் பக்தி மார்க்கத்தில் லக்ஷோப லக்ஷ பக்திமான்களைச் சேர்த்துக் கொண்டு செல்பவர் பலர். இவ்வாறிருக்க, இவனொருவன் எங்ஙனம் ஒரு நூதனவழியைக் கிளப்பக் கூடும் என்று கேட்கலாகும். 'தோள் கண்டார் தோளே கண்டார், தாள் கண்டார் தாளே கண்டார்' என்றபடி, பக்தர்கள் ஒரு அம்சத்தில் ஈடுபட்டால், அதைவிட்டு வேறே போக வியலாமல் அதிலேயே ஆழ்ந்து பரவசமாகிவிட்டார்கள். ஸ்ரீ ராம சரித்திர அமுதத்தைக் காலக்ஷேபங்களாகவும், உபந்யாஸங்களாகவும் நூல்கள் மூலமாகவும் பற்பல மிகப்

பெரியோர்கள் விசித்திரமாக ஊட்டப் பருகியுள்ளோம். இப்போது ஆதி க்ரந்தங்களிலிருந்து ஆதாரங்காட்டி பற்பல வியாக்யானங்களுடன் ஸ்ரீமத் ராமாயண பதிப்புகள் பல பிரசுரிக்கப் பிரயத்தனங்கள் நடப்பதாகத் தெரிகிறது. இப்போதைக்கு ஸம்பூர்ணமானதெனக் கருதக்கூடிய ஒரு பூரா பதிப்புக்கு ஓர் ஆயிரம் ரூபாய் விலையாகுமாம். அவையெல்லாம் ஸாமான்யருக்குக் கிடைக்கக்கூடியவையுமல்ல. ஸர்வகலாசாலைகளிலும், புத்தகசாலைகளிலும் வைக்கப்படும். வ்யுத்பன்னர் யாராவது சிலர் பாக்கியவத்தர்களாய் அப்புத்தகங்களைப் பெற்றாலும், அவர்கள் மூலம் அறிந்துக்கொள்வதும் இயலாத காரியம்; ஆகவே இதுவரையில் எழுதப்படாது, சாதாரணரும் எளிதில் பெற்றுச் சுலபமாகப் படித்தறிந்து, பிறருக்கும் சொல்லி ஆனந்திக்கத்தக்க முறையில் இச்சிறு நூல் முன்வருகிறது.

9. இதன் கருத்தை எடுத்துக்காட்டி, விஷயத்திற்குத் திரும்புவோம். ஸ்ரீ ராமர் அவதரித்தது உத்தராயணம், வஸந்தருது, சைத்ர மாதம். இவற்றின் ஶ்லாக்யதையைப் பற்றி எடுத்துச் சொல்லாமலே எல்லோருக்கும் தெரியும். சாந்த்ரமான ரீதியான சைத்ரமாதமா, ஸௌரமான ரீதியாய், சித்திரை அதாவது மேஷ மாதமாவென்று ஒரு பிரச்னையைக் கிளப்புகிறார்கள், சிலர். ஆறு ருதுக்கள் கழிந்துபோயினவென்றும் ஐந்து கிரகங்கள் உச்சமென்றும் இதே கட்டத்தில் பின்னால் சில ஶ்லோகங்களில் குறிப்பிட்டிருக்கிறபடியால் மேஷ மாதமாகவே கொள்ளலாம். விவாதத்

சித்திரை மாதம்

திலிறங்குவதானல், ஸ்ரீ கோவை சாஸ்திரியாரைப் போல் சிலர் இந்த ஸ்லோகங்களை பின்னல் சேர்க்கப்பட்டவைகளா யிருக்கவேண்டு மென்கிருர்கள். அது மிகப் பெரிய விஷயம். சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கிருர்களே தவிர, சரியான வாதங்களைக் கொண்டும், சில யுகங்களுக்கு முன்னிருந்திருக்கக் கூடிய **அயோத்தியையின் தேசாந்தர அக்ஷாம்ச பாகை கலைகளைக்கொண்டு கணக்கிட்டும்** அவர்கள் வாதத்தை யாரும் சாதித்தவர்களில்லை. சிலர் ஐந்து கிரகங்கள் உச்சமாயிருக்க ராஜவம்சத்தில் பிறந்தவர் சக்கரவர்த்தியாவார் என்கிற ஜ்யோதிஷ நீதியை விளக்க ஜாதகம் வரையப்பட்டதாய் விதண்டா வாதம் செய்கிருர்கள். நம் எண்ணம் அது எதுவுமல்ல. ஆகவே சொல்லப்பட்ட விஷயங்கள் சரியானவை என்று வைத்துக்கொண்டே மேற்செல்லலாம்.

நவமி திதி

மேஷ மாத ஆரம்பத்தில் சுக்லபக்ஷ நவமியில், ஏனென்ருல் சூரியன் மேஷத்திலிருக்க, சந்திரன் கடகத்திலிருக்க வளர்பிறை என்பதற்கும் சந்தேகமிருக்க முடியாது [ஆனல் சந்திரன் புனர்வஸு—4-ம் பாதத்திலிருந்தால்,சூரியன் மீனத்தில் தானிருந்திருக்கவேண்டு மென் பாருமுளர். இது முற்றிலும் பிசகு] நவமி திதியின் பெருமையை எடுத்துச் சொல்ல முடியாது. ஸரஸ்வதி பூஜை மஹா நவமியில்தான். பிரயாணம் ஒன்றுக்கு மாத்திரம் தவிர்த்து, மற்றெல்லாவற்றிற்கும் நவமி விசேஷமானது. ஒன்பது எனும் எண், ஒற்றை எண்களெல்லாவற்றிற்கும் பெரிது. மேற்பட்ட இரட்டை

லக்கமுள்ள எண்களுக்கு, அதாவது பத்திற்கு மேற்பட்ட எண்கள் எதற்காகிலும் ஒன்பதிற்குக் குறைந்த எண்ணுடன் வேறே எண்கள் சேர்த்துத் தானாக வேண்டியிருக்கிறபடியால், இதற்கொப்பாக, எல்லா பொருள்களுக்கும் பகவதம்சமாகிய உயிர்தான் மிகவும் முக்கியமென்றும், அவ்வுயிரளிக்கும் பகவானே, மற்ற எண்களுக்கெல்லாம் மேலாக (9) ஒன்பதுபோல் மேலானவரென்றும் என்பிக்க நவமிதிதியில் அவதரித்தார் எனலாகும். மேலும், ஒன்பதுக்கு முன்னே பின்னே எந்த நம்பர் சேர்த்தாலும் அத்துடன் கூட்டினல் முன்னலோ பின்னலோ சேர்க்கப்பட்ட நம்பரே நிற்கும். ஒன்பதை எந்த நம்பரால் பெருக்கினலும் பெருக்குத் தொகை எண்களைக் கூட்டினல் ஒன்பதே வரும். உதாரணமாக, 19-பத்தொன்பது, 91-தொண்ணூற்று ஒன்று என்பதில், ஒன்றும் ஒன்பதும் பத்து. அதில் பூஜ்யம் போனல்-1. 29, 92-என்பதில் இரண்டும் ஒன்பதும் கூட்டினல் பதினென்று. ஒன்றும் ஒன்றும் கூட்டினல்-2. அதேமாதிரி 89. எட்டும் ஒன்பதும்-17. ஏழும் ஒன்றும் எட்டு. பெருக்கல்: $2\times9=18$, எட்டும் ஒன்றும் ஒன்பது. $9\times9=81$. எட்டும் ஒன்றும் ஒன்பது. ஆகவே ஒன்பதைக் கீழ் எண்களுடன் கூட்டினல் அந்த எண்ணே நிற்கும். ஒன்பதை அவைகளால் பெருக்கினல் ஒன்பதே நிற்கும். இதுநிற்க ஜபங்களுக்கும் அர்ச்சனைகளுக்கும் 108, 1008-எண்கள். அவைகளைக் கூட்டினலும்-9. பகவான் ஒப்புயர்வு அற்றவர். தனித்து நிற்பர் எனலாகும். எல்லா ப்ராதாக்களும் இதே திதியில்

ஒன்பதின் மகிமை

ஜனித்து அவதாரம் பூர்த்தியானபடியால்தான் ஸ்ரீராமநவமி என்று திதி கொண்டாடப்படுகிறது. மற்ற அவதாரங்கள், பிறப்புகளில் திதியையும் நக்ஷத்திரத்தையுங் கொண்டு ஜயந்தி வேறுபடுகிறது.

10. முன்சொன்ன வஸந்தருது, மாதம், திதி இவைகளும், பின்னே சொன்ன 5-கிரகங்கள் உச்சம் என்பதும் எல்லா ப்ராதாக்களுக்கும் பொதுப்படை. பரதர் மீனலக்நத்தில் பிறந்தார் என்பது மட்டும் லக்ந வேறு பாடு. அதனால் பலன் மாறுபட்டதாகக் கருதும்படியும் இல்லை. கிரக நிலைகள் ஒரேமாதிரி யானவை யாகையால் பலன்களை ஆராயும்போது லக்ந மாறு பாட்டால் நிரம்ப வித்தியாசம் காட்டாமல் நக்ஷத்ர வேறுபாட்டால் மட்டும் சில மாறுதல்களிருப்பதைக் காணலாம். அக்காலத்தில் **நக்ஷத்திரங்களின் அதி தேவதைகளுக்கு வெகு முக்யத்வம்** கொடுத்துவந்த தாக ஏற்படுகிறது. அம்முறை இப்போது அவ்வளவு வழங்கப்படுவதில்லை. கிரகங்கள் எந்தெந்த வீட்டி லமைந்திருக்கிறார்கள் அதன் பலனென்ன யாரார் யாராரைப் பார்க்கிறார்கள் என்பதன் பலன், தசா புக்தி அந்தரம் வகுத்துப் பலன் சொல்வது, கிரகங் கள் எந்த சாரம் ஏறியிருக்கிறார்கள் என்பதைக் கொண்டு பலன் மொழிவது முதலிய வழிகள் அப் போது வழங்கினதாகத் தெரியவில்லை. ஆகவே, அப்போது அநுசரிக்கப்பட்ட அதிதேவதையைக் கொண்டு பலனுரைப்பதென்கிற முறையால் ப்ரா தாக்களுடைய நக்ஷத்ர வித்யாஸங்களால் பலனில் என்ன வேறுபாடுகளிருந்தன வென்பதைத் தெரிந்

நக்ஷத்திரம் அதிதேவதை

துக்கொள்ளப் புகுவோம். ஸ்ரீராமருடைய நக்ஷத்திரத்தைச் சொல்லப் புகுகையிலே, "நக்ஷத்ரே அதிதி தைவத்யே" என்று அதிதேவதையையே முக்கியமாக எடுத்துரைத்திருக்கிறது. அதிதி புனர்வசுவுக்கு அதிதேவதை. அதிதேவதைகளுக்கு ஒரு சக்தி உண்டென்று வியக்தமாய் எடுத்துக்காட்டியுமிருக்கிறது. புனர்வசுவில் பிறந்தவர் ராஜாவாயிருந்தார். அடுத்தபடி புஷ்ய நக்ஷத்திரத்தில் பிறந்த பரதர், ஸ்ரீராமர் காட்டுக்குப் போனபோது அவருக்குப் பிரதிநிதியாகவும், அவர் ராவணனை வென்று கொன்று, நாடு திரும்பிவந்து பட்டாபிஷேகம் செய்துகொண்ட பிறகு இளவரசராகவும் இருந்தார். இதற்குக் காரணம் அவருடைய நக்ஷத்திரமாகிய புஷ்யத்திற்கு அதிதேவதை குரு. அவர் சம்பத்தைக் கொடுப்பவர் [அயோத்யா காண்டம் 26-வது ஸர்க்கம், 9-வது ச்லோகம்]. லக்ஷ்மண, சத்ருக்நர்கள் இருவரும் ஒரே தன்மையாக பரதந்திரர்களாய் கைங்கர்யமே பிரதானமாகக் கொண்டு பிரசித்திபெற்றார்கள். லக்ஷ்மணர் பகவத் கைங்கர்யம் பிரதானமாக ஸ்ரீராமருடனேயே இருந்து இளையபெருமாளென கீர்த்தி பெற்றார். சத்ருக்நர் பாகவத அநுசரணையை மேற்கொண்டு பரம பாகவதரான பரதாழ்வானுடனேயே இருந்துவிட்டார். இதற்குக் காரணம், இவர்கள் பிறந்த ஆச்லேஷ நக்ஷத்திரத்திற்கு அதிதேவதை ஆதிசேஷன். அவருக்கு,

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்,
நின்றால் மரவடியாம், நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் திருமாற்கு அரவு."

என்றபடி, ஸ்ரீ மஹாவிஷ்ணு கைங்கர்யமே லக்ஷணம். ஆகவே, ஆயில்ய நக்ஷத்திரத்தின் அதிதேவதையின் தன்மைப்படி, அதிலவதரித்த லக்ஷ்மணர் ராமாநுஜராகவே ஸர்வகாலமும் ஸ்ரீராமருடனேயும், அதேமாதிரி பரதர்பால் பாகவத பக்தராக அன்பு கொண்டு சத்ருக்நருமாக இருந்துவிட்டார்கள்.

11. இம்மாதிரி அதிதேவதையை பிரதானமாகக் கொள்ளும் மார்க்கம் யுக்த மார்க்கங்களில் ஒன்றென்று வால்மீகிமஹரிஷி இந்நூலிலேயே முகூர்த்த விஷயம் பேசுகையிலும் காண்பித்திருக்கிறார். பால காண்டம், ஸ. 72-ல் ச்லோகம் 13-ல் விவாகபலனைக் கொடுக்கக்கூடிய தேவதையே [பகன் என்பவனே] உத்தர பல்குனிக்கு அதிதேவதை. ஆகவே, அதில் விவாகம் செய்யலாம் என்றும், அதற்குப் பூர்வாங்கமாக பித்ரு தேவதைகளை அதிதேவதையாக வுடைய மகா நக்ஷத்திரத்தில் கோதானம், நாந்தீமுகம் முதலியவைகளைச் செய்து வைத்துக்கொள்ள வேணுமென்றும் சொல்லியிருக்கிறது. அந்தப் படியே யுத்தத்திற்குப் புறப்படும்போதும் இதே உத்தர பல்குனி நக்ஷத்திரத்தில் 'அஜிபித்' முகூர்த்தத்தில் யுத்தத்திற்குப் புறப்பட வேண்டுமென்றும், மறுநாள் ஹஸ்தம் வந்திவிடுமென்றும், அதனுடைய அதிதேவதை அநுகூலமில்லை என்றும் ஸ்ரீராமரே சொல்லுகிறார் [யுத்த காண்டம் 4-வது ஸர்க்கம், 6-வது ச்லோகம்]. அந்தப்படியே மற்றும் இரண்டு ப்ரகரணங்களிலும் இருக்கிறது. யுத்தகாண்டம் - 103-வது ஸர்க்கம் 30, 33-ச்லோகங்களில்]. ப்ரஜாபதியை அதிதேவதையாகவுடைய நக்ஷத்திரமானவளும், சந்திர

னுக்கு இஷ்டையுமான ரோஹிணியை புதன் ஆக்ர மித்து நின்ருன் என்றும், இந்திரனையும், அக்னியை யும் அதிதேவதையாகவுடைய விசாகத்தை அங்கார கன் ஆக்ரமித்து நின்ருன் என்றும் இருக்கிறது. ஆகவே, ஜாதக பலனறிவதற்கு மட்டும் அதிதேவ தையை உற்று நோக்குவதுடனில்லாமல், முகூர்த்தம் முதலியவைகளுக்கும் அதை முக்கியமாகப் பாராட்டி வந்தனரென்று ஏற்படுகிறது. இப்பொழுது நக்ஷத் திரங்களின் அதிதேவதையை அவ்வளவு பிரதான மாகப் பாராட்டுவதில்லை. பெரும்பான்மையான பஞ் சாங்கங்களிலேயே அதிதேவதையை எடுத்து எழுதுவ தில்லை. முன் வழி விட்டுப்போனதற்குக் காரணம் புலப்படவில்லை. இப்பொழுது புதுவருஷ பலன்க ளறிய கிரகங்களின் அதிதேவதைகளை மட்டும் பார்ப்பதாகத் தெரிகிறது. ஆயினும் ஜாதகத்தின் பொதுப் பலனை அறிவதற்கு ஜாதகரின் நக்ஷத்திரத் தின் அதிதேவதையை உற்றுநோக்குவது பலனளிக்கு மென்று நிஷ்கர்ஷமாய்த் தோன்றுகிறது.

12. அதிதேவதை சிரேஷ்டமானவனென்ப துடன் புனர்வசுவிற்கு இன்னும் மேன்மைகளுண்டு. எல்லா நக்ஷத்திரங்களையும்விட அதை மேலானதா கக் கருதலாம். நம்மை யடைந்தவர்கட்கு ஜனன மரணாதி நிர்ப்பந்தங்களில்லை என்பதற்காக, அவ யோகமில்லாத புனர்வசுவில் பிறந்தனராம் ஸ்ரீராம பிரான். அதாவது, புனர்வசு நக்ஷத்திரத்திற்கு அமிர்தாதி யோகங்களில் அவயோகமே கிடையாது. அதுவுமல்லாமல் புனர்வசு நக்ஷத்திரம் அதன் நாம தேயத்திலேயே சூசிப்பித்திருக்கிறபடி தடைப்பட்டு

நின்ற விரதாதிகளை அதில் தொடங்கினால் அவை கைகூடி கோரிய பலனைக் கொடுப்பனவாகும் என்கிற வேத வாக்கியத்திற்கு ஏற்ப, முன்னால் இக்ஷ்வாகு வம்சத்தில் விட்டுப்போனதைப் பூர்த்தி செய்யத்தான் பகவான் புனர்வசுவில் அவதரித்தார் என்றும் கூறப்படுகிறது. அதாவது, அந்த வம்சத்தில் அபஜயமென்பது அறியாதிருந்திருக்க அநரண்ய மஹாராஜாவை ஸம்ஹரித்த ராவணனைக் கொல்ல புனர்வசுவில் ஸ்ரீராமர் அவதாரம் புரிந்தனராம். இது திதிக்கும் நக்ஷத்திரத்திற்கும் காரணமும், பலனுமாயிற்று.

13. "அடுத்தபடி, "ஸ்வோச்ச ஸம்ஸ்த்தேஷு பஞ்சஸு க்ரஹேஷு" என்று கிரகங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறபடியால் அந்த விஷயத்தைக் கவனிப்போம். இவைகளில் குரு, சனி, அங்காரகன், சுக்ரன் இந்நான்கு கிரகங்களும் தங்கள் உச்சஸ்தானங்களில் ஏறியிருந்தனர் என்பதில் எவர் மனதிலும் சந்தேகமில்லை. சூரியபாகவான் மீனத்திலேயே இருந்தாரா, மேஷத்தில் பிரவேசித்து விட்டாரா என்று சிலர் மனதில் ஐயமேற்படுவதாகத் தெரிகிறது. இது நீக்கமுடியாத சந்தேகமன்று. இந்தக் கிளர்ச்சியைக் கிளப்புகிறவர்களே, ஸ்ரீராம நவமி திதி, சித்திரை முதல் தேதியிலும் வரக்கூடுமென்றும், சூரியன் மேஷத்தில் பிரவேசித்திருக்கக் கூடுமென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். தென்னிந்தியாவிலேயே இம்மாதிரி சுமார் 32-வருஷங்களுக்கு முன் ரக்தாக்ஷி வருஷம் (1924-25)பிறந்த போது புனர்வசுவிலேயே தொடங்கி ஆச்லேஷ

நக்ஷத்திரம் வரை நவமி திதி இருந்திருக்கிறது. அன்று ஸ்ரீராம நவமி. அயோத்தியின் பாகை, கலைகளுக்கு பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் திதி இம் மாதிரியும் கிரக நிலைமட்டும் ராமாயணப்படியும் இருந்திருக்கக்கூடும். அப்படி வாய்ந்திருந்ததைத் தான் வால்மீகி மஹரிஷி எழுதினர் என்றுதான் கொள்ளவேண்டும். புனர்வசு கடைசியில் ஸ்ரீராமர் பிறந்தார் என்பதற்கும், ஆச்லேஷ நக்ஷத்திரத் துவக்கத்திலேயே நவமி திதியிலேயே லக்ஷ்மண சத்ருக்னர்கள் பிறந்தார்களென்பதற்கும் இந்த கட்டத் திலேயே அத்தாட்சி இருக்கின்றது. அதாவது ஸ்ரீராமர் பிறந்த கடக லக்னத்திலேயே மறுதினம் லக்ஷ்மண சத்ருக்னர்கள் பிறந்தனர். அப்போது ஆயில்யம். பரதருடைய லக்ன வேறுபாட்டையும், புனர்வசு, புஷ்யம், ஆயில்யம் ஆக மூன்று நக்ஷத்திரங்களில் சந்திரன் மாறியதையும் கூறியவர், திதி மாறுபட்டதாகச் சொல்லவில்லை. திதியிலும் வேறு பாடு இருந்திருந்தால் கட்டாயமாய்ச் சொல்லியிருப்பர். நக்ஷத்ர வேறுபாட்டால் மட்டுமல்லாமல் திதி மாறுதலால் தன்மைகளில் வித்தியாசமிருந்திருக்கும். புனர்வசுவில் பிறந்தவர் ராஜாதிராஜனுகவும் பூசத்தில் பிறந்தவர் ராஜப்பிரதிநிதியாகவும், இளவரசராகவும், ஆயில்யத்தில் பிறந்தவர்கள் தொண்டே பிரதானமாகவும் இருந்தார்களென்பதனுல் திதி, கிரக மாறுபாடுகளில்லாமலிருந்திருக்க வேண்டுமென்றும், சூரியன் மறுதினம் லக்ஷ்மண சத்ருக்னர்கள் பிறந்தபோதாவது மேஷத்திற்கு வந்து விட்டிருக்க வேண்டுமென்றும், சாதாரண கணிதமே

கெட்டியாய்ச் சொல்லும். அப்படியா யிருந்தால் ஸ்ரீ ராமருக்கு மட்டும் நான்கு கிரகங்கள் உச்சமென்றும், பரத, லக்ஷ்மண, சத்ருகனர்களுக்கு ஐந்து கிரகங்கள் உச்சமென்றும் குறிப்பாய்ச் சொல்லியிருப்பார் வால்மீகி. அப்படி உச்சமென்று சொல்லாமல் "குளீரே அப்யுதிதே ரவெள என்று கடகத்தில் 'சூரியன் வலிவாய் எழும்போது' என்றுதான் சொன்னார். "குளீரே" "அப்யுதிதே ரவெள" சூரியன் வலிவாய் எழுகையில் என்பதற்கு, யு. கா. ஸ. 4-ச். 3-ல் சூரியன் மத்யத்தை அடைந்துவிட்டார், என்பது போல், சூரியன் கடகத்தில் ஜோராய் கிளம்பும் சமயத்தில், கடகலக்ன ஆரம்பத்தில் என்றுதான் அர்த்தம். ஸ்ரீராமர் ஜனனம் தொடங்கி எல்லோருடைய ஜனனங்களிலும் ஐந்து கிரகங்கள் உச்சம் என்பது திண்ணம். இந்த சந்தர்ப்பத்தில் "ஸ்வோச்ச ஸம்ஸ்த்தேஷு பஞ்சஸு" என்கிறதற்கு, ஒரு கிரகம் ஸ்வக்ஷேத்ரத்திலும் நான்கு கிரகங்கள் உச்சமாயும் ஆக ஐந்து கிரகங்களிருக்கையில், என்று ஒரு அர்த்தம் செய்ய சிலர் துணிகிறார்கள். இது பிசகு. இந்த அர்த்தத்தை நிலைநாட்ட ஜனன கட்டமோ, அதில் சில ச்லோகங்களோ, பதங்களோ "ப்ரக்ஷிப்தம்" அதாவது பின்னால் எழுதப்பட்டவை, என்று சொல்லவும் துணிகிறார்கள். அவர்கள் எந்த ச்லோகங்களையோ, பதங்களையோ எடுத்து விடுவதென்று சொல்லுகிறார்கள் என்று புலப்படவில்லை. கோர்வையாய், சில இடங்களில் சில ச்லோகங்களைப் புகவைத்தாப்போல் எதையும் புகுத்த இடம் இல்லாமல், ஒப்புயர்வற்ற வகையில் வால்மீகி எழுதியிருக்

கிறார். சூர்யகுலத்தையே மேன்மைப்படுத்த ஏற்பட்ட ஸ்ரீ ராமாவதாரத்திற்கு ஜனனத்தைப் பற்றிய ச்லோகங்களே இராது போயிருக்குமா! அந்த வம்சத்திலுதித்தவர்களுடைய ஜாதகங்களை எழுதியவர் எவரேயாயினும் சூர்யபகவானின் நிலையை நீக்கி விட்டு மற்றதையா பகன்றிருப்பார்? ஸ்ரீ ராமாயணத்தில் வம்ச நக்ஷத்திரத்தையும், கிரகத்தையும் முக்கியமாய் பாராட்ட வேண்டுமென்று காண்பித்திருக்கிறது. வால்மீகி மகரிஷி நாரதபகவானை கேள்வி கேட்டு நிறுத்தியதும் பதில்சொல்லத் தொடங்குகையிலேயே "இக்ஷ்வாகு வம்சப்ரபவோ, ராமோ நாம ஜனை ச்ருதஃ" என்று நாரதர் ஆரம்பிக்கிறார். ஸ்ரீராமர் வனவாஸம் புறப்பட்டபோது இக்ஷ்வாகு வம்ச நக்ஷத்திரமாகிய விசாகம் துக்கமடைந்திருந்ததாகவும், அவர் யுத்தத்திற்கு புறப்பட்டபோது தெளிவடைந்திருந்ததாகவும் சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது. சூரியனைச் சுக்கிரனிருக்கிற ராசியில் அமைப்பதனால் இருவருக்கும் நன்றன்று. ஆகவே ஒரு கிரகம் ஸ்வக்ஷேத்ரம் என்றும், மற்ற 4-கிரகங்கள் உச்சம் என்றும் சொன்னால் சூர்யனைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையா? நவக்கிரகங்களில் முதல்வரான சூரியனின் நிலைமையைச் சொல்லாமலே சைத்ரமாதம் என்றதனால் மீனமா, மேஷமா என்று சந்தேகிக்கும்படி வால்மீகி ஜாதகம் எழுதியிருப்பரா? மேலும் 'ஸ்வோச்ச' என்றதனால் அயலாருடைய உச்சக்ஷேத்ரத்தில் யாருமில்லை எனலாகும். அதாவது, சுக்கிரனுடைய உச்சவீடான மீனத்தில் சூரியன் இல்லை என்றாகும். [புதன் சூரியனுடைய உச்ச

வீட்டில் இருந்தாரே என்ருல், அவர் உச்சமாய் இல்லை.] அப்படி வால்மீகி ராமாயணத்தில் இல்லவுமில்லை. [புதனுக்கு தனி உச்சவீடும் கிடையாது]. 'ஸ்வோச்ச' என்பதை 'ஸ்வ,' 'உச்ச,' எனப் பிரித்து பொருள் கொள்ளுங்கால், நான்கு கிரகங்கள் சுய வீடுகளிலும், ஒன்று [குரு] மட்டும் உச்சவீட்டிலும் இருந்தார்கள் என்று ஏன் சொல்லக் கூடாது? [மேலும், ஸ்வக்ஷேத்ர என்பதுபோல் 'ஸ்வோச்ச' என்பது இரண்டாகப் பிரிக்கக் கூடுமா என்ருல் அதை இரண்டு (2) அசைகளாகப் பிரிக்கக் கூடாதென்றும், உச்ச என்பதுபோலவே ஸ்வோச்ச என்பதும் ப்ரயோகிக்கப்பட்டு வருகிறதென்றும் தெரிகிறது]. வாதத்திற்காகப் பிரித்தும் பார்த்துவிடலாம். ஆனல், மீன மேஷ மாதங்களில் சூர்யனும்புதனும் ஸ்வக்ஷேத்ரமாய் இருக்கமுடியாது. குரு, சனி, அங்காரகன் மூவரும் தங்கள் வீடுகளில் இருக்கக்கூடும். குரு சந்திரனுடன் என்றதாலும் ஒரு கிரகமாவது உச்சமாயிருந்திருக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்வதாலும், அங்காரகனும் சனியும் ஸ்வக்ஷேத்ரமானல் சந்திரனுடன் 3-கிரகங்கள் ஸ்வக்ஷேத்திரமாகின்றன. நான்காவதாகிய சுக்கிரனும் ஸ்வக்ஷேத்திரத்தில் இருக்கக்கூடும். இந்த நிலைமை சாத்யமாகையால் குரு ஒருவர் உச்சம், சந்திரனுடன் (4) நான்கு கிரகங்கள் ஸ்வக்ஷேத்ரமென்று சொல்ல சாத்யமாகும். ஆகிலும் இதை எழுதுபவராவது, மற்ற விதண்டாவாதத்தில் இறங்காத அறிஞர்களாவது, அப்படி சொல்லவே முடியாது 'ஸ்வோச்ச' என்பதை இப்படி பிரிப்பது உசித

மல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காக எதிர்த் தட்டாக வாதம் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. 'ஸ்வோச்ச' என்பது இரண்டு அசைகள் சேர்ந்த ஒரே பதமென்று 'பராசர ஹோரை,' 'ஸர்வார்த்த சிந்தாமணி' முதலிய அனேக சம்ஸ்கிருத ஜ்யோதிஷ கிரந்தங்களில் காணப்படுகிறது. அன்றியும், பிரஸ்தாவ ச்லோக கர்த்தா யாவரேயாயினும் 'ஸ்வ' எனவும், 'உச்ச' எனவும் தனித்தனியே பிரித்துப் பொருள் கொள்ளும்படி எழுதியிருப்பதாகப் புலப்படவில்லை. ஏனெனில், நக்ஷத்திரம் புனர்வசு என்றும், குரு உச்சம் என்றும் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. "வாக் பதா விந்துநா ஸ்ஹ" என்று சந்திரனும் குருவும் ஒரே வீட்டிலிருந்தார்களென்றபடியால், சந்திரன் தன் வீட்டில் ஆட்சி என்றும், குரு ஒருவர் உச்சம் என்றும், மறுபடி சொல்வது, 'கூறியது கூறல்' என்னும் குற்றமாகும். அம்மாதிரி தப்பான முறையில் ச்லோகம் கவனம் பண்ணி இருக்கமாட்டார்கள். போகவும், ரகுவம்சம் 3-வது ஸர்க்கம் 13-வது ச்லோகத்தில் "கிரஹைஸ்ததஃ பஞ்சபிர் உச்ச ஸம்ச்ரயைஃ அஸுர்யகைஃ" என்றபடி, சூர்யன் உச்சமாயிராவிடில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கும். 'அஸுர்யகைஃ' என்றதனால் சூர்ய ஸம்பந்தமில்லாமல் என்றும் சொல்லலாம். ஒரு சாரார், ஐந்து கிரகங்கள் உச்சமாயிருக்க ராஜவம்சத்தில் பிறந்தவர் சக்கரவர்த்தியாவர் என்கிற உண்மையை எடுத்துச் சொல்ல இந்த ஜாதகம் எழுதப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். இதுவும் சரியல்ல. இதைக் குறிப்பதுபோலா ஸம்ஸ்கிருத மகாகவி

போஜசம்பூ எழுதுகையில், 'உச்சஸ்தே க்ரஹ பஞ்சகே' என்று எழுதியிருக்கிறார்? இல்லை. [கடைசியில் விளக்க உரை பார்க்க.] ஆதலால் சோதிட சாஸ்திரத்தை நிரூபிக்கவோ, சுட்டிக்காட்டவோ இந்த ஜாதகங்கள் எழுதப்பட்டிருக்கமாட்டா. உண்மைப்படியே எழுதப்பட்டவை என்று கொள்ளவேணும். இதை எழுதுபவருடைய அபிப்பிராயத்தில் இந்த ஜாதக நிருபணம் அனுவசியகம். ஆகிலும் அநேகருக்கு இந்த ஜாதகங்களே ஆதி அசல் கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்க வில்லையாமே என்றும், எழுதப்பட்டிருந்தாலும் ஐந்து கிரகங்கள் உச்சமென்பது சரியல்லவென்றும் அபிப்பிராயங்களைக் கிளறிவிட்டிருக்கிறபடியால், அந்த சர்ச்சைகளைக் கிளப்பிக் கூடுமானவரை பதில் சொல்லி உண்மை சாதிக்கப்பட்டது.

14. ஜாதகம் சொன்னவர் பலனையும் சொல்லவில்லை; பலனை அறியும் விதத்தையும் சொல்லவில்லை. அவ்வகையில் அதிதேவதையை முக்கியமாகச் சொல்லி, நக்ஷத்திரத்தைச் சொல்லப் புகுகையில் நவகிரகங்களில் முதல்வரான சூரியனின் தாயாரான அதிதியை அதிதேவதையாகவுடைய நக்ஷத்திரத்தில் என்று சொல்லி, கௌஸல்யா தேவி ஸ்ரீ ராமனைப் பெற்றதும், அதிதி என்பவள் வஜ்ரபாணியாகிய தேவர்களின் ச்ரேஷ்டனைப் பெற்று விளங்கியபடி அமிததேஜஸுடைய பிள்ளையைப் பெற்று ஒளி பெற்றாள் - என்றார். படிப்பவர்களான நாம், மற்ற நக்ஷத்திரங்களின் அதிதேவதைகளைக் கொண்டும், அதி தேவதைகளுக்கு ஒரு சக்தி உண்டென்பதைக்

கொண்டும், சில நக்ஷத்திரங்களின் அதிதேவதைகள் குரு, பகன் முதலியோர் பலன் கொடுக்கக்கூடியவர்கள் என்று சொன்னதைக் கொண்டும், நக்ஷத்திரங்கள் விஷயமாய்ப் பேசுகையில் சில பலன்களை ஆராய்ந்தறிந்தோம். இப்போது கிரங்கங்களால் ஏற்படும் பலன்களை நாடிப் பார்ப்போம். ஐந்து கிரகங்கள் உச்சமாயிருப்பதனுல் என்ன பலன்? ராஜவம்சத்தில் பிறந்தவர் சக்ரவர்த்தியாவார் என்றல்லவா ஜ்யோதிஷ சாஸ்திரம் கூறுவதாக அறிகிறோம் ஆனல் இந்நால்வரும் சக்ரவர்த்திகளானுர்களா? யார் மனதிலும் ஸந்தேகமில்லாமல் 5-கிரகங்கள் உச்சமாயுள்ள பரத, லக்ஷ்மண, சத்ருக்னர்கள் சக்ரவர்த்திகளானுர்களா? ஸ்ரீராமர் சக்ரவர்த்தித் திருமகனுக பிரசித்திபெற்று பூமிக்கு மட்டும் அதிபதியாயிராமல் ஸர்வலோக சரண்யனுனர். ஆகவே, ஏற்கனவே சொன்ன இந்த ஜ்யோதிஷ விதியைச் சுட்டிக்காட்ட ச்லோகங்கள் எழுதப்படவில்லை. அடுத்தபடியாக, சாதாரணமாய் நம் தமிழ்நாட்டில் அதிகமாய் தப்பாக வழங்கப்பட்ட ஒரு ஜோஸ்ய விதியை எடுத்துக் கொண்டு, அது சரியானதா, இந்த ஸ்ரீராமாவதார ஜாதகங்களுக்குப் பொருந்துமா என்று பார்ப்போம். இந்த பராக்கிரமசாலிகளின் ஜாதகங்களில் பார்க்கப்படாத உச்சக்கிரகம் கிடையாது. சூர்யனும் சனியும் ஒருவரையொருவரும், குருவும் அங்காரகனும் ஒருவரையொருவரும் ஏழாமிடம் பார்வையாயும், குரு சுக்கிரனை 9-மிடம் பார்வையாயும், சனி குருவை 10-மிடம் பார்வையாயும், அங்காரகன் சூர்யனை 4-மிடம் பார்வையாயும் பார்க்கிருர்கள். உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சைகூட அகப்படாதென்பதையா இந்த ஜாதகங்களுக்குப் பொருந்த

வைக்கப் பார்க்கிறது? அதிமானுஷ்ய - தைவிக அவதாரத்ததான இந்த ஜாதகங்களையும் எண்ணி, அந்த வசனத்தையும் எண்ணுவது அபசாரமாகும். மேலும், ஐந்து கிரகங்கள் உச்சமாயிருந்தால் ஓர் உச்சனையாவது ஓர் உச்சகிரகம் பார்த்தே ஆக வேண்டும். ஐந்து கிரகங்கள் உச்சமாயிருக்கப்பெற்ற மாணிடர்கள் எவ்வளவோ உத்தமர்களாய் உயர்ந்த பதவிகளில் இருக்கக் காண்கிறோம். ஒரு சமயம் இரண்டு கிரகங்கள் உச்சமாயிருந்து, அவைகளில் ஒன்று மற்றொன்றைப் பார்த்தால் பிச்சையுமகப் படாத நிலைமை ஏற்படுமோ என்னவோ சொல்ல முடியாது. அதிலும் குருவும் சனியும் உச்சஸ்தானங் களி லிருக்கப்பெற்றவர்கள், சனி குருவைப் பார்த் துங்கூட தனவந்தர்களாகவும் கீர்த்திமான்களாக வும் இருக்கவும் ஐந்து கிரகங்கள் உச்சமாயிருந்தும் நல்ல ஸ்திதியில் இல்லாதவர்களையும் பார்த்து வரு கிறோம். ஆனால் ஜ்யோதிஷஜ்ஞான மதிகமில்லாமல், நுணுக்கங்களை யறியாமல், ஜோஸ்யத்தைத் தொழி லாகக்கொண்ட சிலர் தங்களைப் பலன் கேட்பவர் களுக்கு தங்களது ஜோஸ்யஞானத்தை வெளிப் படுத்தும் பொருட்டு இத்தகைய வசனங்களையும் இருளனுக்கு ராஜயோகம் பிறந்தால் பின்னையும் இரண்டு எலி அகப்படும் என்று சொல்லியும், ஜன்ம ராமர் வனத்திலே ஸீதையைச் சிறைவைத்ததும் என் கிற பாட்டைப்போல் அந்தந்த ஸந்தர்ப்பத்திற்கு ஒவ்வாதவற்றைச் சொல்லியும் பயமுறுத்துகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் அம்மட்டோடு நிற்பதுமில்லை. ஸ்ரீராம ஜாதக சோதனையில் இறங்கி விடுகிறார்கள்.

கோசாரத்தில் மட்டுமல்ல, அந்த ஜாதகத்திலேயே கிரகநிலை மோசமாயிருப்பதனுல்தான் ஸ்ரீராமர் காட்டுக்குப் போனுர், என்று முடிவும் கட்டிவிடுகிருர்கள். இம்மாதிரியானதைக் கண்டிக்கக் கருதி ஒரு சிறிது முக்கிய விஷயத்திலிருந்து விலகிப்போனதற்கு மன்னிப்பு.

15. ஸர்வேச்வரன் தசரத புத்திரர்களாய் அவதரித்து ஜகத்பிரஸித்திபெற்று வீரர்களாகவும், ஸர்வ ஸம்பத்துடையவர்களாகவும், ஸ்ரீராமர் ராஜாதிராஜராகவும் இருந்ததைக் காட்டுவதற்கு அவர் ஜாதகத்தில் ஹேஷ்யமுண்டோவென யோசிக்குங்கால், ஸாதாரண ஜ்யோதிஷ விதிகளைக்கொண்டு இதன் பலனை அறிய விரும்புவது பிசகென்றும், இப்பால், திரேதாயுகத்திற்கு, வெகுகாலங்கழித்து ஏற்பட்ட முறைகளைக்கொண்டு ஸ்ரீராமர் ஜாதகத்திற்குப் பலனுரைக்கப் புகுதல் அறிவின்மை என்றும், இப்போது செய்யக்கூடியது ஸ்ரீராமாமுதத்தை அருந்த அந்த ஜாதகங்களைப் பார்ப்பது ஒரு மார்க்கம் என்றும் கருதி, அதிலாழ்ந்தால் ஸ்ரீராமநாமமும் பக்தியும்போலே வெகு ஸ்வாரஸ்யமுண்டாகும். இந்த ஜாதகங்களின் மகிமையைச் சிந்திக்கச்சிந்திக்க அது அளவிலாத பரமானந்தத்தைத் தருகிறது. ஆகவே, சகலரும் இதர மார்க்கங்களுடன் இவ்வழியாலும் பகவத் தியானம்செய்து நற்பலனடையட்டுமென்று கருதியே இது எழுதப்படுகிறது. இவ்வழி எல்லா ராம பக்தர்களுக்கும் பயன்படாதிருக்கலாம். ஜோஸ்ய பரிசயமுடையவர்கள் பலருக்குமேகூட கவர்ச்சி தராமலிருக்கலாம். மேலும், எழுதுபவருக்கு சொல்

வன்மையில்லாததனுல், அது எவ்வளவு இன்பந்தரும் படி எழுதக்கூடுமோ அவ்வளவு ஸ்வாரஸ்யமாய் எழுதப்படாமலிருக்கலாம். எழுதுபவருக்கு இந்த ஜாதக சிந்தனை ப்ரஹ்மானந்தத்தைத் தருகிறபடியால், விஷய முக்கியத்துவத்தை முன்னிட்டு சக்திக்குத் தகுந்தபடி வழிகாட்டப்படுகிறது. ஆராய்ச்சி மார்க்கம் நூதனமாய்த் தென்படுவதால், இதைக் கிளப்பி விட்டால் கற்ரேர், பெரியோர், பக்திமான்கள் இதிலிறங்கி ஈடுபட்டு, ஆவன ஸவிஸ்தாரமாய்க் கற்று யோசித்து, மேன்மேலும் விஷயத்தைத் தெளிவாய் வரைந்து ஞானமும் பக்தியும் தழைத்தோங்கச் செய்வார்கள் என்று கருதியே இதை எழுதுவதில் இறங்கலாயிற்று.

16. கிரகங்களைச் சொல்லியானதும் கடைசியாக லக்நங்களைக் கூறியிருக்கிறது. ஸ்ரீராமர், லக்ஷ்மண சத்ருக்கனர் கடக லக்நத்தில் பிறந்தார்கள் என்றும் பரதர் மீன லக்நத்தில் பிறந்தார் என்றுமல்லவா கேட்டோம். அந்த வீட்டதிபதியும், குருவும் அதிலிருந்து குரு சந்திரயோகமாக அமைந்திருக்கும் கடகத்தின் மேன்மையைச் சொல்லவும் வேணுமோ. இது சந்திரனுக்கு எஞ்சிய வீடு. இதிலேயே அவருடைய ஆஸக்தி முழுமையும் ஆளப்பட வேண்டும். ப்ரதமத்தில் ப்ரபஞ்சம் முழுவதும், அதாவது 12-ராசிகளும், சூர்ய சந்திரர்களுக்குச் சொந்தமாயிருந்தது. இந்த இரண்டு கிரகங்களும் அநுசரித்தோ போட்டா போட்டியிலோ தூரத்திலிருக்கும் இரண்டு வீடுகளை மகர கும்பங்களை சூரிய புத்ரனை சனிக்கும், அதற்கடுத்த தனுசு மீனங்களை

குருவிற்கும், மேஷ விருச்சிகங்களை அங்காரகனுக்கும், ரிஷப துலாங்களை சுக்ரனுக்கும், மிதுன கன்னிகளை புதனுக்கும் கொடுத்தார்களென்றும், அல்லது குருபத்னி தாரா சந்திரன் ஸங்கம காரணமாக சந்திரன் புதனுக்கு மிதுனத்தைக் கொடுக்க அதன் பேரில் சூரியன் கன்னியை புதனுக்குக் கொடுக்க அதேபடி தலா ஒருவீடு ரிஷப துலாங்களை சுக்கிரனுக்கும், மேஷ விருச்சிகங்களை அங்காரகனுக்கும், தனுசு மீனங்களை குருவிற்கும், மகர கும்பங்களை சனிக்கும் கொடுக்க, அவர்களுக்கு சூரிய சந்திராளுக்கு ஒவ்வொரு வீடுமட்டும் நின்றதென்றும் கூறப்படுகிறது. எதாகிலும் சரி, சூரியனுக்கு சிம்மம் மிச்சம். சந்திரனுக்கு மிகுந்த வீடு கடகம். அதில் குரு உச்சம். அவர் பரதர் பிறந்த ச்லாக்யமான மீன லக்நத்திற்கு அதிபதி. அதைப் பார்க்கிறார். கடக லக்நத்தில் பிறந்தவன், அதில் பிறந்ததினாலேயே, கிரகங்கள் நல்லபடியாய் அமைந்திராவிட்டாலும், குறைவொன்றுமில்லாதவனாய் வாழ்வான் என்றல்லவா ஜோதிஷ சாஸ்திரம் சொல்லுகிறது. கம்பரும் நீடுறுமாலை கர்க்கடகம் என்றாரல்லவா. அப்படிப்பட்ட பெருமையுடைய தாகையால்தான் அதில் ஸ்ரீராமர், லக்ஷ்மணர், சத்ருக்நர் ஆகிய மூன்று ப்ராதாக்கள் அவதரித்தனர் போலும்.

வால்மீகி ராமாயணத்திலும், கம்ப ராமாயணத்திலும் கொடுக்கப்பட்ட ஸ்ரீ ராமர் ஜாதகவிஷயம் இந்த ஆராய்ச்சிஎழுதுபவருக்கு எட்டினவரை, புதுவழியில் கூடியமட்டில் ஸம்பூர்ணமாய் எழுதப்பட்டது. இதைப் பின்பற்றியோ, இதனால் தோன்றும் இதர வழிக

(1-முதல் 32-பக்கங்கள் திருத்தி மறுபடி அச்சிடப்பட்டன.)

விலோ அறிஞர் மேன்மேலும் நூல்கள் எழுதுவார்களாக.

### கணித பாகம்

17. இதுவரையில் ஸ்ரீ ராமாயணத்தில் உள்ள முன்னறிவிப்பு விஷயத்தில் முக்யமானதான ஜாதகத்தைப்பற்றி ராமாயணங்களில் உள்ளவைகளை பொறுக்கி எடுத்து **ஸ்ரீராமர் ஜாதகத்திலும்** சூரியன் உள்பட 5-கிரகங்கள்தான் உச்சமாயிருந்திருக்க வேணுமென்று நிதர்சனம் பண்ணினேம். ராமாயணத்தில் உள்ள கணக்குகளில் இறங்கவில்லை. இது மிகமிகப் பெரியவிஷயம். சமாளிக்க முடியாததென்றே சொல்லலாம். ஆனல் பற்பலருக்கு ஸ்ரீ ராமர் ஜாதக சம்பந்தமாய் வானசாஸ்திர கணிதத்திற்கு சரியாய் வராததினல் சூரியனும் ஸ்ரீ ராமர் ஜாதகத்தில்கூட உச்சமா என்கிற ஸந்தேகம் உண்டாகிவிடுகிறது. கலியுகத்தில் தென்னிந்தியாவிலுள்ள நாம், ஆயிரக்கணக்கான மைல்கள் தூரமாயுள்ள அயோத்யையின் திரேதாயுக நிலை எப்படி யிருந்ததென்று ஆராயப்புகுந்து ப்ரகிருதம் உள்ள பதகங்களிலிருந்து சுமார் 5000-வருஷங்கள் அதாவது 4864-வருஷங்கள் மட்டும் (அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு 2909-வருஷங்கள் முன்வரை மட்டும்) எட்டக்கூடியதினல் இந்தியாவின் இந்த பாகத்தில் வழங்கும் பதகங்களைக்கொண்டு வால்மீகி ராமாயணத்தில் அவர் கொடுத்திருக்கும் ஜாதக விவரம் தப்பென்று தீர்மானிக்க லாயக்கற்றவர்கள் என்று திடமான அபிப்பிராயம். ஆகிலும் கிளர்ச்சி கிளம்பினவரை அது சரியானதல்ல, யார் மனதிலும்

ஸ்ரீராமர் ஜாதகத்திலுங்கூட 5-கிரகங்கள் உச்சமாயிருந்திருக்கக்கூடும் என்பதற்கு சந்தேகமிருப்பதற்கில்லையென காட்டவேணும்.

18. இதை எழுதுபவர் ஜ்யோதிஷமே தொழிலாகக்கொண்டவருமல்ல. பஞ்சாங்கம் கணிக்கக் கூடியவருமல்ல. ஆனுல் பற்பல ஜோசியர்களையும் பஞ்சாங்கம் எழுதுபவர்களையும், வான சாஸ்திரக் கணக்குகளை யறிந்தவர்களையும் கலந்து பேசியதினுல் கிடைத்த ஞானத்தைக்கொண்டு விஷயங்களைக் கூடுமான அளவு விளக்கமாய் எடுத்துக் காட்ட முயலப்படும். பிழைகள் அபிப்பிராய பேதங்களிருந்தால் பொருத்தருள வேணுமாய்ப் பிரார்த்திக்கப் படுகிறது.

19. ஸ்ரீராமாயணத்தில் உள்ளதற்கு, மேலே காட்டியபடி சரியான அர்த்தம் பண்ணுமல், சிலர் தங்கள் திறத்தைக்காட்டி, விபரீதார்த்தம் செய்யப் புகுவதால் மிகப் பலருக்கு ஸந்தேகங்கள் உண்டாகி மனதிலேயே இருந்துகொண்டு வருகின்றன. இம் மாதிரி இல்லாத கிலேசத்தை உண்டுபண்ணுவது முற்றிலும் பிசகு. ஜோசிய கணிதம் சுமாராய்த் தெரிந்தவர்களில் சிலர் எப்படியய்யா நீர் ஐந்து கிரகங்கள் உச்சமென்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். பலர் ஏதோ அகாதமானதை சொல்லிவிட்டாப்போல் அலருகிருர்கள். இவ்வளவிற்கும் ஸ்ரீராமாயணத்தில் உள்ளவைகளை எல்லாவற்றையும் நன்ருய்க் கவனியாமல் குதர்க்கம் பண்ணுவதின் விளைவு இயன்றவ்வளவு மேலே எல்லாம் விசதமாய் எடுத்துரைக்கப்

பட்டிருக்கிறது. கணித பாகத்தையும் கூடுமான வரை கவனித்துப் பார்ப்போம்.

20. ஸ்ரீராமாயணத்தில் தசரதருடைய வயதும், ராவணனுடைய வயதும், ஸ்ரீராமருடைய வயதும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நீண்ட காலங்களை குறிப்பிடக்கூடியவைகளாகக் கொள்ள வேணும் என்பது பலருடைய கொள்கை. ஸ்ரீராமருடைய ஆட்சி "தச வர்ஷ ஸஹஸ்ராணி தச வர்ஷ சதானிச" என்பதனுல் பல பத்து ஆயிரங்கள் கணக்கானவையும் பத்து நூற்றுக்கள் கணக்கானவையும் என்று பொருள் கொள்ளவேணுமே தவிர குறிப்பாக 11000-என்று சொல்லக்கூடாது. முகூர்த்தம் என்பதற்கு அர்த்தம் வெவ்வேறிடங்களில் ஸந்நிவேசத்திற்குத் தகுந்தபடி அர்த்தமாகிறதாகக் காட்டியிருக்கிறதல்லவா. வால்மீகி அக்ஷௌஹிணி முதலிய சேனைகளுடைய கணக்குகளையும், யோஜனைகள் முதலிய தூரத்தின் கணக்குகளையும் கொடுத்திருக்கிறார். அதனுல் அக்காலத்தில் வழங்கப்பட்ட லக்கமிடும் வழக்கங்களை யறியவேணும். கவிகளுக்கு எண்ணிக்கைகளை சுருராய் சொல்ல வேணுமென்கிற நிர்ப்பந்தம் கிடையாது. ஆகவே, இங்கேகூட தவருகச் சொல்ல அநுமதி (Poetic Licence) உண்டோ வென்று கேட்டுவிடக்கூடாது. இங்கே கருக்காய்ச் சொல்லியிருக்கிருர் என்று நிஸ்ஸந்தேகமாய் காட்டப்பட்டது. கிளர்ச்சிக்காரர்களில் சிலர் சொல்லுபவற்றை எடுத்துரைத்து அவை தப்பென்று காட்டப்படுகிறது.

1. ஸ்ரீ A. K. சாஸ்திரியார் வடமொழி ஆசிரியர் கோயம்புத்தூர். இது பலர் சொல்வதற்கு ஒரு உதாரணம்.

(a) ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் "ஸ்வோச்சஸம்ஸ்த்தேஷு பஞ்சஸு" என்பதனுல் ஸ்ரீ ராமபிரான் ஐந்து கிரகங்கள் தத்தம் உச்சஸ்தானங்களில் இருக்கையில் பிறந்தாரென்று பொருள்படும்படிக் கூறுகிறது. சைத்ர சுக்ல நவமிதிதி சித்திரையிலும் வரக்கூடும். ஐந்துகிரகங்கள் உச்சமென்றதினுல் ரவி மேஷத்திலேயே இருத்தல்வேண்டும். புனர்ப்பூசம் 4-ம் பாதமானதினுல் சந்திரன் கடகத்தில் வியாழனுடன் அப்படியானுல் ரவிஸ்புடம் 0-0-0-முதல் 1-0-0-வரையில் இருக்கலாம். ரவியை பரமோச்சம் சொல்லவேணுமானுல் 0-9-0 ஸ்புடம் இருக்கவேணும் [யாரும் பரமோச்சம் சொல்லப்புகவில்லை]. சூரியன் உச்ச ராசியில் இருப்பதாக ஒப்புக்கொள்வோம். நிற்க சந்திரனின் ஸ்புடம், ரா. 3-3-20-க்கு அதாவது 93-பாகைகளுக்கு கூடாமலும் 90-பாகைகளுக்கு குறையாமலும் இருக்கவேண்டியது அவசியம். இந்த ரவி சந்த்ர ஸ்புடங்களால் திதி நவமி ஏற்படுவது துர்லபமாயிருக்கிறது. 30-திதிகளுக்கு 360-பாகைகளானுல் ஒரு திதிக்கு 12-பாகைகளல்லவா. மதியினின்றும் ரவியைக் கழித்து எஞ்சிய பாகைகளை பனிரெண்டால் வகுக்குமளவில் சப்தமி கததிதி ரவிஸ்புடம் பூஜ்யம் என்று இருந்தாலும் 7¾-வரும், இன்னமும் கததிதி சப்தமியும் தத்காலத்தில் அஷ்டமியும் வரும். லக்னம் கடகமானதால் சித்திரை மாதம் மாதப்பிறப்பு நாளாயிருந்தாலல்லது ரவிஸ்புடம் பூஜ்யமாய்

இருக்கமுடியாது. அதுவும் மேஷ ஸங்க்ரமணம் கடக லக்னத்தில் இருந்தால்தான் சரியாய்வரும். ஆகவே, ரவியை உச்ச ராசியில் முற்பாகத்தில் இருந்ததாக ஒப்புக்கொள்வோமானுலும் நவமிதிதி கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. சாயன ஸ்புடங்களாலும் இந்த தோஷம் அப்படியே சம்பவிக்கும். ஆகவே, ஸ்ரீ ராமபிரான் ஜாதகத்தில் 5-கிரகங்கள் உச்சமென்று பொருளுரைப்பது பொருந்தவில்லை.......... ................................ஸ்வோச்சஸம்ஸ்த்தேஷு என்கிறதின் பொருளை ஸ்வக்ஷேத்திரத்திலும்[ஆட்சியிலும் உச்சத்திலும்] ஐந்து கிரகங்களிருக்க எனக் கொள்ளவேணும். ஸ்ரீ ராமனின் ஜாதகம் ஆதியில் வால்மீகியால் எழுதப்படவில்லை. பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.”

இதற்குப் பதில் ஏற்கனவே சொல்லப்பட்டது. ஸ்புடவிதி மதராஸ் அல்லது தென்னிந்தியாவிற்கும், அயோத்யைக்கும், லண்டனுக்கும், மாஸ்கோவிற்கும ஒரே மாதிரியாயிருக்க முடியாது. மேலும் ரவி மீனத்திலிருந்தால் 6-ருதுக்கள் கழிந்தன முடிந்துவிட்டன என்று சொன்னதற்கு அர்த்தமில்லை. சூரியன் சிசிர ருதுவில் மீனத்தில் இல்லை என்றுதான் நிதர்சனமான பொருள். மேலும் விருத்தி க்ஷய திதிகளைக் கணக்கிடுவதையும், அயனசலனத்தையும் (Precession of equinoxes-யும் யோசனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இங்கிலீஷில் நான்கு வருஷத்திற்கு ஒரு முறை பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் அதிகமாக்கி (Leap Year) கணக்கிடவில்லையா? அப்படி ஒரு தினம் அன்றுதானு அதிகப்படுகிறது. நான்கு வருஷங்

களுக்கு பிரதி வருஷம் ¼-நாளாக சேர்ந்ததை யல்லவா ஒரு நாளாகக் கணக்கிடப்படுகிறது. சாந்த்ரமான ரீதியாய் கணக்கிட்டால் அதிக மாதம் வரவில்லையா? ஸௌரமான ரீதியாய் சில மாதங்களில் 29-தேதியும் சிலவைகளில் 32-தேதியும் வரவில்லையா? முப்பதே தினங்களைக்கொண்டு கணக்கிட்டால் எப்படியாகும். அஷ்டமி க்ஷய திதியாக இருந்ததை ப்ரத்யக்ஷமாகக் கண்டிருக்கலாம். சித்திரை மாதப் பிறப்பு தினமாயிருந்திருக்கலாம் என்று காட்டப்பட்டது. வால்மீகி ஏழாவது ருதுவில் நாட்களாய்விட்டதாக எண்பிக்கவில்லை. ஆகவே, அஷ்டமி கடந்து நவமி துவக்கமாயிருக்கலாம். மும்மரமாய் பேசுகையில் வேடிக்கைக்கு இடமில்லை. ஆகிலும் ஒரு சிறிய ஹாஸ்ய வார்த்தைபோல் பகவான் அவதரிக்கும் ப்ரஸாதத்தைப் பெறுவதற்கு நவமி முந்திக்கொண்டிருக்கலாம் எனலாம்.

(b) ஸ்ரீராமர் ஜாதகத்தில் ரவி மீனத்தில் இருக்கையில் சுக்கிரன் உற்று ஆலோசிக்கையில் ரகுவுக்கும் கவி ஜாதகம் எழுதினதாகத் தோன்றுது. ஐந்து கிரகங்கள் உச்சமானல் அரச குலத்துதித்தவர் சக்ரவர்த்தியாவான் என்கிற "வராஹமிஹிரர்" உரைப்படி 5-கிரகங்கள் உச்சத்தி லமர்ந்துளவென்று மாத்திரம் சூசிப்பித்தார்போலும். போஜசம்பூ என்கிற வடமொழி கிரந்தத்தில் "உச்சஸ்தேகிரக பஞ்சகே" என்ற ச்லோகம் ஸ்ரீராமாயணத்தின் பொருள் விளங்காமலாவது ஸ்ரீராமனின் ஜாதகம் சேர்க்கப்பட்ட பின்னுவது எழுதப்பட்டு இருக்கலாம். இதும் பெரிய விந்தை. ஸம்ஸ்கிருத மஹாகவி காளிதாஸ

ருக்கும், போஜ கவிக்கும், மாபெரும் வியாக்யான கர்த்தாக்களுக்கும் அர்த்தம் விளங்காமல், இருபதாவது நூற்றுண்டு ஸம்ஸ்கிருத வித்வான்களுக்கு சரியான அர்த்தம் விண்டாப்போல் என்பிப்பது பெருந்தப்பு. ஸ்வோச்ச என்பதை இரண்டு அசைகளாகப் பிரித்து தனித்தனி அர்த்தம் பண்ணக் கூடாதென்று காட்டப்பட்டது. ஒரே பதமாக வைத்துக்கொண்டு பொருள் செய்து ஐந்து கிரகங்கள் உச்சம் நவமி நிஸ்ஸந்தேகம் என்று வைத்துக் கொண்டு மறுநாள் லக்ஷ்மண சத்ருக்நர்கள் பிறந்த போது தசமி என்று சொல்லிப்போந்தனர் சிலர். ஆனல், அப்போதும் நவமி என்பதற்கு ஐயமில்லை என்று நிரூபிக்கப்பட்டது.

(c) ஸீதா கல்யாணம் பட்டாபிஷேகம் மற்றைய குமாரர்களின் லக்னமும் கோள் நிலையும் கொடுக்கப் படவில்லை. ஆகவே, ஸ்ரீ ராமர் ப்ராதாக்களுடைய சாதகம் "ப்ரம்சிதம்" ப்ரக்ஷிப்தம். பதில் முகூர்த்தங்களுக்கு லக்னம் எடுக்கப்படவில்லை. தினத்தை (பகலையும் இரவையும்) 15-முகூர்த்தங்களாக பிரிக்கப் பட்டு முகூர்த்த நிர்ணயம் செய்யப்பட்டதைப் பார்த்தோம். ஆகவே ஜனனத்திற்கு மட்டும் லக்னம் சொன்னதில் அசம்பாவிதமில்லை. ஸ்ரீ ராமாயணத்தில் அந்த அவதார புருஷர்களான ப்ராதாக்களுக்கு ஜாதகம் எழுதாமல் மற்ற யாருக்குத்தான் எழுதப் பட்டிருக்க வேணுமென்கிறார்களோ இத்தகையார் என்பது விளங்கவில்லை.

(d) ஸ்ரீ ராமாயண காலத்தில் வராஹமிஹிரர் கூறிய ஜோதிஷவிதி அநுசரிக்கப்பட்டதா அதற்

காக வால்மீகி ஜாதகம் எழுதியிருப்பாரோ என்பதற்கு எவ்வளவு எட்டிப்பார்த்தாலும் ஆதாரமில்லை. வராஹமிஹிரர் கலியுகத்தவர். அவர் அந்த ஜோதிஷ விதியைச் சொல்லுவதற்கு முன், அது வழங்கி வந்ததா என்பதற்கு ஆதாரமில்லை. முன்னவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது விஷயத்தில் சுவற்ப அறிவுள்ள கலியுகத்திய நம்மவர்கள் ஸ்ரீ ராமாயணத்தின் அடிப்படையான ச்லோகங்களையே விபரீத அர்த்தத்துடன் தாக்குவது தகுதியற்றதென அபிப்பிராயத்தைச் சொல்லி நிறுத்துவோம்.

21. நாம் ஏற்கனவே வருஷங்களுக்கு 60-பேர்கள் இருந்ததாகக் காணப்படவில்லை என்றோம். வார தினங்களும் வழங்கப்பட்டதாகக் காணோம். ஸௌர மான ரீதியாய் வருஷங்கள் கணக்கிடப்பட்டதாகவும் தெரியவில்லை. "சைத்ரே நாவமிகே திதௌ" என்றதனால் சாந்த்ரமானமாதம் ருதுக்கள் சொல்லப்படுவதனால் ஸௌரமானப்படி கால அளவு யாகம், யக்ஞம் முதலிய சிலவகைகளுக்கு மட்டும் பார்க்கப்பட்டனவென்று ஏற்படுகிறது.

ஆகவே கீழ்க்கண்டவைகளுக்காவது மற்றும் ஸ்ரீராம ஜாதகத்தின் வருஷ மாத வாரதினங்களென்னப்பட்ட பலவைகளுக்காவது ஆதாரமில்லை என்கிறோம்.

(1) ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் உரையுடன் கம்பராமாயணம் திருவவதாரப் படலம் 109-பாசுர உரையில் ஸ்வபாநு வருஷத்து மேஷ மாசத்து பூர்வபக்ஷ நவமி திதியில் புனர்வசு 4-ம்

பாதத்தில் '**புதன்கிழமை**' கடகலக்னத்தில் ஸ்ரீராமர் அவதரித்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனல், அவர்தான் ஜோதிஷ சாஸ்திரந் தெரிந்தவரல்லவென்றும் சாஸ்திரமறிந்தவர்களிடம் நுட்ப விஷயங்களைக் கேட்டறிந்துக் கொள்ளும்படியும் சொல்லிவிட்டார்.

(2) ஜோதிட கலாநிதி என்னும் மாதாந்திரப் பத்திரிகை ஆசிரியரும் வருஷப்பேரும் கிழமையும் மற்றும் பலவிவரங்களும் கொடுத்திருக்கிறார் அவை பின் வருமாறு:—

"ச்வேத வராஹ கல்பத்தில் ஏழாவது மங்வந்தரத்தில் 28-வது மகாயுகம் இப்போது நிகழ்கின்றது. ஏழாவதாகிய வைவஸ்த மங்வந்தரத்தின் ஆரம்பமுதல் **5**-வது மகாயுகத்தில் 29959-வருஷங்கள் சென்றபின் **விளம்பி** வருஷம் சைத்ர நவமி திதியில் **புத**வாரத்தில் புனர்வசு நக்ஷத்திரத்தின் 4-ம் பாதத்தில் ஸ்ரீராமர் **அவதரித்தார்.** இவரும் சூரியன் **மீனத்**தில் என்கிறார். அதற்குப் பதில் சிசிர ருதுவில் அல்ல. அது கழிந்து போனபின் வஸந்த ருதுவில் என்று காட்டப்பட்டது.

(3) மற்றொருவர் ஸ்ரீராமர் த்ரேதாயுகம் 28-வது சதுர்யுகத்தில் **ஹேவிளம்பி** வருஷம் சித்திரை மாதம் 11-ந் தேதி புனர்வசு நக்ஷத்திரம் நவமி திதியில் பகல் நாழிகை 11-விநடி 59-ல் அவதரித்தார் என்று சொல்வதாக Madras Government Oriental Series சப்தரிஷிநாடி Vol. III மிதுனலக்னத்தின் முன்னுரை XVI பக்கத்தில் சொல்லியிருக்கிறது. இது சரியாயிராதென்று தோன்றுகிறது. வருஷப் பெயர் அப்போது

கிடையாது. ஸௌரமான மாதம் அப்போது வழங்கப்பட்டதாக இல்லை. சித்திரை மாதம் 11-தேதியானல் புனர்வசு 4-ம் பாதமும் நவமி திதியும் அயோத்தியையின் தேசாம்ச அக்ஷாம்ச பாகை கலைகளுக்குங்கூட இருக்கவே முடியாது. ஏற்கனவே மேஷஸங்க்ரமண தினத்திலேயே நவமி கிடைக்கா தென்கிருர்களென்ருல் இவை சித்திரை பதினேராந் தேதிக்கு எப்படி கிடைக்கும்? வால்மீகியும் வசந்த ருதுவில் 1/6-க்குமேல் சென்றுவிட்டதாகச் சொல்ல வில்லை. இது விஷயமாய் நான்காவது வால்யும் கடக லக்னத்தைப்பற்றி Madras Government Oriental Series என்ன சொல்லுகிருர்களென்று காண ஆவலாயிருக்கிறது. பழைய நூலுரையோடு நிற்காமல் இப்போதையவருடைய கூற்றுக்களை எடுத்துரைப்பதானல் வான சாஸ்த்திர கணிதத்தையும் கவனிக்கவேணுமாயிருக்கிறது. இல்லாவிடில் ஏற்கனவே இருக்கும் அனுவசியமான கலக்கம் அதிகப்படும்.

22. இதுவரை கூறியவைகளிலிருந்து வால்மீகி கொடுத்த ஜாதக விபரம் தப்பா? அவர் அசம்பாவிதமானதை தெரியாமல் பாடிவிட்டாரா? நம் காலத்தில் தென்னிந்தியர் சிலர்தான் ஜோதிஷ ஞானமும் கணிதமும் தெரிந்த நிபுணர்களா? வால்மீகி உண்மையல்லாததையோ கணிதத்திற்கு ஒவ்வாததையோ பாடிப் போந்தார் என்பதற்கு பற்பல ஆயிரவருஷங்களுக்கு முன் அயோத்தியைக்கு கணக்கிடாமல் தென்னிந்தியாவிற்குஇப்போதைக்கு கணக்கிட்டு தாங்கள் அபசாரப்படுவது மில்லாமல் விஷயம் நன்ருய்த் தெரியாத பலரையும் பெருஞ் சந்தேகங்

களுக்கு உட்படுத்துவது மிகத்தவறு. கோவிந்த ராஜீயம், மகேச்வர தீர்த்தீயம், திலகம், ராமானுஜீயம், முனிபாவப்ரகாசிகை முதலிய எல்லா மாபெரும் வியாக்யானங்களிலும் சூரியன் முதலிய ஐந்து கிரகங்கள் தங்கள் தங்களிட உச்சஸ்தானங்களில் இருக்கையில் - என்று ஸ்பஷ்டமாய் சொல்லி யிருக்கிறது. வால்மீகி ராமாயண விஷயங்கள் எல்லாவற்றையும் வரப்பிரஸாதத்தால் ப்ரத்யக்ஷமாய் கண்டு பாடினது சரி என்று தீர்க்கமாய் மனதில் வைத்துக்கொண்டு கிரந்தத்தை இருக்கிறபடியே சரியாய் வாசித்து நேர்மையான அர்த்தங்களைப் பண்ணிக்கொண்டு பிறருக்கும் சொல்வது ச்லாக்கியமாகும்.

23. ஏனென்றால் வானசாஸ்திர கணிதமும் எல்லா காலத்திலும் ஒரே வழியாய்த்தான் இருந்திருக்குமென்பதற்கு இல்லை. எத்தனை யுகங்களென்பது கெட்டியாயிருந்தாலும் எந்தெந்த யுகங்களில் எவ்வளவெவ்வளவு சகாப்தங்கள் மன்வந்தரங்கள் இருந்தன, ஒவ்வொன்றிலும் எத்தனை வருஷங்கள் இருந்தன வென்பதில் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. எல்லாம் வித்தியாசமற்றிருந்தன வென்றாலும் அயன சலனத்திலேயே பேதமிருக்கிறது. ஒரே ஆங்கிலமுறைக் கணக்கே நிஷ்கரிஷையாய் ஒரே விதமாய் இல்லை. அயன சலனம் (Precession of Equinoxes) 1900-வருஷத்திற்கு முன்-0026. T. என்றிருந்ததாகவும் பிறகு 0-0-2225. T. என்று மாறியதாகவும், 1925-வருஷத்திற்கு முன் Negative ஆக இருந்ததாயும் அதற்குப் பிறகு Positive ஆக ஆய்விட்டதாகவும் வான சாஸ்திர கணித நிபுணர்கள் சொல்லுகிறார்

கள். இம்மாதிரி கணக்கு மாறுதல்கள் ஏற்படுவதி ஞல், 13-4-1956-சுமாரில்வரும் துன்முகிவருஷ மாதப் பிறப்பை 21-3-1956-வைத்துக்கொண்டு வருஷம் மாதம் தேதிகளையே புதிதாய் கணக்கிடவேணு மென்று Calender Reform Committee சிபார்சு செய் திருப்பதாக 1-6-1955-புதன்கிழமை Hindu பேபரில் இருக்கிறது. எந்தக் கணக்கின்பேரில் நம்பிக்கை வைத்து ஸ்ரீராமர்ஜாதகத்தைநிர்யணம்பண்ணுவது? L.D. ஸ்வாமி கண்ணுப்பிள்ளை தன்னிட நூற்றுண்டுப் பஞ்சாங்கங்கள் Vol. I, Part I-ல் ஸ்ரீராமர் ஜாதகத் தைப் பற்றி சொல்லுகையில் Bentley's Table என்ப தைக்கொண்டு கிறிஸ்து பிறப்பதற்கு முன் 2909 வருஷம் வரைத்தான் போயிருக்கிறூர். அதற்கப்பால் போகவில்லை. அவர் கிறிஸ்து பிறப்பதற்கு முன், 2909, 2732, 2435, 2055, 1818, 1201, 1141, 962, 727, 287, 110, 50-வருஷங்களிலும் கிறிஸ்து பிறந்தபின் 188, 568, 805-வருஷங்களிலும் கிரகநிலை ஸ்ரீராமர் ஜாதகத்தில் குறிப்பிட்டபடி இருந்திருக்கலாம் என் றும் கி.பி. முன் 962-961-வருஷ நிலைமையே ரொம்ப ஒத்திருக்கிறதென்றும் சொல்லுகிறூர். ஸ்ரீராமர் இவ்வளவு அருகாமையில் அவதரித்திருக்கக்கூடும் என்று யார்தான் சொல்லுவார்கள்? ஆகவே இக் காலத்தியபதகங்களைக்கொண்டு சுமார் 5000 வருஷங் கள் வரை எட்டலாமே தவிர இன்னும் பின்னே போக முடியாதாகையால் கொஞ்ச சாஸ்திரஞானம் பெற்றிருக்கும் நாம் திரேதாயுகத்தில் ஸ்ரீவால்மீகி எழுதினது தப்பெனக்கூடாது. சின்னஞ்சிறு அளவு கோலைக்கொண்டு உலகத்தை அளக்க எத்தனிப்

பது போலாகும். ஆகையால் இதைப்படிப்போருக்கு ஆதாரபூர்வமாய் கெட்டியாய்ச் சொல்லக்கூடியது ஒன்றே ஒன்றுதான். யார் என்ன சொன்னாலும் மனதில் சலனமே கொள்ளக்கூடாது. வால்மீகி நிஸ்ஸந்தேகமாய் ஸ்ரீ ராமர் பிறந்தபோது கூட ஐந்து கிரகங்கள் உச்சம் என்று உண்மையாய் உள்ள படியே சரியாய் ஆச்சர்யமாய் பாடியிருக்கிறார் என்று ஸ்திரமாய் மனதில் வைத்துக் கொள்ளவேணும். அந்த அபிப்பிராயத்துடன் ஸ்ரீ ராமாயணத்தை கவனமாய் படித்தால் மேன்மேலும் நல்ல அர்த்தங்கள் தோன்றும். கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஸாதித்தருளியபடி, எல்லா விஷயங்களைப் போல் இதிலும் ஸம்சய ஆத்மாவாய் இருக்கக்கூடாது. ஆழ்ந்த பக்தியுடன் ஸ்ரீ ராமாயணம் படனம் பண்ணு பவர்களுக்கு ஸகல ச்ரேயஸ்களும் ஸம்பத்துக்களும் தீர்க்காயுசும் இகபர சுகங்களும் கிடைக்குமென்பது திண்ணம்.

## 2. கோசாரம்

1. முன்னே ஜாதகம் பார்த்துப் பலன் சொல்லு பவருக்கு ஜோஸ்யர் என்று பெயர் - என்பது, சாதா ரண அபிப்பிராயமென்று சொன்னோமல்லவா. ஜாதகம் பார்ப்பதில் வெகு நுணுக்கங்கள் ஏற்பட்டு, மேல்நாட்டு வழிகளுடன் கலந்து படித்துப் பலன் சொல்லுவது வித்பன்னர்களுடைய மார்க்கமாயிருக் கிறது. இம்முறைகள்படி சரியாய்க் கணக்கிட்டு பல னுரைப்பதென்றால், மணி, நிமிஷங்களுடன் சுருராய் எதிர்காலத்தில் வரக்கூடியதை நிர்ணயம்பண்ணிச் சொல்லமுடியும். இதைக் கையாளும் வித்பன்னர் அவ்வளவு அதிக மிருக்கிறார்களென்று சொல்ல முடியாது. இருக்கிறவர்களுக்குத் தகுந்த சன்மானங் கொடுத்துப் பலனறியக் கூடியவர்கள் கம்மி. சாஸ்திர சாலைகளும், கிரந்தங்களும், பத்திரிகைகளும் ஞானத் தைப் பரப்பிக்கொண்டு வருகின்றன. மனுஷ்யர் களுடைய இவ்வவாவைத் தீர்க்க, ஏதோ சில பத்திரி கைகள் தவிர, மற்றெல்லா தினசரி, வார, மாதாந் திரப் பத்திரிகைகளும் கோசார பலன், ராசி பலன், வாரப் பலன் என்று எழுதிவருகிறார்கள். இது சுலபம். இந்த விஷயம் வெளிவரும் தினப் பத்திரி கைகள் அதிகமாய் விலையாகின்றன. ஒரே மனிதன் ஒரு பத்திரிகைக்கு மேல், சிலசமயம் பல பத்திரிகை களை வாங்கிப் படிக்கிறான். அவைகளை ஊன்றிப் பார்த்து ஒன்றோடொன்று ஒத்திட்டுப் பார்க்கிறான். முதலில் சாஸ்திரம் தெரியாதவன்கூட பலனையறிகிற தற்காகப் படித்துக்கொண்டே வந்தால், ஜோஸ்ய ஞானம் பெறுகிறான். தானேயும் நாளடைவில் பல

னுரைக்கப் புகுகிறன். வாங்குகிறவர்கள் படிப்பது போக, அவர்களிடம் இரவல் வாங்கி வாசிப்பவர் பலர். ஆகவே, சாஸ்திரம் வ்ருத்தியாகிறது. எல்லாருடைய நன்மதிப்பிற்காகவும், தப்பில்லாமலிருக்கும் பொருட்டும், எழுதுகிறவர்களும் நன்ருய் எழுத வேண்டுமல்லவா? மேலும், இதை நம்பி பல வேலைகளில் இறங்குவதாகத் தெரிகிறபடியால் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பலனுரைக்கவேண்டும்.

2. கோசார ரீதியாய்ப் பலனறிவதற்கு, ஒருவனது ஜன்ம நக்ஷத்திரம் பூரா நக்ஷத்திரமும் ஒரு ராசியிலேயே இருப்பதானல் நக்ஷத்திரமும், பின்னமாய் இரண்டு ராசிகளில் இருப்பதானல் பாதமும் தெரிந்தால் போதும். அதன்மேல் பலன் பார்க்கும் காலத்தில், கிரகங்கள் எந்த நிலையில் இருக்கிறர்கள் என்று அறிந்து பலன் கூறலாம். இப்படி பலன் சொல்லுவதற்கு ஸ்ரீராமாயணத்தில் ஒரு குறிப்பு இருக்கிறது. அதாவது, அயோத்யாகாண்டம் 4-வது ஸர்க்கம், 17,19-வது ச்லோகங்களில் [II-4 (17-19)] தசரதர் தாம் கெட்டகுறிகள் கண்டதாகவும், ஜோஸ்யர்களைக் கேட்டால் தம்முடைய ஜன்ம நக்ஷத்திரம் சூரியன், செவ்வாய், ராகு முதலிய பாபக் கிரகங்களால் பீடிக்கப் பட்டிருப்பதாய்ச் சொல்வதாயும் ஸ்ரீராமருக்குச் சொல்லி, அவைகளின் பலன் ராஜாவின் மரணத்தைக் காட்டுகிறதாகவும், அதனலேயே ஸ்ரீராமருக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்து வைக்க விரும்புவதாகவும் இருக்கிறது. தசரதருடைய ஜன்ம நக்ஷத்திரம் இன்னதென்று வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்பட்டில்லை. அது பரணி என்

கிறார்கள். எதுவாகிலும் சரி, மேஷ ராசியில் இந்த கிரகங்கள் இருக்கையில் இந்த ஸம்சயம் ஏற்பட்டு, அதை முன்னே தடுக்க யத்தனித்து சாத்தியப் படாமல் ராஜ மரண ஸம்பவமும் நேர்ந்துவிட்டது. தகப்பனாருக்குக் கெடுதலான காலமாயிருந்தால், பிள்ளைக்கும் தகுந்தபடி கஷ்ட வேளையாய்த் தானிருக்கும். ஸ்ரீ ராமருடைய ஜாதக ரீதியாய் அவருடைய ராசிக்கு கிரகநிலை எப்படி இருந்ததென்று பார்ப்போம். 'இன்று புனர்வசு, நாளைக்கு புஷ்யம்' என்றதினால், சந்திரன் 12-லேயோ, ஜன்மத்திலேயோ இருந்திருக்கவேண்டும். சூரியனும், அங்காரகனும், ராகுவும் மேஷத்தில் பத்தாமிடத்தில். ராகு மேஷத்தில் என்றால், கேது 4-ல் துலாத்தில். சாதாரணமாக, கோசார பலன் சொல்லுவதற்கு நீண்ட நாள் ராசிகளில் வசிக்கும் சனியையும், குருவையும் ராகு கேதுக்களையும் முக்கியமாய்ப் பார்ப்பது. இவர்கள் முறையே, $2\frac{1}{2}$-வருஷமும், 1-வருஷமும், $1\frac{1}{2}$-வருஷமும் ஒரு ராசியில் சஞ்சாரம் செய்வது. இவர்களில் குருவும் சனியும் ஸ்ரீ ராமருடைய ஜனன காலத்தில் ஜன்மத்திலும், [துலாத்திலும்] நான்கிலும், இருந்தார்கள் என்பது நிஸ்ஸந்தேகமானது. இவர்கள் ஸ்ரீ ராமர்வனவாசஞ்சென்று தசரதர் மரணமடைந்த போது எங்கிருந்தார்கள் என்பது ஸ்ரீ ராமாயணத்தில் இல்லை. ஊகையில் இறங்கினால்தான் அறியமுடியும். அப்படி **ஊகித்து நிர்ணயிக்க மனமில்லை.** ஆகிலும் சாஸ்திர சர்ச்சைக்காக மன்னிப்புடன் அப்படி செய்து பார்ப்போம். இதற்கு, அப்போது ஸ்ரீ ராமருடைய வயது என்னவென்று தெரிந்துகொள்ள

வேண்டும். இது நிர்விவாதமான விஷயமல்ல. சர்ச்சைகள் கிளப்பப்பட்டு அவரவருடைய வாதத்திற்கு உபயோகமானவற்றை வாதஞ்செய்பவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள், இருக்கட்டும், நமக்குச் சரியென்று புலப்படுவதை நாம் சொல்வோம். இதைப் படிப்பவர்கள் அங்கீகரிப்பார்கள் என்கிற நம்பிக்கை. ஸ்ரீராமரை விச்வாமித்திர மஹரிஷி யாகஸம்ரக்ஷணைக்கு அழைத்துப் போனபோது வயதும், ராவண சந்நியாசிக்கு சீதை கொடுத்த வயதும், இன்னும் சிலவைகளும் தர்க்கிக்கப்படுகின்றன. ஆகவே, நிஸ்ஸந்தேகமாய் இந்த வயதில்தான் இன்னது நடந்ததென்று சாதிக்கமுடியாது. ஒருவாறாக நிர்ணயித்துக்கொண்டு, ஸ்ரீராமருடைய கோசாரப் பலன்களை கூடுமானவரை ஆராய்ந்து பார்ப்போம். ஸ்ரீராமரை விச்வாமித்திரர் கூப்பிட்டபோது தசரதர் "பதினாறு வயதாகாதவன்," என்றதினால் பதினாறுவது ஆண்டு நடந்ததா எனில், அல்ல. அக்காலத்தில் பதினாறு நிரம்பினால்தான் யுக்த வயது வந்ததாகக் கருதியதாய்த் தெரிகிறபடியால், யுக்த வயது வராதவனென்பதற்காகச் சொன்னதாகத் தெரிகிறது. அப்போது வயது பனிரண்டுதான் என்றும் ஆரண்ய காண்டம் 38-வது சர்க்கம் 6-வது ச்லோகத்தில் மாரீசன் ராவணனுக்கு ஸ்ரீராமரை விச்வாமித்திரர் அழைத்தபோது தசரதர் அவன் (ராமன்) பனிரண்டு வயது பாலகன் ஆயுதப் பயிற்சி இல்லாதவன் என்று கூறியதாகச் சொன்னதினால் விளங்குகிறது. விச்வாமித்திர யாக ஸம்ரக்ஷணை யானவுடனே ஜனகருடைய யாகத்திற்கு அவர் ராமலக்ஷ்மணர்களை

அழைத்துப் போனபோது விவாகம் நிச்சயிக்கப் பட்டு உடனே நடந்தேறியது. பிறகு ஸீதா சகிதமாய் ஸ்ரீராமர் 12-வருஷ காலம் அயோத்யையில் சந்தோஷமாய் வாசஞ்செய்தார். இதை முன்னிட்டே, ஆரண்ய காண்டம், 47-வது சர்க்கம், 10½-ச்லோகத்தில், [III-47(10½)] கபட ராவண சந்நியாசிக்கு நிஷ்களங்கமான சீதாதேவி ஸ்ரீராமருடைய வயதைச் சொல்லுங்கால், "அவர் காட்டுக்குப் புறம்படும் போது அவருக்கு வயது 25" என்கிறாள். சாதாரண முறையில், குரு வருஷத்திற்கு ஒரு ராசியில் வசிக்கிறார். ஜனன காலத்தில் ஜன்ம ராசியில் இருந்த குரு, 13, 25, 37-வருஷங்களில் அந்த ராசியில் இருந்திருக்கவேண்டும். சீதை ராவணனால் அபகரிக்கப் பட்டது வனவாச 14-வது வருஷத்தின் ஆரம்பத்தில், அதாவது ஸ்ரீராமரின் 37-வது வயதில். அப்போது குரு கடகத்தில் இருந்திருக்கலாம். அந்த வருஷம் பூர்த்தியாய் குரு இரண்டாமிடம் போனதும் அவர் ராவணனைக்கொன்று சீதையை மீட்டு வந்து பட்டாபிஷேகஞ் செய்துகொண்டார் எனலாமோ? குரு ஜன்மராசியிலிருந்தபோது சனியும் அங்கிருந்திருக்கக்கூடும். சுக்கிரனும் புதனும் இருந்த இடத்தைக் கண்டுபிடிக்கமுடியாது. சொற்பகாலம் சஞ்சரிப்பவர்களாகையால் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. ஆகவே ஜன்மத்தில் சந்திரனும் குருவும், சனியும், நான்கில் கேது, பத்தில் சூர்யன், அங்காரகன், ராகு இருந்த காலத்தில் பிதுர்வியோகமும், வனவாசமும் ஏற்பட்டது. இந்த கிரக நிலைக்குத் தனித்தனியே பலன் சொல்லவேண்டுவதில்லை

யன்றே. மேலும் இதெல்லாம் வெறும் ஊகை - உண்மையில்லை தெரியாமல் பலனுரைக்கப் புகுதல் பெரும்பிசகு.

3. கோசார ரீதியாய் ஜோஸ்யம் பார்க்கும் விஷயத்தை விடுமுன் சில சங்கதிகளைச் சொல்லவேணுமாய்த் தோன்றுகிறது. மேற்சொன்னபடியே ஊகையாகவே கணக்கிட்டோமானல், ஸ்ரீராமர், ராவண வதம் செய்து திரும்பிவந்து பட்டாபிஷேகம் செய்து கொண்டபோது நிதானமாய் சஞ்சரிக்கும் கிரகங்களின் நிலைமை: குரு இரண்டாமிடத்திலும், சனி 6-வது வீட்டிலும், ராகு மூன்றாவது வீட்டிலும், சூர்யன் 10-வது வீட்டிலுமாக இருந்திருக்கவேண்டும். இந்த சந்தர்ப்பம் வெகு நல்ல பலனைக் கொடுக்கக் கூடியதல்லவா?

4. ஸ்ரீராமருடைய அவதார ஸந்நிவேசங்களைக் கொண்டு, மனுஷ்யர்களுக்குப் பலன் கொடுப்பது போல் நவக்கிரகங்கள் அவரையும் தங்கள் பலங்களால் கட்டுப்படுத்தி யிருப்பார்களென்று எண்ணியதே அபசாரம். அதற்கு எவ்வளவு அபராத க்ஷாமணம் பண்ணிக்கொண்டாலும் போதாது. ஆகிலும் அவரைத் தெய்வமாய்மட்டும் பாராட்டாமல் மனுஷ்யராகவும் என்பித்து வால்மீகி ராமாயணம் எழுதியிருக்கிறபடியால், இந்தவிதமாகவும் ஜாதகசோதனையில் இறங்கி பகவத் தியானஞ் செய்யப்பட்டது. ஸ்ரீராம பகவானைப் பிரார்த்திப்பதுடன், பக்த பாகவதர்கள் எல்லாரையும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த நவக்ரஹங்கள் எல்லாம்

120-வயதுள்ளவருக்குத்தான் தகும். 10,000-வருஷமிருந்தவருக்கு கிரகபலனேது? ஸ்ரீராமா!

5. கோசார ரீதியாய்ப் பலனுரைப்பதைப் பற்றி சற்று மேலே ஒரு தமிழ் வசனத்தை எடுத்துச் சொன்னோம். அதுவும் அவ்வளவு சரியல்ல என்பதை ஒருவாறாக ஒப்புக்கொண்டு, இது விஷயமாய் சர்வசாதாரணமாய் ஜோஸ்யர்களால் சாஸ்திர பரிசயமில்லாதவர்களுக்கு ஒரு தமிழ்ப்பாட்டு ஒப்புவிக்கப்படுவதை சரியல்லவென்று எடுத்துக்காட்டி, கோசார விஷயமாய் சில பொது சங்கதிகளைச் சொல்லிவிட்டு, அடுத்த விஷயமான முகூர்த்தம் என்பதை எடுத்துக்கொள்ளலாம். ஜோஸ்யனிடம் ஒருவன் வந்தாலே ஏதோ சங்கடத்தில் இருக்கிறான், அது நிவ்ருத்திக்கு வருகிறான் என்று எண்ணவேண்டியிருக்கிறது. நல்ல ஸ்திதியில் மேன்மேலும் உயர்வடைந்தால் மனுஷ்யன் தெய்வத்தாலோ, கிரக பலத்தாலோ எதுவும் நடப்பதாக எண்ணுவதில்லை. "நானே அதைச் செய்தேன், நானே இதைச் செய்தேன், எல்லாம் என் வெற்றியே," என்கிறான். கஷ்டம் வந்தால், தெய்வத்தை நொந்து "கிரகசாரம், இப்படி சங்கடம் நேர்ந்தது," என்கிறான். அந்த கிரகசாரத்திலிருந்து நீங்கமுடியுமா என்று ஜோஸ்யனென்று கருதப்படுகிறவனை நாடுகிறான். அச்சமயம் தனது ஞானத்தை வெளிப்படுத்துவதற்காக பொருந்துபவையோ, அசம்பாவிதமானவையோ, சில ச்லோகங்கள் அல்லது பாட்டுக்களை ஒப்புவித்துவிடுகிறான். அதில் குரு ராசிகளில் சஞ்சரிப்பதின் பலனை ஞாபகமாக வைத்துக்

கொள்வதற்காக, ஸம்ஸ்க்ருத ச்லோகம் ஒன்றும் அதன் மொழிபெயர்ப்பெனலாம் போலுள்ள ஒரு தமிழ்ப்பாட்டும் அநேகமாய் ஒப்புவிக்கப்படுகின்றன. நக்ஷத்திரம் பாதம் தெரியாமலே, நாம நக்ஷத்திரத்தைக் கொண்டு ஒப்பிப்பது சாதாரணமாயிருக்கிறது. இது பெருந்தவறு. வருபவன் திகில்பட்டுப் போகிறான். இது ஒருபுறமிருக்க, குரு ஜன்மத்தில் இருந்தார் என்று ஸ்பஷ்டமாய் தெரியாதவரை அந்த பாட்டே தப்பு. ஜன்ம ராமர் வனத்திலே சீதையைச் சிறைவைத்ததும், என்ற ஸ்ரீராமருக்குச் சம்பந்தப் பட்டதையே எடுத்துக்கொள்வோம். ஸ்ரீராமர் சீதையைச் சிறை வைத்தாரா? அந்த தேவி வனத்தில் சிறையிருந்தாளா? ராவணன் அபகரித்துப்போய் லங்கையில் சிறைவைத்தான். இதை யார் எழுதினரோ! தப்பானதாயிருந்தால் அது நாள்பட நிற்பதில்லை, இந்த அசத்துமட்டும் எப்படியோ நிலைத்துப் போய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த கீழ்த்தரமான வழக்கத்தைக் கூடுமானவரை கண்டிக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனுக்கும் 12-வருஷத்திற்கு ஒருமுறை குரு ஜன்மத்திற்கு வருகிறார். ஒவ்வொருவனுமா பெரிய துன்பத்தை அடைகிறான். இதோடு இதைவிட்டு இப்போது நடக்கக்கூடிய மேலானவற்றைப்பற்றிப் பேசலாம்.

6. இதை எழுதுபவனுடைய அபிப்பிராயம் என்னவென்றால், ஜாதகத்தைக்கொண்டு வெறும் பலன்களைத் தெரிந்துகொண்டு, கோசாரத்தைக் கொண்டு அவ்வப்போதைய பலன்களை அறிய

வேண்டும் என்றிருந்திருக்கிறுப்போலிருக்கிறது. வெகுபேர் கோசாரத்தையே முக்கியமாய்க்கொள்கிறார்கள். 'ஜ்யோதிஷ தத்வ ஸுதார்ணவம்' என்னும் கிரந்தம் "ஜாதக ரீதியாய் பலன் பார்ப்பதைவிட கோசார பலனே முக்கியம். ஜனன காலத்தில் கிரகங்களின் வலிவு எப்படியிருந்தபோதிலும், கோசாரப்படி கிரகங்களின் நிலை அநுகூலமின்றியிருந்தால், ஜனனகால கிரகபலம் ஒன்றுஞ் செய்யாது," என்கிறது. சிலருக்கு ஜாதகத்தில் கிரகங்கள் வலுத்திருக்கும். கோசார ரீதியாக கிரகபலன் நன்றாயிராது. சரியான தசாபுக்திகள் வராமற்போகும். ஜாதகனுக்கு எவ்வளவு நல்லபலன் எதிர்பார்க்கக் கூடுமோ அவ்வளவு பலன் கிடைப்பதில்லை. ஸ்ரீராமாயணத்தில் கொடுக்கப்பட்ட இந்த உதாரணம் இந்த அபிப்பிராயத்திற்கு ஆதாரமாயிருக்கிறது.

7. இதுவேதான் இக்காலத்தில் பல ஜோஸ்யர்கள், ஜோஸ்ய நிலயங்கள், பத்திரிகைகள் முதலியவற்றின் ப்ராபல்யத்துக்குக் காரணமாயிருக்கிறது என்று எண்ணவேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாய் ஒரு விஷயம்: அக்காலத்தில் பஞ்சாங்கங்கள் இருந்ததாகத்தெரியவில்லை. வானசாஸ்திரம்தெரிந்தவரலேயே ஆகாசத்தைப் பார்த்து கிரக நக்ஷத்திர நிலைகளைத் தெரிந்துகொண்டு பலன்களறிந்ததாகவும், முகூர்த்தங்கள் நிர்ணயித்ததாகவும் தெரிகிறது. இது நீண்டகாலத்திற்குச் சொல்லமுடிந்திராது. இந்த அயோத்யா காண்டத்திலும் சரி, முன் பாலகாண்டத்திலும் சரி, பின்னிட்டு யுத்தகாண்டத்திலும் சரி,

இன்று இன்ன நக்ஷத்திரம், நாளை அல்லது மூன்ரும் நாள் இன்ன நக்ஷத்திரம் என்றிருக்கிறதே தவிர, பலநாள் முன் அநேக நாட்களுக்குப் பின்னிட்ட திதி, நக்ஷத்திர, கிரக நிலைகளை அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. இப்போது ஆகாசத்தை அவ்வப் போது பார்க்கவேண்டியதில்லை. பார்க்கும் வழக்க மும் விட்டுப்போயிற்று. பார்க்கும் வழியும் மறந்து விட்டது. வானசாஸ்திரம் அபரிமிதமாய் விருத்தி யாய் விட்டது. சரியான, நுட்பமான தகவல்களைக் கொடுக்கக்கூடிய வருஷா வருஷப் பஞ்சாங்கங்களும், நூற்றுண்டுப் பஞ்சாங்கங்களும் ஏற்பட்டிருக்கின் றன. கால அளவைக் காட்டக்கூடிய கெடியாரங்கள் முதலிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞானம் எவ்வளவோ விருத்தியாகி கிரகங்களின் தன்மை முதலியவை நன்ருய், ஸவிஸ்தாரமாய் அறியப்பட்டு அவைகளை மனுஷ்ய ரூபத்துடனேயே எட்டவும் கூடுமோவென்று யோசித்துக் கொண்டி ருக்கும் இக்காலத்தில், பழைய ஆகாசத்தை வெறுங் கண்ணுல் பார்த்து கிரகநக்ஷத்திர சஞ்சாரங்களை யும், பொழுதையும் தெரிந்துகொள்ளும் சக்தி போய் விட்டதே, மார்க்கம் மறந்துவிட்டதே, என்று விச னிக்க ப்ரமேயமில்லை. ஆயினும், அதை மறந்து விடாமல் ஆசாரத்தில் வைத்துக்கொண்டிருந்து, விருத்தி செய்திருந்தால் இப்போதைய நிலைமையில் அதனுலும் பயனடையலாம் என்பதுதான். அதுவும் விருத்தியாயிருக்கும். அந்த ஞானமில்லாமையினுல் சில பூர்வீக கிரந்தங்களில் குறிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களையும் குறிப்புகளையும் சரியாய்த்

தெரிந்துகொள்ள இயலாமலிருக்கிறது. ஞானம் விருத்தியாயிருப்பதையும், இனி ஆகக்கூடியதையும் கொண்டு திருப்தியடைவோம்.

வரப்போவதை முன்னறிவிக்கும் விஷயங்களை விட்டு மற்றதிற்குப் போகுமுன் எல்லாமும் விதி வசப்படி நடக்கின்றனவா மாற்றக் கூடியவையா என்பதைப்பற்றி சில விஷயங்கள் சொல்லவேணுமா யிருக்கிறது. அவையாவன: அயோத்யா காண்டத்தில் 23, 24-வது சர்க்கங்களில் தெய்வச்செயல் நீக்கத் தகாதது என்றுப்போலிருந்தாலும் அவைகளை வென்று விடுவதாக லக்ஷ்மணர் ஸ்ரீ ராமருக்கு உரைக்கிறார். சுந்தரகாண்டம் சர்க்கம் 37-வது துவக்கத்தில் "விதிர் நூநம் அஸம்ஹார்ய:" என்று ஸீதாதேவி அனுமானுக்குச்சொல்லுகிறாள். ஆகவே வரப்போவதைத் தெரிந்துக்கொள்ளலாமே தவிர விலக்க முடியாதென்கிறபடியாகிறது. அதே ஸீதாதேவி ஸ்ரீ ராமர் கெடுதல் வரக்கூடியதை அறிந்து அதை விலக்க ஸமர்த்தராயிருந்தும் அவருக்குத்தான் ம்ருத்யுவாயிருந்துவிட்டதாக வருந்துகிறாள். ஆகவே, வருவதைத் தடுக்க மஹான்களால் மட்டும் ஆகும் என்று ஏற்படுகிறது.

# 3. முகூர்த்தம்

1. அடுத்தபடி, முகூர்த்தம் என்றால் ராமாயணத்தில் எதைக்குறிக்கிறது, அதில் என்னென்ன முகூர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன வென்பதை கவனிப்போம். முகூர்த்தம் என்பது குறிப்பிட்ட வேளை. இப்போது சுப முகூர்த்தங்களை நிர்ணயிப்பதற்கு, கிழமை, திதி, நக்ஷத்திரம் லக்நம், யோகம், பஞ்சகம் இவைகளைப் பார்க்கிறோம். இவைகளில் கிழமை, திதி நக்ஷத்திரம் அமுர்தாதி யோகம், பஞ்சகம் இவை ராமாயணத்தில் இல்லை. லக்நம் ஜனனத்திற்குச் சொல்லப்பட்டதே தவிர, நல்ல வேளைக்கு எடுக்கப்பட்டதாக இல்லை. ராமாயணத்தில் காணப்படும் முகூர்த்தம் பகலையும், இரவையும் 15-பகுதிகளாகப் பிரித்த காலவரை. அஹஸுக்குத் தகுந்தபடி அளவுள்ளது. 30-நாழியுள்ள பகலிலோ, இரவிலோ ஒரு முகூர்த்தம் 2-நாழிகை உள்ளது. இதிலொன்றைத் தான் நிர்ணயித்து சுபகார்யங்களைச் செய்ததாய் இருக்கிறது.

2. இந்த முகூர்த்தங்களே பின்னிட்டு நடக்கப் போவதை ஜாதகம், கோசாரம் முதலியன இல்லாமல், முன்னடியாகச் சொல்வதற்கும் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது. இதற்கும் ராமாயணத்தில் இரண்டு உதாரணங்களிருக்கின்றன. முதல் ஆரண்ய காண்டம் 68-வது சர்க்கம் 12-வது, 13-வது ச்லோகங்களில் கண்டிருக்கிறது. இது ஆரூடத்தைப் போன்றது. இதன்படி ராவணன் ஸீதையை 'விந்தோ

நாம' முகூர்த்தத்தில் அபகரித்துக் கொண்டுபோன தின் பலனிலிருந்து, அந்தச் சுபவேளையில் பொருளை இழந்தவன் அதைச் சீக்கிரத்திலேயே திருப்பிப் பெறுவான் என்கிற சாஸ்திர ஆதாரமிருக்கிறபடியால், ஸ்ரீராமர் ஸீதையைத் திருப்பிப்பெறுவார், என்று ஜடாயு ஸ்ரீராமருக்குச் சொன்னது. அந்தப் படி நடந்தது. சாஸ்திரம் பலித்தது. இரண்டாவது, ஸ்ரீராமாயண காலத்திலிருந்த ஜோதிட முறைகளைப் பற்றி பேசியபோது சொன்ன [உத்திரகாண்டம்] விச்ரவஸ் கேகஸி பேச்சில் அவரை அவள் கிட்டு கையில் வேளை கெட்டதாயிருந்ததினால் அவள் சந்ததி அசுரப் பிறப்பாயிருக்குமென்றதும் சரியாய்விட்டது.

3. இப்படி முகூர்த்தம் பகர்வது இப்போது வழங்கப்படவில்லை. ஹோரைகள் பகிர்ந்து உபயோகிக்கப்படுகின்றன. அவைகள் கிரகங்களதவை. பல தகவல்களைக்கொண்டு ஜோஸ்யர்களும், குறி சொல்லுபவர்களும் நடந்தது, நடப்பது, நடக்கப் போவது முதலியவைகளைக் கூடிய மட்டில் சரியாய்ச் சொல்வது ஆச்சர்யப்படக் கூடியதாய் இருக்கிறது. அதில், சென்றதையும், செல்வதையும் சொல்லுவது வெகுவாய்ச் சரியாய் இருக்கிறது. வரப்போவதை அநேகர் சரியாய்ச் சொல்ல முடியாமலிருக்கிறது. பழியை, தகவல் சரியாயிராதென்று கேட்பவர் பேரில் போட்டுவிடப்படுகிறது. எப்படியிருந்தபோதி திலும் வரப்போகும் முற்காலத்திய பலனைச் சொல் வதைத் தொழிலாகக் கொண்டவர் பற்பலர். வீடு வீடாய், ஊர் ஊராய்த் திரிபவர்களும், மரங்களடியிலும், பாதை யோரங்களில், வெய்யலில் காய்ந்தும்

மழையில் நனைந்துக்கொண்டு படங்களையும் பக்ஷி களையும் வைத்துக்கொண்டு இருப்பவர்களையும், அவர்களை அநேகர் நாடுவதையும் தினமும் காண்கி ரும். இம்மாதிரியான பலன் கேட்டறிவதனுல் ஏதோ நன்மையிருக்கவேணும். இல்லாவிடில் நாளா வட்டத்தில் இந்தத் தொழில் எடுபட்டுப் போயிருக்கு மல்லவா? இது நிரம்ப ஹீனமானவர்களைக் குறித் தது. இதே தொழிலை மிகுந்த ஜோதிஷ ஞானத் துடன் தனவந்தர்களுக்குச் சொல்லி நிரம்ப திரவி யம் சம்பாதிக்கிறவர்கள் அநேகர் இருக்கிருர்கள். அக்காலத்தில் ராஜ சபைகளில் ஜோஸ்யம் தெரிந்த வர்களை அமர்த்தி ராஜாக்கள் ஆதரித்துவந்தார்கள்.

4. சுப முகூர்த்தம் என்பதற்கு ஸ்ரீ ராமாயணத் தில் நக்ஷத்திரமே வெகு முக்கியமாக ஏற்பட்டதாகத் தெரிகிறது. அதிலும் நக்ஷத்திரத்தின் பெருமை அதனின் அதிதேவதையைக் கொண்டு பாராட்டப் பட்டது. நக்ஷத்திரத்தை தேர்ந்தெடுத்துக்கொண்ட பின், மேற்சொன்ன 15-முகூர்த்தங்களில் சிலாக்கிய மானவைகளைக் குறித்துக்கொண்டார்கள். இந்தப் படி 15-முகூர்த்தங்களாகத் திவா, ராத்ரிகளைப் பகிர் வதில் இப்போது வழங்கப்பட்ட 3-கிரந்தங்களில் வித்தியாசமிருக்கிறது. இவை மூன்றுமே ராமாயண காலத்தில் இல்லைபோல் ஏற்படுகிறது. அது எவ் வாருயினு மிருந்து போகட்டும். ஒரு முறைப்படி பகிர்வதில் எட்டாவது பகல் முகூர்த்தம் 14-நாழி கைக்குமேல் 16-நாழிகைக்குள் வருவது 'அபிஜித்' என்று வழங்கப்படுவது. சூரியன் மத்யத்தை

அடைந்துவிட்டான் என்பதனல் இது 8-வது முகூர்த்தம், இது சுபமான முகூர்த்தம் என்று கருதப்பட்டதினல் அதில் யுத்தத்திற்குப்புறப்படுவது மிக நல்லதென்று ஸ்ரீராமர் சொல்லுகிருர். [யுத்த காண்டம்-சர்க்கம் 4, ச்லோகம் 3.] [VI 4 (3) இந்த நடுப்பகல் வேளை இப்போதும் சுபவேளையாகக்கருதப்படுகிறது.

5. ஸ்ரீ ராமாயண காலத்திற்கு முன்னிருந்தே சுப காரியங்களைச் செய்வதற்கு நல்லவேளைகளை நிர்ணயித்து வந்ததாக கூறப்படுகிறது. ஸ்ரீ ராமாயணத்தில் சுபகாலத்தைப்பற்றி பல ப்ரஸ்தாவங்களிருக்கின்றன. முதல் யாகந் தொடங்குவதற்கு சித்திரை மாதம் பௌர்ணமி தகுதியானதென்றும், ஏதாவதொரு வருஷத்தில் யாகக் குதிரையை அந்த தினத்தில் விடுத்தால் மறுவருஷம் அதே தினத்திற்குள் குதிரை யாதொரு தடங்கலுமின்றித் திரும்பி வருமெனவும், திரும்பி வராதபக்ஷத்தில் எடுக்கவேண்டிய சரியைகளைப்பற்றியும் ப்ரஸ்தாவம். தசரத சக்கரவர்த்தி விடுத்த குதிரை அங்ஙனம் வந்ததினல் சாஸ்திரோக்தமாக புத்ரகாமேஷ்டியாகஞ் செய்தார். அதற்குப் பூர்வாங்கமான எல்லாவேலைகளையுஞ் செய்துவிட்டு, அவர் ஒரு நல்ல தினத்தில், நல்ல நக்ஷத்திரத்தின் ஆதீனத்தின் கீழ், புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்யப் புறப்பட்டார். [பாலகாண்டம்-சர்க்கம்-13, ச்லோகம்-36]. யாகம் அதற்குண்டான எல்லா அங்கங்களுடனும் பூர்த்திசெய்யப்பட்டது. மறுவருஷம் ஸ்ரீ ராமரும் அவருடைய ப்ராதாக்களும் அவதரித்தார்

கள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து, உபநயனம் செய்துக்கொண்டு, வேதாத்யயநம்பண்ணி அஸ்திரவித்தைகளைக் கற்றுக்கொண்டு விவாக யோக்யர்களானார்கள். விச்வாமித்திரர் வந்தார்.

6. தம்முடைய யாக ஸம்ரக்ஷணைக்கு ஸ்ரீ ராமரை அழைத்து, அவரை இணைவிட்டுப் பிரியாத லக்ஷ்மணரையுங் கூட்டிக்கொண்டு யாக ஸம்ரக்ஷணையை அவர்களால் செய்துகொண்டு, அது பூர்த்தியானதும் ஜனகருடைய யாகத்திற்கு அவர்களை அழைத்துப் போய், அங்கே தாம் உத்தேசித்த ஸீதா கல்யாணம் முதலிய விவாஹங்களை முடித்து வைத்தார். கல்யாணத்திற்கு முகூர்த்தம் வைப்பதைப் பற்றிச்சொல்லியிருப்பதைப் பாலகாண்டம் 71-வது சர்க்கம், 24-வது ச்லோகத்தில், [171 (24)] "இன்று மகம், மூன்றும் நாள் உத்திர பல்குனி, இன்று விரதம், கோதானம் முதலியவைகளை முடித்து வைத்துக்கொண்டால் உத்திர பல்குனியில் விவாகம் நடத்தலாம் என்றும், 72-வது சர்க்கம், 13-வது ச்லோகத்தில், [I. 72 (13)] 'உத்திர பல்குனி விவாகத்திற்குச் சிரேஷ்டமானது, அதனுடைய அதிதேவதை பகன் விவாகபலனைக் கொடுக்கக் கூடியவர் என்றும், ஜனகமஹாராஜா சொல்லியதில், அந்த நக்ஷத்திரத்தைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணமும் காணப்பட்டிருக்கிறது. அதே நக்ஷத்திரத்தில் ரகு முக்கியர்கள் நால்வருடைய விவாஹங்களும் சாஸ்திரோக்தமாய் நடந்தேறின. ஸ்ரீ ராமர் கல்யா

கல்யாண முகூர்த்தம்

ணத்திற்குப் ப்ராதாக்களுடன மங்களகரமாய் விஜய முகூர்த்தத்தில் புறப்பட்டார் [பா.கா. - ஸ. 73., ஸ். 9]. [I-73 (9) ] இது ஒரு நூல்படி சாயங்காலம் 14-வது முகூர்த்தமாயும், மற்றொரு சாஸ்திரப்படி இரவு 14-வது முகூர்த்தமாயுமிருக்கிறது.

7. அடுத்தபடி, இளவரசு பட்டாபிஷேகத்திற்கு நாள் வைத்துத் தவறிப்போன விஷயம். இதற்கு புஷ்ய நக்ஷத்திரத்தில் நாள் வைத்ததற்குக் காரணங்களுடன் பல தடவைகள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது. [அயோத்யா காண்டம் ஸ. 3, ச். 40 ; [3 (40)] ஸ. 4, ச். 2. [4 (2)] ஸ. 4, ச். 40. [4 (40)] (கௌஸல்யா தேவி) ; ஸ. 21, ச். 33 ; [31 (33)] ஸ-7, ச். 11; [7 (11)] ஸ. 8. ச்-9 [8 (9)] ஸ. 14, ச்-42 [14 (42)] ஸ. 15, ச்-25. [15 (25)] காரணம், புஷ்யத்திற்கு அதிதேவதை குரு. அவர் சம்பத்தைக் கொடுக்கக் கூடியவர் (அ. கா.-ஸ. 26, ச். 9-ஸீதாதேவி) [II 26(9)] இந்த முகூர்த்தம் நிர்ணயிக்கப்பட்ட சந்தர்ப்பமும், அது தவறிப்போனதற்குக் காரணமும் மேலே கூறப்படும்.

8. அதற்கடுத்தாப்போலே கிருகப் பிரவேச முகூர்த்தங்களைப் பற்றி எடுத்துரைத்திருக்கிறது.

கிருகப் பிரவேச முகூர்த் தங்கள்

முதலில், ஸ்ரீராமர் சித்ரகூடத்தில் பர்ணசாலை அமைக்க வைத்து அதில் பிரவேசித்த காலம் [அ.கா.—ஸ. 56. ச். 25. தொடங்கி சில ச்லோகங்கள்]. [II 56 (25-28)] இப்போது **முகூர்த்தம் நன்றாயிருக்கிறது. நக்ஷத்ரதிரம் ஸ்திரமானது.** [அப்போதிருந்தது நான்கு

ஸ்திர நக்ஷத்திரங்களில் எது? உத்திரமா?] கிருகப் பிரவேசத்திற்கு வேண்டிய வாஸ்து சாந்தி, விச்வ தேவ பலி, மந்த்ர ஜபம், விஷ்ணு பூஜை முதலியவை களை முடிக்கவேணும் என்றிருக்கிறது. அதற்கப் புறம் பரதருடைய கூடாரங்கள் நல்லவேளையில் நல்ல நக்ஷத்திரத்தில், சுப முகூர்த்தத்தில் பதியப்பட்டன என்றிருக்கிறது.[அ.கா.—ஸ. 80, ச. 17]. [II 80 (17)]. ஆனால் மேலே பஞ்சவடியில் ஸ்ரீராமர் பர்ணசாலை கட்டி அதில் பிரவேசித்ததற்கு நாள் நக்ஷத்திரங் களைப்பற்றி ஒன்றும் காணவில்லை. சாஸ்திரப்படி செய்யவேண்டியவை யெல்லாம் செய்யப்பட்டன என்று இருக்கிறது. முன் செய்தபடி எல்லாம் சுபதினத்திலேயே நடந்ததாய்க் கொள்ளவேண்டும். இங்குதான் வெகு நீண்டகாலம் இருந்திருக்கிறார்.

9. இதற்கப்புறம் ஸ்ரீராமர் யுத்தத்திற்குப் புறப் பட்டபோது நாள் நக்ஷத்திரங்களைப்பற்றிச் சொல் வதுதான் அடுத்த பிரஸ்தாவம். "அபிஜித் முகூர்த் தத்தில் புறப்பட்டால் வெற்றிவரும், இன்று உத்திர பல்குனி, அதன் தேவதை நல்ல பலனைக் கொடுக்கக் கூடியவர், நாளையதினம் ஹஸ்தம், அது வர்ஜிக்கப் பட வேண்டியது", என்கிறார். ஹஸ்தத்தின் அதி தேவதை இன்னதென்று ராமாயணத்தில் வியக்த மாயில்லை.

10. கடைசியாக யுத்தகாண்டம் ஸ. 129, ச. 54-ல் [VI 129 (54)] ஆஞ்சநேயர் பரதரைப் பார்த்து "நாளையதினம் நிர்விக்னமான புஷ்ய நக்ஷத்திரமும் யோகமுமானபடியால் ஸ்ரீராமரைப் பார்ப்பது நல்ல

தென்கிறார். இது யோகத்தைப்பற்றி இரண்டாவது பிரஸ்தாவம். எந்த புஷ்யத்தில் இளவரசு பட்டாபி ஷேகம் தவறிவிட்டதோ, அதே பூசத்தில் ராஜ்ய பட்டாபிஷேகமே நடந்தது.

11. விவாக காலத்தில் மகத்தையும், உத்திர பல் குனியையும் சொல்லி தவறியது, சம்பூர்ணமானது, இரண்டு பட்டாபிஷேகங்களுக்கும் புஷ்யத்தைக் குறிப்பிட்டு ஹஸ்தம் உதவாதென்கிறதினுல், தாரா பலன் பார்ப்பதிருந்ததோவென்று நினைக்கவேண் டியிருக்கிறது.

12. இதற்கப்புறமுள்ள கட்டக் கடைசி பிரஸ் தாவம், உத்திரகாண்டம் - ஸ. 112, ச். 20-ல் [VII 112. (20)] பரதரும், அவருடைய பிள்ளைகளும் கந் தர்வர்களை ஜெயிப்பதற்கு அநுகூலமான நக்ஷத்தி ரத்தில் புறப்பட்டார்கள் என்பதுதான். ஆகவே, முகூர்த்தங்களுக்கு நக்ஷத்திரங்களை வெகு முக்கியமா கப் பாராட்டினதாகத் தெரிகிறது.

13. இம் முகூர்த்த விஷயத்தை முடிப்பதற்கு முன், சிலர் மனதில் தப்பான ஒரு அபிப்பிராயமிருப் பதைத் திருத்திக்கொள்ளக்கூடிய குறிப்புகள் ராமா யணத்திலேயே இருப்பதை எடுத்துக்காட்டவேணுமா யிருக்கிறது. சாதாரணமாக, 'முகூர்த்தங்களைச் சரியாய் வையுங்கள், ஏதாவது தங்கு தடை யிருக்கப்போகிற தென்றால்,' ஒரு சாரார், "இதிலெல்லாம் என்ன விருக்கிறது, ரிஷிசிரேஷ்டரான வசிஷ்டர் வைத்த முகூர்த்தமே தவறிவிட்டது. அதோடிராமல் அதே தினத்தில் ஸ்ரீ ராமர் வனம்புகவும் நேரிட்டதல்லவா?"

என்று சட்டெனச் சொல்லி, முகூர்த்த பலத்தால் ஒன்றுமில்லையென்று என்பிக்கிறார்கள். அவர்களைப்போல சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ள பலருங் கூட அம்மாதிரியே எண்ணுகிறார்கள். உண்மையில் யுவராஜ பட்டாபிஷேகத்திற்கு நாள் வைத்தது வசிஷ்டரல்ல. யார் வைத்தது, எந்த சந்தர்ப்பங்களினால் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ள விருந்தவர் வனவாச மேற்கவும், அவர் தகப்பனார் மரிக்கவும் நேர்ந்ததென்பதை உற்று நோக்கவேண்டும். ஸ்ரீராமாயணத்திலேயே, வெகு அவசரமாக முகூர்த்தம் வைத்ததற்குக் காரணம் சொல்லியிருக்கிறது. தசரதர் துச்சகுனங்கள் காண்கிறார், ஜோஸ்யர்களைக் கேட்கிறார். அவர்கள், அவரது ஜன்ம நக்ஷத்திரத்தைக் க்ரூர கிரகங்கள் பீடித்திருப்பதாகவும், அதனால் **ராஜா மரணமோ**, அதற்குச் சமானமான பெரிய கெடுதியோ நேரிடுமென்கிறார்கள். அது எதுவும் நேரிடுமுன், இளவரசு பட்டாபிஷேகம் செய்துவிட வேண்டுமென்று தசரதர் விரும்புகிறார். அதற்குண்டான ஏற்பாடுகளையெல்லாம் செய்யச் சொல்லி குல புரோஹிதருக்கு (வஸிஷ்டருக்கு) ஆஜ்ஞையிடுகிறார். தமது கவலையில், விபத்தைக் கொடுக்கக்கூடிய கிரகநிலையிருக்கையில் அணதத் தடுக்கமுடியாதென்பதை மறந்துவிடுகிறார். ஸ்ரீராமாவதாரக் கருத்து நிறைவேறவேணுமே. அதனால் எல்லாம் செய்துவிட்டு கைகேயியின் மாளிகைக்குச் செல்கிறார். ஸ்ரீராமருடைய இளவரசு பட்டாபிஷேகம் உத்தேசிக்கப்பட்டு அது நின்று விபரீதம்உண்டாகுமென்பதை எவரும் நினைத்திருக்கமாட்டார்கள்,

ராஜா மரிப்பது எதிர்பார்க்கப் பட்டதுதான். அயோத்யா காண்டத்தில் முதல் சில சர்க்கங்களை உன்னித்துப் பார்த்தால் இது விளங்கும். தம் மரணம் திண்ணமென்றெண்ணி அது நேருமுன் ஸ்ரீராமருக்கு இளவரசு பட்டாபிஷேகம் செய்ய தாம் தீர்மானித்திருப்பதை அங்கீகரிக்க துரிதமாய்ச் சபை கூட்டுகிறார். எல்லோரும் ஸ்ரீராமாபிஷேகத்திற்குச் சம்மதிக்கிறார்கள். சபையில் சந்தோஷத்தினால் ஏற்பட்ட ஆரவாரமும் சந்தடியும் அடங்கியதும், சபையைக் கலைத்துவிட்டு சுமந்திரருக்கு அதற்கு தயார் பண்ண ஆஜ்ஞை செய்தார். [அ. கா.-ஸ. 3, ச. 4-முதல் 19]. [II. 3. (4-19)] பிறகு அவர் ஸ்ரீராமனுக்குச் சொல்லியனுப்பி வரவழைத்து, "**இன்று** புஷ்யத்திற்கு முந்தினநாள், புனர்வசுவில் சந்திரனிருக்கிறான். நீ புஷ்ய நக்ஷத்திரத்தில் நாளைக்கு பட்டாபிஷேகம் செய்துகொள்ளவேணும்" என்கிறார். [அ. கா.-ஸ. 3, ச. 40, 41]. [II. 3. (40-41)]. அதற்கப்பால் மந்திரிகளுடன் யோசித்து, "நாளையே புஷ்யமாகையால் நாளைக்கே பட்டாபிஷேகம் செய்ய வேண்டும்" என்று **காரியந்** தெரிந்தவரான தசரதர் நிச்சயித்தார். "**நிச்சயஜ்ஞஸ்ஸ நிச்சயம்** [அ. கா.-ஸ-4, ச. 1, 2]. [II. 4. (1, 2)]. அந்த தீர்மானம் நிறைவேறுவதற்கான காரியங்களைப் பூர்த்தி செய்துக் கொண்டு ஸகாலத்தில் வசிஷ்டர் வந்துவிட்டார். [அ. கா.-ஸ. 14, ச. 21]. [II. 14. (21)]. ராஜா தயாராயில்லாததைக் கண்டு சுமந்திரரைப்பார்த்து "நாளும் ச்ரேயஸ்கரமாயிருக்க நக்ஷத்ர **யோகமும்** பரிசுத்தமா யிருக்கும்போது ராமன்

யோகம்

ராஜ்யத்தை அடையும்படிக்கு ராஜாவை நீர் துரிதப் படுத்தும்'' என்கிறார். [அ. கா.-ஸ. 14, ச். 42]. [II. 14. (42)]. **யோகத்தைக் குறித்து இது முதல் பிரஸ்தாவம்.** இதுதான் வஸிஷ்டர் முதல் தடவையாக முகூர்த்தத்தைப்பற்றிப்பேசுவது. அவர் குறிப்பிட்ட முகூர்த்தம் தவறிப்போகக் கூடாதென்று சொன்னரே தவிர முகூர்த்தத்தை அவராக வைக்கவில்லை.

13. ஆனல் வரப்போவதை அவர் தூரதிருஷ்டி மூலமோ, ஜோதிட மூலமோ கண்டு தசரதருக்கு எச்சரிக்கையாய்ச் சொல்லியிருக்க வேண்டாமா எனக் கூடும். அதற்குப் பதில் என்னவென்ருல், அந்த ப்ரம்மரிஷிக்கு விஷயம் தெரியாதென்பதல்ல. எல்லா மறிந்தும் அவர் தேவ ரகஸ்யத்தை வெளியிடக் கூடாதென்றே தெரிவியாமலிருந்திருக்க வேண்டும். ஏனென்ருல், விச்வாமித்திரர் வந்து தமது யாக ரக்ஷணைக்கு ஸ்ரீ ராமரை அனுப்பும்படி கேட்டபோது கிழவனர் மூர்ச்சையடைந்த விஷயத்தை அவர் மறந்திருக்க முடியாது. ஆகலால் பட்டாபிஷேகத்திற்குத் தடங்கல் வருமென்று வஸிஷ்டர் வாயாலேயே சொல்லியிருந்தால் அதைக் கேட்ட மாத்திரத்திலேயே தசரதர் காலமாய்விட்டிருப்பார். வஸிஷ்டருக்கு, ஆதாரமுள்ள அபவாதம் நிலையாய் நின்றிருக்கும். ஸ்ரீ ராமாயணக் கதையே மாறிப் போயிருக்கும். விச்வாமித்திரர் ஸ்ரீ ராமரை யாக ஸம்ரக்ஷணைக்கு அழைத்தபோது, ஸீதா கல்யாணத்திற்காக என்று தெரிந்து தசரதருக்கு வஸிஷ்டர் "'தவபுத்ரஹிதார்த்தாய - உன் பிள்ளையின் நன்மைக்காக'' ஸ்ரீ ராமனை

அவருடன் அனுப்பு என்று சொல்லவில்லையா? பரசுராமர் வந்து கல்யாணத்திலிருந்து திரும்பிய கோஷ்டியைத் தாக்கியபோது, "சகுனங்கள் இருவிதமாயிருக்கின்றனவே" என்று தசரதர் கேட்டதற்கு, வஸிஷ்டர், "ஒரு சங்கடம் வரும், அது நல்லபடியாய் நீங்கும்" என்று சொல்லவில்லையா? [பா. கா.-ஸ. 22, ச். 20, ஸ. 74, ச். 8-13]. ஆகவே, இத்தருணம் வரப்போவது கெடுதலானபடியால் சொல்லாதிருந்தது தப்பில்லை.

14. ஏற்கனவே, கோசார ரீதியாய் கிரகங்கள் தசரதருக்கு க்ரூரமாயிருப்பதைக்கொண்டு, மன்னிப்புடன் ஊகையில் இறங்கி, ஸ்ரீராமருக்கும் அவை கெட்டவை என்றோமல்லவா. அவைகள் தாம் கிழவரைக் கைகேயியின் அரண்மனைக்குப் போகவும், முதலில் பட்டாபிஷேக ஸங்கதியைக் கேட்டு சந்தோஷப்பட்ட கைகேயியே பிறகு கூனியால் மாற்றப்படவும், அவள் கிழவரை வரங்கேட்கவும் செய்தன. இச்சமயம் இந்த காண்டம் முதல் ஸர்க்கம் 7-வது ச்லோகத்திலேயே ராமாவதார லக்ஷியம் ராவண வதம் என்று சொல்லப்பட்டிருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அது, அவர் அயோத்தியிலேயே ராஜாவாகவிருந்து ராவணனைக் கொல்வதாக விருக்கலாகாதா, எனலாம். ஆகாது. ஏனென்றால் ராவணனைக் கொல்ல காரணம் வேண்டும். ராவணனுடன் யுத்தஞ்செய்யுமுன் அவன் சேனைகள், தம்பி கும்பகர்ணன், பிள்ளை இந்த்ரஜித் இவர்கள் ஸம்ஹரிக்கப்படவேண்டும். எவரை வென்

ரூலும், கொன்ருலும் இந்த்ரஜித்தை ஸம்ஹாரம் செய்வது கடினமான காரியம். அதற்காகவே, 12-வருஷகாலம் தூங்காமலே விழித்துக்கொண்டு விரதங்கொண்ட லக்ஷ்மணர் தேவை அல்லவா? ஸ்ரீ ராமருடன் காட்டுக்குப்போய் அவருக்குக் கைங்கர்யம் செய்வதற்காகவே கண்ணிமையுங் கொட்டாமல் இருந்ததினலல்லவா லக்ஷ்மணர் இந்திரஜித்தைக் கொன்ருர். எல்லாவற்றிற்கும் தகுந்தபடி விஷயங்கள் நடக்கவேணுமே. ஆகவே வஸிஷ்டர் முதலியவர்கள் ராஜா மரணம் நேருமென்பதைமட்டும் சொல்லி, பட்டாபிஷேகம் தவறும் என்று கூறவில்லை. வஸிஷ்டர் முகூர்த்தம் வைக்கவில்லை. முகூர்த்தத்தின் திடக்குறைவால் அது தவறவில்லை. **வஸிஷ்டர்பால் வழுவில்லை.** இந்த விஷயம் தெளிவாய்த் தெரிந்தபின்னராவது, சிலராவது வஸிஷ்டர்மேல் பழிசொல்லாதிருப்பதுடன், அப்படிச் சொல்ல எண்ணுபவருக்கும் உண்மையை எடுத்துக்காட்டித் திருத்தவேண்டுமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

15. முகூர்த்தத்தைப் பற்றி சொல்லி முடிக்குமுன் இன்னொரு விஷயம். கால அளவு வருஷங்களாகவும், அயனங்களாகவும், ருதுக்களாகவும், மாதங்களாகவும், பக்ஷங்களாகவும், திதிகளாகவும் பகுக்கப்பட்டு, அதில் தினங்களில் பகலிரவுகளை 15-முகூர்த்தங்களாகவும் பகிர்ந்து கணித்திருந்ததாகவும் ஏற்படுகிறது. இத்துடன் யோகங்களும் லக்நங்களும் பார்க்கப்பட்டு வந்தன. வார தினங்கள், தேதிகளைப்பற்றிப் பிரஸ்தாபமில்லை. ஆகவே, யோகம் என்பது அம்ருதாதி யோகங்களல்ல—**விஷ்கம்பாதி யோகங்களாய்**

இருக்கவேண்டும். முகூர்த்தத்திற்கு லக்நம் பார்க்கப் படவில்லை. ஆதலால் பஞ்சகமில்லை. வருஷங்களுக்கு 60-பேர்களிலிருந்ததாகவுமில்லை. இவைகளெல்லாம் பிற்காலத்தில் ஏற்பட்டவை. திதிகளும் நக்ஷத்திரங் களும் முக்கியமாகக் கருதப்பட்டிருக்கின்றன. அதி லும் நக்ஷத்திரம் வெகு பிரதானம். சில திதிகளைப் பற்றிக் குறிப்பாயிருக்கிறது. சைத்ர பௌர்ணமி யாகம் தொடங்கத் தகுதியானது. பிரதமை வேதாப் பியாசத்திற்கு நிஷித்தம் - பிரதமைக் கவ்விபோல் சீதை இளைத்திருந்தாள்"—ஸு. கா. - ஸ. 59, ச். 39. அமாவாசை யுத்தத்திற்குப் புறப்பட சிலாக்கியமா னது [யு. கா. - ஸ. 93, ச். 68]. நக்ஷத்திரங்களின் சக்தி அவைகளின் அதிதேவதைகளைக்கொண்டே மதிக்கப்பட்டது. தாராபலன் ஒரு முகூர்த்த அம்ச மாகக் கருதப்பட்டதா என்று விளக்கமாயில்லை. ஆகிலும் 5-ம் தாரை பூரத்தையும், 7-ம் தாரை ஹஸ் தத்தையும் விலக்கியதால், ஒரு சமயம் இதுவும் பார்க்கப்பட்டதோ வென்றெண்ண இடமிருக்கிறது. லக்நத்திற்கும், தினத்திற்கும், மாதத்திற்கும் தியாஜ் யம் பார்க்கப்பட்டதாகவும் இல்லை.

16. இந்த சந்தர்ப்பத்தில் விவாகம், சுயம்வரம், சுல்கம் முதலியவைகளால் நிர்ணயிக்கப்பட்டபடி யால் பொருத்த நிமித்தம் பார்த்திருக்கமாட்டார்கள். புருஷர்களின் ஜன்ம நக்ஷத்திரங்கள் தரப்பட்ட னவே தவிர, பெண்கள் நக்ஷத்திரங்கள் கொடுக்கப் படவில்லை. அவர்களுக்கு ஸாமுத்ரிகா லக்ஷணம் பார்ப்பதுதான் வழங்கிவந்ததாக ஏற்படுகிறது. அப் படிப் பெண்களுக்கும் ஜாதகம் எழுதி பொருத்த

நிமித்தம் பார்த்து, வரதக்ஷிணையும் கொடுக்காம லிருந்தபோதே, ஒருவர் கல்யாணமாகவேண்டிய பெண்ணுக்குத் தகப்பனுராயிருப்பது கவலைக்கிடமா னது, என்று ராமாயணத்தில் இரண்டு இடங்களுக்கு மேல் சொல்லியிருக்கிறது [அ. கா. - ஸ. 118, ச். 35; உ.கா. - ஸ. 9, ச். 9; ஸ. 12, ச். 11]. கவலை எதனு லிருந்திருக்க வேண்டுமென்ருல், குணம், குலம், கோத்ரம் முதலியவை சரியாயிருக்கவேண்டுமே யென்பதனுலாகும்.

17. முகூர்த்த காலம் என்பது எவ்வளவு நேரம்? இரண்டு நாழிகையாக இருக்கவேண்டும். பாலகாண் டம்,-20-வது ஸர்க்கம், முதல் ச்லோகத்தில் தசரதர் ஒரு முகூர்த்தகாலம் மூர்ச்சையாயிருந்து தெளிந் தார், என்றும் 8, 9-வது ச்லோகங்களில் அவர் 'ஸ்ரீ ராமனைவிட்டு ஒரு முகூர்த்த காலங்கூட ஜீவித் திருக்கமாட்டேன்' என்ருர் - என்றுமிருக்கிறது. அதே காண்டத்தில் 29-வது ஸர்க்கம், 28-வது ச்லோகத்தில் ராஜபுத்திரர்களானவர்க ளிருவரும் முகூர்த்த காலம் இளைப்பாறி சத்துருக்களை நாசம் செய்வதாயும், யாகம் தொடங்கலாமென்னும் விச்வா மித்திருக்குச் சொன்னுர்கள். ஆரண்யகாண்டம் 34-வது ஸர்க்கம், 10-ம் ச்லோகம் சுமாரில், ஸ்ரீ ராமர் அர்த்தாதிக முகூர்த்தத்தில், அதாவது 1½-முகூர்த் தத்தில் ராக்ஷசர்களைப் படுசூர்ணமாக்கி விட்டார் என்று இருப்பதால் 2-நாழிகையும், 3-நாழிகையு மாக ஏற்படுகிறது. சொற்பகாலம் என்றிராது. அப்படியானுல் 1½-முகூர்த்தத்தில் என்று சொல்ல ப்ரஸக்தி இல்லை. ஆனுல் அ. கா. ஸ. 118, ச். 11-ல்

'ரோஹிணி நவிநா சந்த்ரம்'—ரோஹிணி சந்திரனை விட்டுப் பிரியவில்லை, என்கிற இடத்தில் 'சற்று நேரங்கூட' என்கிற அர்த்தம் கொடுக்கிறது. அந்தப் படியேதான் ஸ்ரீராமர், "மன்னர் கோபித்துக் கொண்டபின் அவரை சந்தோஷப்படுத்தாமலும், அவர் சொல்வதைச் செய்யாமலும் முகூர்த்த காலமும் ஜீவித்திருப்பதை விரும்பேன்" என்றதிலும், ஆ. கா. - ஸ. 20, ச். 5-ல், ஸ்ரீராமர் லக்ஷமணரை நோக்கி "சீதையைப் பார்த்துக்கொள், ஒரு முகூர்த்த காலத்தில் ராக்ஷஸர்களைக் கொன்றுவருகிறேன்" என்றதிலும், யு. கா. ஸ. 4. ச். 71, 72-ல் சீதையை விடுவிக்க நினைத்து யுத்தத்தைக் கண்டு களிக்கும் வானரர்கள் ஒரு முகூர்த்த காலமும் நிற்கவில்லை- என்பதிலும், 'சிறிது காலம்' என்று பொருள்தரும் 'முகூர்த்தம்' என்பது இம்மாதிரி அர்த்தங்கொடுக்கும்படி பற்பலவிடங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளின் ஜாபிதாவை யெடுத்து சந்தர்ப்பங்களுடன் எழுதிக்கொண்டே போனல், பலனிராது, விரிவுண்டாகுமென அஞ்சிக்கை யுண்டாகிறது. அறிஞர்கள் இந்த வழியை மனதில் வைத்துக் கொண்டு ஸ்ரீராமாயணத்தைப் படித்துக்கொண்டே போனல், அவ்வப்போது என்னென்ன உத்தேசத்துடன் பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதென்பது விளங்கும். வாசித்தறிவார்களாக.

18. இந்த உத்தேசத்துடன் படிப்பவர்களுக்கு ஸாதகமாக சில இடங்களை எடுத்துக்காட்டலாகிறது. அவை ஸுந்தரகாண்டத்தில் நிரம்ப இருக்கின்றன. ஸர்க்கம் 1. ச்லோகங்கள் (1) 15, (2) 43, (3) 103, (4) 112,

(5) 144, (6) 147. (7) ஸ. 2. ச். 32 (8) ஸ. 13. ச். 58, (9) ஸ. 14. ச். 1. (10) ஸ. 15, ச். 52, (11) ச். 54. (12) ஸ. 16. ச். 2. (13) ஸ. 24, ச். 27. (க்ஷணம்), (14) ஸ. 25, ச். 13. (15) ஸ. 26, ச். 7. (16) ச். 25. (17) ஸ. 39, ச். 21 (18) ஸ. 67, ச். 26 - 27.

19. இவ்விஷயத்தை முடிக்குமுன் இன்னும் இரண்டு கால அளவுகள் பிரஸ்தாபிக்கப் பட்டிருப் பதையுங் குறித்துப் பேசிவிடவேணும். "நிமேஷாந் த்ர மாத்ரேண" (ஸு. கா. ஸ. 62. ச். 37.) க்ஷணம் (ஸு.கா. ஸ.28. ச்.3) [ராகவனைப் பிரிந்து கிஞ்சித்து க்ஷணமாவது இருக்கிறேனே என ஸீதை வருந்து தல்]. இவைகளில் முதலது இயற்கை கண் கொட்டும் பொழுது கால அளவில் மிகச்சிறியது. இரண்டாவது செயற்கை. கைந் நொடிப்பொழுது சிடிகை போடு கிற காலம். சற்று மாறுபாடுடையதாக இருக்கலாம். அதாவது சிடிகை போடுகிறவர்களைப் பொருத்தி ஸமயோசிதமாய் ஜாஸ்தி கம்மியாய் இருக்கலாம். ஆனல் ஸர்வஸாதாரணமாய் பெரும்பான்மையோர் சீக்கிரமாய்ப் போடுவதுதான் கால அளவாகக் கருதப்படும். ஆகவேதான் கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும் மாத்திரைக்களவாம் என்று கண்ணிமைப் பொழுதை முந்தி சொல்லியிருக்கிறது. ஸம்ஸ்கிருதநிமிஷம் என்பது கண்ணிமைப்பொழுது. இதற்குச் சரியான இங்கிலீஷ் கால அளவு கிடை யாது. வெகு சீக்கிரம் என்பதற்கு கண்கொட்டுவ தற்குள் (Before the twinking of the eye) என்று சொல்லப்படுகிறது. க்ஷணம் என்பது இதைவிட சற்று அதிக நேரமாயிருக்கலாம் போலிருக்கிறது

ஸம்ஸ்கிருத இங்கிலீஷ் அகராதியில் (Appte's Dictionary களில்) க்ஷணம் என்பதற்கு Moment Instent என்பதுடன் 4/5 of a Second என்றிருக்கிறது. அப்படி இருக்க' இதைப்போல் 75-பங்கு கொண்டதும் ஒரு மணி நேரத்தில் 60-ல் ஒரு பாகமுமாகிய நேரத்திற்கு (Minute-க்கு) நிமிஷம் என்று எப்படி பேராயிற்றோ விளங்கவில்லை. விஷயம் நன்றாய்த் தெரிந்தவர்கள் விளக்கமாய்ச் சொன்னால் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

# 4. கிரக நக்ஷத்திர ஸம்பந்தாதிகள்

1. ஜாதகம், கோசாரம், முகூர்த்தம் இவைகளைப் பற்றி எழுதியதில் முதலிரண்டிற்கும் ஒவ்வொரு பிரஸ்தாவமும், மூன்றாவதைப்பற்றி பலபிரஸ்தாவங்களும் இருந்தபோதிலும் அவைகளனைத்தையும் சேர்த்து விமர்சையாய் சொல்லக்கூடியதா யிருந்ததினால் அவ்வளவு கஷ்டமில்லை. கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்குமுள்ள ஸம்பந்தங்களைப்பற்றிச்சொல்லியிருப்பனவற்றை ஒழுங்குபாட்டிற்குக் கொண்டுவர சாத்தியமில்லாம லிருந்தபோதிலும், வாசிப்போர் ருசிக்க எடுத்துரைக்காவிடினும், அர்த்தமாகும்படியாவது, கூடுமானவரை எழுதப்படும். பிரதம உத்தேசப்படி அவைகளை ஜாபிதா எடுத்து, அவைகள் கிரந்தத்தில் வரும் ஸந்தர்ப்பங்களுடனும், ஜ்யோதிஷ சாஸ்திர விளக்கத்துடனும் எழுதினால் பெரிய நூலாகும். அது தற்சமயம் சாத்தியமின்மையால் ஸந்தர்ப்பத்திற்கேற்பச் சுருக்கமாய் எழுத முயலப்படும்.

2. ஆகாயத்திலிருக்கும் கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவைகளனைத்திற்கும் பரஸ்பரம் பாந்தவ்யம், சிநேகம், பகை ஆகியவைகளிருப்பதாக அறிவோம். இந்த விஷயம் ஸ்ரீராமாயணத்திலும் கண்டிருக்கிறது. இப்போது இவைகள் மிகவும் நன்றாயறியப்பட்டு கிரக சமாகமாதிகள்போன்ற தகவலான பதகங்களில் தரப்பட்டு வருகின்றன. ஸ்ரீராமாயணத்தில் பல பிரஸ்தாவங்கள் இருக்கின்றனவே

தவிர, கொஞ்சமட்டுந்தான் ஜ்யோதிஷ சாஸ்திரத்தை அறிந்துகொள்ள உபயோகமாகும். சில மனதில் ஊன்றும்படி பலதடவைகள் கூறப்பட்டிருக்கின்றன. இருப்பனவற்றை ஆராய்வோம்.

ரோஹிணி

3. ரோஹிணி நக்ஷத்திரம் ஜ்யோதிஷத்தில் சிரேஷ்டமானதாம் [ஸு. கா. - ஸ. 33, ச். 7]. ரோஹிணிக்கும் சந்திரனுக்குமுள்ள அந்யோன்யம் முக்கியமாய்ப் புலப்படுகிறது.

சந்திரனுக்கு மிக இஷ்டை

பாலகாண்டம் 1-வது ஸர்க்கம், ச்லோகம் 27-28-ல் ஸர்வ லக்ஷண ஸம்பந்நையாகிற சீதை, ரோஹிணி சந்திரனைத் தொடர்வதுபோல் ஸ்ரீ ராமனைத் தொடர்ந்துபோனாள்-என்பது தொடங்கி பலதடவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அ. கா. - ஸ. 16, ச். 41-ல், சந்திரனுடன் ரோகிணியைப்போல் ஸ்ரீ ராமருடன் சீதையிருந்தாள் என்று அயோத்தியா வாஸிகள் சீதையைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். மஹாபதிவிரதையான அநஸூயையால் உபதேசிக்கப்பட்ட சீதாதேவியே பதிவிரதாத்தனத்தின் மகிமையைப் பேசும்போது அ. கா.-ஸ. 118, ச். 42-ல் ரோஹிணி சந்திரனைவிட்டுப் பிரிந்து சற்று நாழிகை கூட காணப்படவில்லை என்றாள். இவர்கள் இணைபிரியாதவர்கள் பிரியநேர்ந்தால் இருவருக்கும் பெருத்த சங்கடத்தைக் கொடுக்கு

ரோஹிணிக்கு அங்காரகன் ஆகாதவன்

மாம். அம்மாதிரி பிரிவு ஏற்பட்டிருக்கும் போது குரூர சுபாவமுள்ள சிகப்பு நிறமுடைய அங்காரகன் ரோஹிணியைப் பார்த்தால் சகிக்கமுடியாத கொடுமையாம். [ஆ. கா.- ஸ. 46, ச். 6-ல்,] ஸ்ரீ ராமரில்லாத ஸமயத்தில் ராவ

ணன் சீதையைப் பார்த்ததற்கு இதை ஒப்பிட்டிருக்கிறது. [ஸு.கா. - ஸ. 15, ச். 22-ல்] சீதாதேவி சோக ஸாகரத்தில் ஆழ்ந்திருப்பதைக் குறித்து வரைகையிலும், அங்காரக கிரகத்தால் பீடிக்கப்பட்ட ரோஹிணி போன்றவளாய் - என்றும், ஸு. கா.-ஸ.17, ச். 24-ல், க்ரூர கிரகங்கூடிய ரோஹிணி போல் ராக்ஷஸிகளால் ஸீதை சூழப்பட்டிருந்தாளென்றும், யு. கா. - ஸ. 24, ச். 7-ல், ஸ்ரீராமர் லங்கையைப் பார்த்தவுடன், அதில் சீதை மிகவும் சிரமத்திலும், துக்கத்திலுமிருப்பதை நினைத்துக்கொண்டு, ரோஹிணி தேவி அங்காரக கிரகத்தால் பீடிக்கப்பட்டிருப்பதுபோல் ராவணனால் பீடிக்கப்பட்டிருக்கிறளே என்று விசனப்பட்டார் என்றும் இருப்பதனால், தன்னை அங்காரகன் அணுகுவது ரோஹிணிக்கு மகா ஸங்கடமாம். இந்த க்ரூர கிரகம் வக்கிரமாயிருந்தால் துன்பம் சொல்லத் தேவையில்லையாம். ஸ்ரீராமர் திரும்பிவர மறுத்தபின் பரதர் அயோத்யையில் பிரவேசிக்கும்போது, அந்நகரம் சந்திரனது ஆசைக்கிடமான **ரோஹிணி தேவி வக்ரித்த க்ரூர கிரகத்தினால் பீடிக்கப்பட்டுத் தனியே** நிற்பதுபோல் இருள் மூடியிருந்ததாக சொல்லியிருக்கிறது [அ. கா. - ஸ. 114, ச். 3]. கோபாவேசமாய் ராவணன் சீதைமீது பாய்ந்தது, ஆகாயத்தில் அங்காரகன் ரோஹிணியை நோக்கி ஓடுவதற்குச் சமானமாயிருந்ததாம் [யு.கா.-ஸ. 93, ச். $46\frac{1}{2}$]. அடுத்த

ரோஹிணிக்கும் புதனுக்கும்கூட பகை

படியாக, ரோஹிணிக்கும் புதனுக்கும் ஆகாதென்பதும் அழுத்தமாய்க் கூறப்பட்டிருக்கிறது. [ஆ.கா.-ஸ. 49, ச். $7\frac{1}{2}$-ல்], ராவணன் சீதையை அபகரித்தது **புதன்** ரோஹிணியைப் பிடித்துக்கொள்வது போலிருந்தது எனப்பட்

டிருக்கிறது. சந்திரன் தவிர மற்ற கிரகங்கள் ரோஹிணியில் சஞ்சரிப்பது அந்நக்ஷத்திரத்திற்குச் சரிப்படாதாம். அதிலும் குரூர கிரகங்களிருப்பது கொடுமையாம். [ஆ. கா. - ஸ. 18. ச். 17-ல், சூர்ப்பணகை சீதையைப் பிடிக்க ஓடியது, ரோஹிணியை குரூர கிரகம் பிடிக்கப்போவது போலிருந்ததென்கிறார். ஸு. கா. - ஸ. 19, ச். 9-ல் ராவணன், துக்க ஸாகரத்தில் ஆழ்ந்து கிடந்த சீதையை நாடினது, **கேது** என்னும் கிரகத்தால் ரோஹிணி தாபமுண்டாப் போலிருந்ததாம்.

கேது

ஆகவே, அங்காரகன், புதன், கேது இம்மூன்று கிரகங்களும் ரோஹிணிக்கு மிகவும் ஆகாதவர்கள் என்றாயிற்று.

3. ஏற்கனவே சொன்னபடி, ஸு. கா. - ஸ. 33, ச். 7-ல் நக்ஷத்திரங்களில் சிரேஷ்டமான ரோஹிணி சந்திரனைப் பிரிந்து சுவர்க்கத்தினின்று விழுந்தாப் போல், சீதையைப் பார்த்தாலிருந்ததாம். ஆகவே, ரோஹிணியும் சந்திரனும் பிரிவதில்லை என்றும், பிரிந்தால் துக்கம் என்றும் ஏற்படுவதுடன், இவர்களைச் சேர்த்துவைப்பதன் சிலாக்கியதை எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. கி. கா. - ஸ. 35, ச். 14. சுமாரில், ரோஹிணியுடன் சந்திரனைச் சேர்த்து வைப்பதுபோல் சுக்ரீவன் ராவணனைக் கொன்று சீதையை ஸ்ரீ ராமருடன் சேர்த்துவைப்பார், என்று **முன்னறிவிப்பாயும்** உறுதியாயும் சொல்லப்பட்டிருப்பதுடன், ஸு. கா. - ஸ. 37, ச். 24-ல், ஆஞ்சநேயர் ஸீதாதேவியை நோக்கி, "அம்மா, நீர் என் முதுகின் பேரில் ஏறிக்கொள்ளும், நான் உம்மை, **ரோஹிணி**

யைச் சந்திரனுடன் சேர்த்துவைப்பதுபோல், ஸ்ரீ ராமருடன் சேர்த்துவைக்கிறேன்,'' என்றும், அதே காண்டம், ஸ.39, ச். 45-ல், ரோஹிணி சந்திரனைச் சேர்வது போல் சீதாதேவி ஸ்ரீராமரைச் சேரப்போவதாக ஆஞ்சநேயர் சீதைக்கு **ஜ்யோதிஷம் போலும்** கட்டாயம் நடக்கப்போவதாயும் சொல்லுகிறார். ரோஹிணி - சந்திரனைப்பற்றி இவ்வளவு தடவைகள் இத்தனை விதங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

4. (i) அடுத்தபடியாக, சந்திரன் புனர்வசு நக்ஷத்திரத்துடனிருப்பது இன்பமானதாம். பனி நீங்கிப் புத்தொளிபெற்ற சந்திரன் புனர்வசு நக்ஷத்திரத்தில் பிரவேசிப்பது போல் என்கிறார் [பா. கா. - ஸ. 29, ச். 25].

புனர்வசு

(ii) புனர்வசு 4-ம் பாதம் ஸ்வக்ஷேத்ரத்தில் மட்டுமல்ல. அதற்கடுத்தாப்போல் சந்திரன் புஷ்யத்திலிருப்பதையும் சிலாகித்து இருக்கிறது. சந்திரனுக்குக் கடகம் ஸ்வக்ஷேத்ரமல்லவா? [அ. கா. - ஸ. 2, ச். 12]. புஷ்யத்துடன் சந்திரனிருப்பதை முகூர்த்த பாவத்திலும் புகழப்பட்டதை அறிந்தோமல்லவா?

பூசம்

(iii) கடைசியாக, சந்திரன் சித்ரா நக்ஷத்திரத்துடனிருப்பது பற்றிப் பிரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமர் சீதையுடனிருந்து விளங்கியது, சந்திரன் சித்ரா நக்ஷத்திரத்துடனிருந்தாப் போலிருந்ததாம் [ஆ. கா. - ஸ. 17, ச். 4].

சித்ரா நக்ஷத்திரம்

சந்திரன் நான்கு நக்ஷத்திரங்களில் வசிப்பது போக மற்றவைகளில் சஞ்சரிப்பதில், சந்திரனுக்

குள்ள மனப்பான்மையைக் குறித்துப் பிரஸ்தாப மில்லை. ஸ்ரீ ராமாயணத்தில் வால்மீகியின் புகழை அதிகமாய்ப் பெற்றது சந்திரன்தான். அவருக்கு ஸுந்தரகாண்டம் ஐந்தவாது ஸர்க்கம் பூராவையும் உபயோகித்திருக்கிறார். அதே காண்டம், 57-வது சர்க்கத்தில் ஒரு பெரிய உருவகவணி கூட்டியதிலும் சந்திரனையே முதலில் காட்டியிருக்கிறார். இச்சந்தர்ப் பத்தில், மேற்சொன்ன புனர்வசு, புஷ்யம் போக, ஸ்வாதியையும், திருவோணத்தையும் உபயோகப் படுத்தியிருக்கிறார். சந்திரனைப்பற்றி பிரஸ்தாவித் திருப்பதையும் புகழ்ந்திருப்பதையும் ஸம்பூர்ணமாக ஜாப்தா எடுக்கமுடியாது.

5. இதுபோக, சித்தா நக்ஷத்திரத்தைப் பற்றி இன்னம் ஒரு தரம்தான் பேசியிருக்கிறார். ஆ. கா. - ஸ.46, ச். 9, 10-ல், ராவணன் சீதாதேவி முன் தோன்றியது, சனி சித்தா நக்ஷத்திரத்தில் பிரவேசிப்பது போலிருந்ததென்கிறார். அப்படிப் புகும்போது, சனிக்குத் தெம்பாம். நக்ஷத்திரத்திற்கு திகிலாம்.

சித்தா சனி

6. சனியைப்பற்றிப் பேசிய பின் ராகு, கேதுக்கள் வருகிறார்கள். கிரஹணம் பிடித்துவிட்ட பின் சூர்ய, சந்திராள் பிரகாசிக்கும் உபமானத்தைக் காட்டக்கூட, சூரியனை ஒரு தடவையும், சந்திரனை அநேக தடவைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறார். விழுங்கி விடுதலை செய்கிற கிரகம் ராகுவாகவே பெரும்பான்மையாய் இருக்கிறது. ஒரே தடவை தான் கேது சந்திரனைப் பிடித்து விட்டதாக விருக்

கிறது. [அயோ. கா. ஸ. 18. ச். 6]. சூரிய கிரஹண மும் ஒரு தடவைதான் [அ. கா. ஸ. 63, ச். 1]. மற்ற விடங்களிலெல்லாம், சந்திரனை ராகு விழுங்கிவிட்ட பின் சந்திரன் பிரகாசித்தாற்போல், என்றே இருக் கிறது [அ. கா. - ஸ. 22, ச். 67-8 ; ஆ. கா. - (1) ஸ. 27- ச். 20, (2) ஸ. 36 - ச். 20, (3) ஸ. 63 - ச். 9, கிஷ்கிந்தா காண்டம் - (4) ஸ. 22 - ச். 17 ; (5) ஸு. கா. - ஸ. 1. (5) ச். 184. (6) ஸ. 19 - ச். 15, (7) ஸ. 29-ச். 7, (8) ஸ. 35 - ச். 86; (9) ஸ. 36 - ச். 5 ; (10) யு. கா. - ஸ. 103 - ச்-2 - 3, (11) 30-33].

7. இதற்கடுத்தபடி, கிரகங்களுக்குள் பகையும், அவைகள் மும்முரமாய் யுத்தஞ்செய்வதும் கூறப்பட் டிருப்பதைப் பார்க்கிறோம். அதாவது, அங்காரகனுக் கும் புதனுக்கும் பகை. அவர்களிருவரும் சண்டை யிடுவதை வாலியும் சுக்ரீவனும் சண்டையிட்டதற்கும் [கி. கா. - ஸ. 12 - ச். 17]. வஜ்ர தம்ஷ்ட்ரனும் அங் கதனும் யுத்தஞ்செய்ததற்கும் [யு. கா. - ஸ. 54 - ச். 28 - 9] ஒப்பிடப்பட்டிருக்கிறது. அங்காரகனை இவ்விஷயத்தில் பன்முறை குறைவாகவே பேசி யிருக்கிறது.

8. ஆகவே, ஜனன கட்டத்தில் 6-கிரகங்களோடு நிறுத்தினரே தவிர, மற்ற விடங்களில் 9-கிரகங் களைப்பற்றியும் சொன்னதுடன், தூமகேது, திரி சங்கு, துருவன் இவர்களையும் கிரகங்கள்போல் எடுத் துரைத்திருக்கிறார் [அ. கா. - ஸ. 41-ச். 11—திரிசங்கு ; ஸு. கா. - ஸ. 19-ச். 9—தூமகேது—யு. கா. - ஸ. 4 - ச். 51 - 54—தூமகேது—யு. கா. - ஸ. 103 - ச். 32— தூமகேது].

9. கிரக நக்ஷத்திர சம்பந்த விஷயமாய் இப்போது எவ்வளவோ விஷயங்கள் கண்டு பிடிக்கப் பட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மேற் சொன்ன விஷயங்கள் காயப் படுத்தப்பட்டிருக்கின் கின்றன வென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேணும்.

---

# 5. ஸாமுத்ரிகா லக்ஷணம்.

வான சாஸ்திரத்தைக் கொண்டு பலனறியும் முறையைப் பற்றி ஸ்ரீ ராமாயணத்தில் வரையப்பட்டிருப்பனவற்றை ஆராய்ந்தோம். அடுத்தபடியாக ஒரு வ்யக்தியைப் பார்த்து லக்ஷணங்களைக் கண்டு அன்னாரின் குணாதிசயங்களைக் கண்டறியும் ஸாமுத்ரிகா சாஸ்திரத்தைப் பற்றி ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதைக் கவனிப்போம். இதில் ரேகா சாஸ்திரம் ஒரு பகுதி. இந்த சாஸ்திரம் மேல் நாடுகளிலும் பண்டைக் காலத்திலிருந்து வழங்கிவந்து இப்போது ப்ரமாதமாக விருத்தியாயிருக்கிறது.

இது ஸ்திரீ புருஷர்கள் இருபாலார்க்கும் தனித்தனியே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்ரீ ராமயணத்தில் ப்ரதானமானவர்களாக ஸ்ரீராமர் ஸீதை இவர்களிட சாமுத்ரிகா லக்ஷணங்கள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீமத் ராமாயணம் தோன்றியதின் வரலாறு பலருக்குத் தெரிந்திருக்கும். தவம் வேதாத்யனம் இவைகளை எப்போதும் செய்துவந்து வேதத்தைப் பூரா அறிந்தவரான நாரத மஹரிஷியை வால்மீகி ரிஷி எல்லாமொருங்க ஒருவரிடம் கிடைப்பதரிதான 16-திவ்ய குணங்களுள்ள புருஷன் இப்போது யார் இருக்கிறார் என்று வினவினார். திரிலோக சஞ்சாரியான நாரதரின் பதிலில் இக்ஷ்வாகு வம்சத் ஸ்ரீராமர் என்று சொல்லி அவர் நியம(

மஹா வீர்யவான், காந்தியுள்ளவர், எல்லாரையும் தன் வசமாக்கி ஆளுகிறவர், புத்திமான், நீதி உடையவர், வாக் ஸாமர்த்தியமுள்ளவர், ஐச்வர்யமுள்ளவர், சத்ருக்களை அழிப்பவர் என்று சொல்லிக்கொண்டே போகையில் மற்றவற்றை எடுத்துரைப்பதற்கு முன் ஸ்ரீராமருடைய தேகத்தில் அமைந்திருக்கும் சாமுத்ரிகா லக்ஷணங்களைச் சொல்லிவிட்டு மற்ற குணங்களைச் சொல்லி கேள்விகளுக்குப் பதிலை பூர்த்திசெய்தார். ஸ்ரீராமர் நாரதர்முன் ப்ரஸன்னமாகியதாகத் தெரியவில்லை. குணங்களை யோசித்துக்கொண்டே போகையில் சத்ருக்களை அழிப்பவர் என்ற உடனே அந்த சக்தியைக் காட்டக்கூடிய தோள்களையுடைய ஸ்ரீராமருடைய உருவம் நாரதருக்கு ஞாபகம் வந்து தோன்ற அதை வர்ணித்துவிட்டு மேற்கொண்டு குணாதிசயங்களைக் கூறினாரோ என நினைக்க இடமிருக்கிறது. ஸ்ரீராமருடைய சாமுத்ரிகா லக்ஷணங்களாவன. (1) எடுத்தடியில் தென்படும் புஜபராக்ரமத்தைக் காட்டக்கூடிய வசீகரமான உயர்ந்த தோள்கள். உயரத்தோடு இராமல் தசைப்பற்றால் மறைக்கப்பட்ட எலும்புகளையுடைய பெருந் தோள்கள். (2) முழங்கால் வரையுள்ள (ஆஜாநுபாகுக்களான) பெரிய கைகள். (3) சங்குபோன்ற கழுத்து, [பார்க்கிறவர் கண்ணை சற்றே நிமிர்த்தினால்] (4) தசைப்பற்றுள்ள கன்னங்கள். (5) அழகிய தலை. (6) ஸௌந்தர்யமுள்ளநெற்றி. (7) [தாமரைப்பூ போன்ற] அகன்ற கண்கள். [கீழே கண்களைத் தாழ்த்தினால்] (8) விசாலமான மார்பு, உயர்ந்த மார்பு. (9) சரியான உயரமுள்ள உருப்புக்கள். (10) சரியாய் பிரிக்கப்

பட்ட அவயவங்கள். (11) நேசிக்கத்தக்க நிறம் முதலான மங்களகரமான லக்ஷணங்களுடன் கம்பீரமான நடை இன்னம் கீழே திருவடிகளுக்குப் போகவில்லை. அவர் சரணாகத வத்ஸலன். தன்னையடைந்தவரை ரக்ஷிக்கப்பட்ட வெகு விசேஷகுணங்களையுடையவர் என்றதைப்பற்றி ப்ரச்னை இல்லை. மேலும் கேழ்க்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் தவக்கப்படுகிறது. ஆகவே திருவடிகளுக்கு கண் போகாமல் பதில்களை பூர்த்திசெய்ய தேகாந்தரத்தின் வச்யகரமான நிறத்தைச் சொல்லி மேலே பதில் சொன்னார் எனவாகும். மேலே சொன்ன லக்ஷணங்கள் யாவும் ச்ரேஷ்டமான பரமபுருஷ லக்ஷணங்களன்றோ?

இவற்றில் பல சுந்தரகாண்டம் 35-வது சர்க்கம் 16, 17-வது ச்லோகங்களில் சற்றேறக்குறைய இதே பாஷையில் மறுபடி கூறப்பட்டிருக்கின்றன. இவற்றையோ மற்றவற்றையோ சாஸ்திரோக்தமாய் அதற்குரிய தலைப்புக்களால் ஸூக்ஷமத்தால் அறியும்படி அதே ஸர்க்கத்தில் அடுத்த 18-முதல் 21-ச்லோகங்களில், ஹநுமார் ஸீதாதேவிக்கு வெளிப்படையாய் சொல்ல இயலாத மங்களக் குறிகள் பலவற்றை நான்கே ச்லோகங்களில் மிகச் சுருக்கி நுட்பமாக அருளியிருக்கிறார். இவற்றினுட் பொருள்களை சாமுத்ரிகா சாஸ்திரந் தெரிந்தவர்கள் மட்டுந்தான் அறியக்கூடும்.

அநாகரீகம் அல்ல

சிலர் இந்த சந்தர்ப்பத்தை அதாவது ஒரு ஸ்திரீக்கு ஒருவன் அவளது புருஷனுடைய லக்ஷணங்களை உரைப்பது அநாகரீகம் என்று சுட்டிக் காட்டுகிறார்கள். இது வெளிப்படையாய் அசங்கியமாய் இல்லை, சாஸ்திர

மறிந்த நவ வியாகர்ண பண்டிதர் ஹநுமான் சொல்பவர். கேழ்ப்பவள் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அவதாரமான ஸீதாதேவி. ஸாமுத்ரிகா சாஸ்திரந் தெரிந்தவள். அவள் ஸ்ரீ ராமருடைய திவ்ய லக்ஷணங்களைக் கண்குளிரப்பார்த்து மனமார அநுபவித்திருக்கிருள். சூக்ஷ்மமாய்ச் சொல்லும்போதே அனைத்தையும் அறிந்துகொள்ளக் கூடியவள். சூழ்ந்திருப்பவர்கள் ராக்ஷஸிகள். ஸமஸ்கிருதமறியாதவர்கள் ஓடிப் போயும் விட்டார்கள். ஸ்ரீ ராமர் தூதர்தான் என்று மனதில் படியும்படி, வெளிப்படையான ச்லாக்யமான அடையாளங்களுடன் பரமரகஸ்யமானவைகளையும் எடுத்துச் சொல்லவேண்டியது மிகவும் அவசியமென்று சொல்லப் பட்டவைகளேயன்றி வெளிப்படையாய் நாகரிகக் குறைவாய் பிறரறியும்படி சொல்லப்பட்டவைகளல்ல. எல்லாம் சூக்ஷ்மம். சாஸ்திரோக்தமாய் சுட்டிக் காட்டினமாத்திரத்தில் பூர்ணமாக அவைகளை மனக்கண் முன்னே கொண்டு ஞாபகப்படுத்தி தேவி ஆனந்தித்தவளானுள். அங்ஙனம் மிகமிக உயர்ந்தவழியில் அவைகளை ஸீதைக்கு நினைவு மூட்டியது ச்லாகிக்கத்தக்கதாகும். அதில் பிசகொன்றும் இல்லை.

### ஸ்ரீராமர் லக்ஷணங்கள் போலவே லக்ஷ்மணருடையவையும்.

முன்பு ஸ்ரீ ராமருடைய ஜாதகத்திற்கும் லக்ஷ்மணருடைய ஜாதகத்திற்கும் சந்திரன் அதே ராசியில் வேறு நக்ஷத்திரத்தில் சஞ்சரித்தது தவிர மாறுபாடில்லை என்று அறிந்தோமல்லவா. ஆகவே ஸாமுத்

ரிகா லக்ஷணங்களிலும் ரொம்ப வித்யாசமிராது. அதனுல்தான் வால்மீகியும் ஸ்ரீ ராமருடைய லக்ஷணங் களைச் சொல்லி லக்ஷ்மணருடையவும் அப்படியே என்று கோடி காட்டிவிட்டார்.

### ஸ்ரீராமருடைய ஸாமுத்ரிகா லக்ஷண விளக்கம்.

மேலே சொன்னபடி நான்கு சுலோகங்களில் பல லக்ஷணங்களைச் சுருக்கிச் சொன்னபடியால், சாமுத்ரிகா சாஸ்திர மறியாதவர்களுக்கு ஆதாரங் களைக் கொண்டு விபரமாய் எடுத்துரைத்தால்தான் விளங்கும். இயன்றவளவு இதைப் படிப்போருக்கும் நன்கு புலப்படும்படி எடுத்துரைக்க எத்தனிக்கப் படும். மேற்கண்ட ச்லோகங்களில் பொழிப்புரை யால், ஸ்ரீ ராமருடைய சாமுத்ரிகா லக்ஷணங்களின் தொகுதிகள் மட்டும் ஏற்படும். குறிப்பிட்ட எண் களில் அடங்கிய குறிகள் இன்னின்னவை என்று ஸாமுத்ரிகா சாஸ்திரத்தைக்கொண்டு விளங்கச் செய் வதுதான் முறையெனக் கருதி அவ்வாறு கூடுமான வரை விளக்கப்படுகிறது.

| ச்லோக அர்த்தப்படி. | ஸாமுத்ரிகா சாஸ்திரப்படி விளக்கம். |
|---|---|
| 1. மூன்று ஸ்தானங்களில் ஸ்திரர். | 1. மார்பு, மணிக்கட்டு, முஷ்டி இம் மூன்றும் கெட்டியாய்க் கடினமா யுடையவர். |
| 2. மூன்று ஸ்தானங்களில் தீர்க்கமானவர். | 2. புருவம், புஜம், விருஷணம் இம் மூன்றும் நீளமாயுடையவர். |

| | |
|---|---|
| 3. மூன்று ஸ்தானங்கள் சமானமாயுடையவர். | 3. ஒன்றேடொன்று ஏற்றக் குறைவின்றியிருக்கும் தலைமயிர் நுனியும், விருஷணங்களையும், முழங்கால்களையும், (சமமாய்) உடையவர். |
| 4. மூன்றுகளில் நீளமுடையவர். | 4. உன்னதமான நாபியையும், வக்ஷஸ்ஸையும், வயிற்றையுமுடையவர். |
| 5. மூன்றுகளில் சிவந்திருப்பவர். | 5. சிகப்பான உள்ளங் கைகளையும், கடைக்கண்களையும், உள்ளங்கால்களையும் உடையவர். |
| 6. மூன்றுகளில் திடமானவர். | 6. மினுமினுப்போடு கூடிய மழமழப்பாயுள்ள பாதரேகைகளையும், தலைமயிரையும், லிங்கமும் உடையவர் (மகா பாக்கியத்தை விளக்குபவையாம்). |
| 7. மூன்றுகளில் எப்போதும் கம்பீரர். | 7. கண்டத்வனியிலும், விலாவிலும், நாபியிலும் கம்பீரமுடையவர். |
| 8. மூன்று மடிப்புகளை உடையவர். | 8. கண்டத்திலும், வயிற்றிலும் மூன்று ரேகைகளை (மடிப்புகளை) உடையவர். |
| 9. மூன்றுகளை வணங்கினவையாயுடையவர். | 9. ஸ்தநமும், ஸ்தந நுனியும், பாதரேகையும் உள்ளாழ்ந்திருக்கப் பெற்றவர். |
| 10. நான்குகளை ஹ்ரஸ்வமாயுடையவர். | 10. மேற்காணாத நரம்புடைய கால்களையுடையவர். ஒரே மயிருடைய ரோமகூபமும்சிறிய மேட்ரமுடி, |

| | |
|---|---|
| | மாம்சம் தோற்றாத நாபியின் கீழ்ப் பிரதேசமும் உடையவர். |
| 11. மூன்று லக்ஷணங்களோடு கூடிய சிரஸுடையவர். | 11. ஏற்றக் குறைவின்றி சமமாயும், குடைபோல் குண்டாயும், விசாலமாயிருக்கிற சிரஸுடையவர் (இவை தீர்க்காயுளையும், சகல புவனத்தையும் ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தித்வத்தைக் குறிப்பனவாம்). |
| 12. நான்கு கலைகளையுடையவர். | 12. (நான்கு வேதங்களுமறிந்தவர் என்பதற்கடையாளமாக) நான்கு வேதரேகைகளைக் கட்டை விரலின் கீழ் அமையப் பெற்றவர். |
| 13. நான்கு ரேகைகளையுடையவர். | 13. நெற்றியில் நான்கு ரேகைகளையுடையவர். |
| 14. நான்கு முழ தேக பிரமாணமுடையவர். | 14. நான்கு முழமான 96-அங்குல பிரமாண தேகமுடையவர் (யாருக்கு 96-அங்குலம் தேக பிரமாணமிருக்குமோ அவர் தேவராவர் என சாஸ்திரம்). |
| 15. நான்குகள் சமானமாய் உடையவர். | 15. பாஹு, முழங்கால், தொடைகள், கன்னம் இந்நான்கு ஸ்தானங்களும் சமமாய் இருக்கப் பெற்றவர். |
| 16. பதினான்கு ஸ்தானங்களை சமமாய், ஜோடியாய் உடையவர். | 16. புருவங்கள், மூக்கின் ரந்திரங்கள், கண்கள், காதுகள், உதடுகள், முலையின் நுனிகள், முழங்கைகள், மணிக்கட்டுகள், முழங்கால் |

கள், விருஷணங்கள், இடுப்புப் பக்கங்கள், கைகள், கால்கள், ப்ருஷ்ட பாகங்கள் இப்பதினான்கும் ஜோடிகளாகவும், சமமாயும் அமையப்பெற்றவர் (இக்குறிகளை உள்ளவர் மஹாராஜராவர்).

17. நான்கு, கோரைப் பற்களாகாரமாயுள்ள பற்களை உடையவர்.

17. உரத்தனவாயும், கோரைப் பற்கள் போன்றவையாயும் நான்கு தந்தங்களை யுடையவர்.

18. நான்கினுடைய கமனம் போன்ற நடையுடையவர்.

18. யானை, சிங்கம், புலி, எருது இவற்றின் நடைபோன்ற கமனமுடையவர்.

19. பெருத்த உதட்டையும், கன்னத்தையும், மூக்கையுமுடையவர்.

19. உதடு கோவைக்கனிபோல் சிவந்து, புஷ்டியாய் அழகாய் இருத்தல், கன்னங்களிரண்டும் பருத்திருத்தல், மூக்கு நீண்டு உன்னதமாய் சுந்தரமாய் இருத்தல், ஆகிய இம்மூன்று முள்ளவர்.

20. ஐந்து அவயவங்கள் மழமழப்பாயுடையவர்.

20. கண்கள், பற்கள், சர்மம், உள்ளங்கால் இந்நான்குடன், தலைமயிரும் மழமழப்பாகவும் மிருதுவாயுமிருக்கப்பெற்றவர். (இவை பாக்கியம், நல்லபோஜனம், உயர்ந்த படுக்கை, மேலான வாகனம் இவற்றை சூசிப்பிக்கின்றனவாம்.)

| | |
|---|---|
| 21. எட்டு தீர்க்கமான அவயவங்களுடையவர். | 21. சரீரம், பின்புறம், கைகள், கால்கள், விரல், கண், காது, மேட்ரம் இவ்வெட்டும் தீர்க்கமாயுள்ளவர். |
| 22. பத்து பத்மாகார அவயவமுடையவர். | 22. முகம், வாய், கண்கள், நாக்கு, உதடு, தவடை, ஸ்தநம், நகம், கை, கால் இவை தாமரை புஷ்பம் போல் வெகு அழகான செம்மை நிறத்துடன் பிரகாசிக்கப் பெற்றவர். |
| 23. பத்து பெரும் அவயவம் கொண்டவர். | 23. மார்பு, முன் தலை, முகம், கழுத்து, பாஹுக்கள், தோள், தொப்புள், இரு புஜங்கள், பின்புறம் கண்டம் இவை கம்பீரமாயுடையவர். |
| 24. மூன்றுகளால் வியாபிக்கப்பட்டவர். | 24. தேஜஸ்விலும், யசஸ்விலும், சம்பத்திலும் எங்கும் பிரசித்தியுடையவர். |
| 25. இரண்டில் வெளுப்புடையவர். | 25. கண்களிலும், பற்களிலும் வெளுப்புடையவர். |
| 26. ஆறு உன்னதமான அவயவமுடையவர். | 26. கக்ஷம், வயிறு, மார்பு, மூக்கு, தோள்கள், முகம் இவைகள் உன்னதமாயுடையவர். |
| 27. ஒன்பது ஸூக்ஷ்மமாக இருக்கப்பெற்றவர். | 27. தலைமயிர் மீசை, நகம், தேகரோமம், கட்டை விரல், மேட்ரம் ஆகிய மெல்லிய எழு அவயவங்களும், புத்தி, திருஷ்டி ஆக மொத்தம் 9-கூர்மையாயிருக்கப் பெற்றவர். |

28. மூன்றுகளால் வியாபிக்கப்படு கிறார். 28. பூர்வாஹ்ண, அபராஹ்ண, மத்யாஹ்ந மென்கிற மூன்று காலங்களிலும் தத்தத்காலோசிதமான தர்மம் செய்பவர்.

## ஆதாரம்

இவ் வடையாளங்களைப் பகுத்தெடுத்ததும், சில வற்றிற்கு மேல் இயம்பியபடி விளக்கஞ் செய்ததும், சிலவற்றிற்குப் பலன் மொழிந்ததும், ஸாமுத்ரிகா வசனம், நாரத புராணம், வரருசி வசனம், ப்ராஹ்ம வசனம், மிஹிரர் வசனம், நந்தி வசனம், காத்யா யன வசனம் முதலிய சாஸ்திரங்களிலிருந்து வேலூர் கோபால சாஸ்திரி முதலிய பெரியோர்களால் விளக் கப் பெற்றதில் ஞாபகத்திற்கு வந்த வகையிலாகும். அந்த மஹா கிரந்தங்களையே பார்த்தறிக.

## கம்பராமாயணத்தின்படி ஸ்ரீராமரின் ஸாமுத்ரிகா லக்ஷணங்கள்

இப்படி வால்மீகி ஸாமுத்ரிகா சாஸ்திரமறிந்த வர்கள் மட்டும் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் ஸூக்ஷ்மமாய் சுருங்கச் சொல்லிவிட்டார். ஆனால் கம்பரோ வெகு நேர்த்தியாய் பெருமாளை நாம் ஸேவிப்பதானல் அநுசரிக்கும் முறைப்படி ஸுந்தர காண்டம் உருக்காட்டுப் படலம் 38-வது செய்யுளி லிருந்து 57-வது பாட்டுவரை ஸ்ரீராமரின் திருவடி யிலிருந்து திருமுடிவரையில் ஒவ்வொரு அவயவத் தையும் உபமான உபமேயங்களுடன் வருணித்திருக் கிறார். அவர் கவனத்தைக் கவர்ந்த உருப்புக்களா

வன: 1. திருவடிகள், 2. அவைகளின் விரல்கள், 3. அவற்றின் நகங்கள், 4. புறவடிகள், 5. கணுக்கால்கள், 6. தொடைகள், 7. திருவுந்தி, 8. திருமார்பு, 9. திருக்கைகள், 10. கரங்கள், 11. உள்ளங்கைகள், 12. கை நகங்கள், 13. திருத்தோள்கள், 14. திருக்கழுத்து, 15. திருமுக மண்டலம், 16. திருக்கண்கள், 17. திருவாய், 18. திருமூக்கு, 19. திருப்புருவம், 20. திருநெற்றி, 21. திருக்குழல். ஸர்வமும் எனலாம். இவற்றுடன் நடையையும் புகழ்ந்திருக்கிறார். இவைகளில் புருவம் ஒன்றுதான் நம்மிட **முன்னறிவிப்பு** விஷயத்திற்கு கவனிக்கக் கூடியதாக கூறப்பட்டிருக்கிறது. அதாவது "ஸ்ரீராமபிரான் கோபத்தால் தனது அழகான வளைந்த புருவங்களைச் சிறிது நெறித்துக் கோதண்டத்தைக் கையிலெடுத்து நாணேற்றின மாத்திரத்தில் அரக்கர் அழிந்து விடுவார்கள். அம்மாதிரி ஜனஸ்தானத்தில் அரக்கர் சேனைகள் யாவும் அழிந்து கழுகுகள் முதலியவைகளுக்கு இரையாயின. அதுபோல் அரக்கர் அழிவை அவரிட புருவ நெறிப்பு முன் காட்டுகிறதென்று மகிழ்ந்து தேவர்களும், முனிவர்களும், தரும தேவதைகளும், வேத புருஷனும் கூத்தாடினார்கள்" என்றிருப்பது உற்றுநோக்கத் தக்கது.

இதே மாதிரி கிஷ்கிந்தா காண்டம் நாடவிட்டப் படலத்தில் நம்பத்தகுந்தவரும் மனமடக்கமுடைய ஜிதேந்திரியருமான ஹநுமாரே ஸீதையைக் காண்பார் என்று முன்னறிந்து ரகஸ்யமாய் அவருடன் திருப்பாதங்கள் தொடங்கி திருக்கேசமீறாக ஸீதாதேவியின் அங்க அவயவ அடையாளங்களை ஸ்ரீராமர்

சித்திரித்திருக்கிறார். வெகு அழகான இந்த வருணனைகள் கவித்திறத்தைக் காட்டுகின்றன. கவி சாதுர்யம் ப்ரமாதமானது, அமோகமானது. ஸ்ரீ ராமரையும் ஸீதாதேவியையும் தியானிக்க உத்தேசமுடையவர்கள் இந்தப் பாட்டுகளை அர்த்தத்துடனறிந்து பாடம்பண்ணி ஓவியத்தெழுதினைப் போலோ, உருக்கொண்டாற்போல் பிம்பங்கள் ரூபமாக மணக்கண்முன் ஸ்திரமாய் நிறுத்தியோ, மனமடக்கமுடன் ஸ்தோத்திரம் பண்ணினால் இவ்வுலகில் ஸகல நற்பலன்களையும் பெற்று பரலோகத்திலும் நற்கதியடைவார்கள். ஆனால் இவைகளில் மேற் சொன்ன ஸ்ரீ ராமரின் கோபாவேசத்தாலாகிய புருவநெறிப்பினால் அரக்கர் அழிவார் என்பதைத் தவிர முன்னறிவிப்பானது ஒன்றும் காணோம். திரேதாயுகத்தில் சாஸ்திர பரிசயத்தை அநுசரித்து என்னென்ன நற்குறியுடையவர்களுக்கு எவ்வித நற்பலன்களுண்டாகுமென வ்யக்தமாய் கூறப்பட்டாவது சூசிக்கப்பட்டாவது இருக்கிறது. இப்பால் தம்பதிகளுடைய லக்ஷணங்களனைத்தும் வியக்கும்படி அற்புதமாய் வருணிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர அவைகள் எதாலும் பலன் எதுவும் சூசிக்கப்படக் காணோம்.

### சீதாதேவியின் ஸாமுத்ரிகா லக்ஷணங்கள்

சீதாதேவியின் லக்ஷணங்களைப்பற்றி வேறு கிரந்தங்களின் சகாயமில்லாமலே, ஜானகியின் வாக்கிலிருந்து இயம்பியிருப்பனவற்றைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம். அவை பனிரண்டு. அவைகளிற் சிலவற்றிற்கு பலனும் வியக்தமாய்ச்சொல்லப்

பட்டோ, சூசிக்கப்பட்டோ இருக்கிறது. பிராட்டி யாரை இரண்டு தடவை அவள் புருஷன் இறந்து விட்டதாக எண்ணிப் புலம்பும்படி செய்திருக்கிறுன் ராவணன். முதல் தடவை, யுத்த காண்டம், 33-வது ஸர்க்கத்தில், அவன் மாயா சிரஸைக் கொண்டுவந்து சீதையின் முன் எறிந்தபோது, சோதிடர் ஸ்ரீராம ருக்கு தீர்க்காயுசு என்று தன்னிடம் சொல்லியிருந்த தாகவும், அது பொய்யாகிவிட்டதாகவும் கதறினுள். வேதவேதாங்க தத்வஜ்ஞரும், ஸர்வ சாஸ்த்ரார்த்த மறிந்தவரும் எல்லாமுணர்ந்தவருமான ஸ்ரீராகவ ருக்கு எப்படி மரணம் ஏற்படும் - என்று சொல்லி துக்கித்துக்கொண்டே, கெடுதல் வரப்போகிறதென் பதைத் தெரிந்துகொண்டு, அதை விலக்கக்கூடிய சாமர்த்தியம் அவருக்குண்டாகியிருந்தும், தான் மிருத்யுவாய் அவரை அங்கு இழுத்து மரணமடை வித்ததாய் அழுகிறுள். சீதை தனக்கு தீர்க்கதரிசி கள், 'அவள் தீர்க்க சுமங்கலியென்றும். வீரபத்னி யென்றும், புத்திரரைப் பெறுவாள் என்றும், ராஜ பத்தினிகள் அனைவரிலும் மேன்மையானவள் என் றும், அவளுடைய பர்த்தா அவளை ஆதரிப்பார் என் றும்,ஸாமுத்ரிகா லக்ஷணங்களைக் கொண்டும், யஜ்ஞ யாகாதிகளில் உத்பவிக்கும் சம்பவங்களாலும், சகு னங்களாலும் எடுத்துரைத்தார்களே' என்கிறுள். அச்சமயம் சீதாதேவி, அவை பழுதாயினவென்று பயந்தபோதிலும் உரைத்தவை எதுவும் பொய்த்து விடவில்லை.

அந்தப்படியே, யுத்த காண்டம் 48-வது ஸர்க்கத் தில் ஸ்ரீராமலக்ஷ்மணுள் இந்திரஜித்துவினுல் தரை

யில் வீழ்த்தப்பட்டு ஸ்மரணையற்றிருந்தபோது, ராக்ஷஸர்கள் ஸீதையை புஷ்பக விமானத்தில் ஏற்றிவந்து அவர்களை அவளுக்குக் காண்பித்து, "அவர்களிருவரும் இறந்துவிட்டார்களே, இனி என்ன செய்யப் போகிறாய்" என்று பயமுறுத்தியபோது, உண்மையில் அவர்கள் மரித்துவிட்டதாகவே எண்ணித் துக்காக்ராந்தையாய் சோகத்துடன் புலம்பி, அந்த தேவி, "ஜோஸ்யர்கள் எனக்குப் பொய்யாக நல்ல பலன்களைச் சொல்லிப்போந்தனரே" என்று சொல்லிக்கொண்டே, "அவர்கள் அஸத்யவாதிகளல்லவே, எப்படி பலன் சொன்னார்கள், எவ்வாறு இந்த நிலை ஏற்பட்டது என்று அறியமுடியவில்லையே!" என்றெல்லாம் கதறுகிறாள். அப்போது அவள் மேலும் உருக்கமுடன் சொன்னதாவது: "என்னிடத்தில் எல்லா லக்ஷணங்களும் அமைந்திருக்கின்றனவே, அவைகளின் சுப பலன்களைக் கெடுக்கக்கூடிய கெட்ட குறிகள் எவையுமில்லையே," என்கிறாள். எனினும், அந்த சமயம் கொஞ்சம் ஆறுதல்செய்துக் கொண்டு தன்னிடத்திலுள்ள சுபமான ஸாமுத்ரிகா லக்ஷணங்களை எடுத்துரைத்து, அவைகளின் பலன்களையும், சாஸ்திரத்தில் சொல்லி யிருப்பதையும் காட்டுகிறாள் :—

1. ஒரு ஸ்திரீக்கு பாதத்தில் தாமரைப் புஷ்ப வடிவிருந்தால், அவள் ராஜாவான தன் புருஷனுடன் பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளக்கூடியவள் என்கிறபடி என் பாதத்தில் தாமரைப் புஷ்ப ரேகைகளிலிருக்கின்றன.

2. என் கேசம் மிருதுவாயும், நுனி ஏற்றத்தாழ் வில்லாமல் சமமானதாயும், நீளமாயுமிருக்கிறது.

3. என் புருவங்கள் சேராமலிருக்கின்றன. அதா வது, ஒன்றையொன்று தொடாமலிருக்கின்றன.

4. என்னுடைய இடை, கேசமின்றி குண்டா யிருக்கிறது.

5. என் பற்கள் அடர்த்தியாயிருக்கின்றன.

6. என் கன்னங்கள், கண்கள், கைகள், கால்கள், கணுக்கால்கள், துடைகள் ஆகியவை சமமாய் இருக் கின்றன.

7. என் விரல்களில் நகங்கள் குண்டாய்ப் பருத்து, மத்தியில் சமமாய் இருக்கின்றன.

8. என் ஸ்தனங்கள் நெருங்கியும், உறுதியாயும், பருத்தும், நுனி ஆழ்ந்துமிருக்கின்றன.

9. என் தொப்புள் ஆழமாயும், சுற்றிப் பருமனாய் உயர்ந்துமிருக்கிறது.

10. என் மார்பு கனமாய் விருத்தியடைந்திருக் கிறது.

11. என் தேகம் ரத்ன வர்ணமுடைத்தானது.

12. என் தேக கேசம் மிருதுவாயிருக்கிறது.

“சாஸ்த்ரஜ்ஞர்கள் என்னிடம் மேற்சொன்ன பனிரண்டு (12) சுபலக்ஷணங்கள் அமைந்திருப்பதாக அறிந்திருக்கிறார்கள். இவைகளுடன்—

1. என் கை விரல்களின் மத்திய பாகத்தில் கோதுமை ரேகைகள் இருக்கின்றன.

2. விரல்களின் மத்தியில் கோணலான இடைவெளிகள் இல்லாமலிருக்கின்றன.

3. என்னுடைய பாதங்கள் எனது தேக நிறத்தையுடையன.

4. என் நகையோ சாந்தமான இன் சிரிப்பு.

"ஸ்திரீ ஸாமுத்ரிகா லக்ஷணமறிந்தவர்கள் என்னிடம் இந்த எல்லா லக்ஷணங்களும் இருப்பதாகச் சொல்லி, நான் என் பர்த்தாவுடன் பட்டாபிஷேகம் செய்துக் கொள்ளப்போவதாகவும் சொன்னார்கள். இதெல்லாம் பொய்யாகிவிட்டதே," என்று அலறுகிறாள். முன் தடவைபோலவே இப்போதும், எந்தப் பலன் சொன்னதும் வீணாகவில்லை, எல்லாம் சாஸ்த்ரஜ்ஞர் சொன்னபடியே பலித்தது என்பது யாவருக்குந் தெரிந்ததே. இதற்கேற்ப, சீதையைத் தேற்றி, ஸுந்தர காண்டத்தில், சொப்பன பலன் நல்லது என்று ஆறுதலளித்த ஆபத்பாந்தவி, திரிஜடை இப்போதும் சோதிடரிலும் மேலாய் ஒரு சிறந்த நற்குறியைக்கொண்டு தைரியம் சொல்லுகிறாள். அதாவது, சீதையிடம், "அவர்கள் உம்மை ஏற்றிக்கொண்டு வந்திருக்கும் இப் புஷ்பகவிமானம் ஸுமங்கலிகளை மாத்திரந்தான் ஏற்கும், அதில் உங்களை வீற்றிருக்கச் செய்வதே ஒரு பெரிய சுபலக்ஷணந்தான். இந்த ஸ்தான பலமே ராக்ஷசர்களுடைய விரட்டலைப் பொய்யாக்குகிறது," என்றும், இதர

காரணங்களைக் காட்டியும் ஜோஸ்யம் சொல்லு கிருள். ஸீதாதேவியும் மனத்தெளிவுற்று, சிரிப்பு கொள்ளுகிருள். ஆகவே, ஜாதகம், கோசாரம், சாமுத்ரிகா லக்ஷணங்கள் முதலியவை இல்லாமல் இதர ஹேஷ்யங்களைக்கொண்டு நடக்கப்போகிற விஷயங்களை அறியக்கூடுமென்று ஏற்படுகிறது. அவைகளைப் பற்றியும் நிரம்ப ஸ்ரீ ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றையும் கூடுமான வரை கவனித்துப் பார்க்கலாம்.

ஸாமுத்ரிகா லக்ஷணங்களைப்பற்றி சொல்லி முடிக்குமுன் சில முக்யமான வார்த்தைகள் சொல்ல வேணுமாயிருக்கிறது. கம்பரைப்போலவே துளசி தாஸரும் ஸாமுத்ரிகா சாஸ்திரத்தை சூசிப்பிக்கா மல் ஸீதாராம திவ்ய தம்பதிகளை எவ்வளவோ வரு ணித்திருக்கிருர் அவருடைய அபிப்பிராயம் இவர் களுடைய ரூபலாவண்ணியத்தையும், மஹிமையையும் புகழ சாரதாதேவியாலும் ஆயிரந்தலைகொண்ட ஆதி சேஷனுலுங்கூட இயலாதென்பது. அதிருக்கட்டும், மூன்று கவிகளாலும் சொல்லப்பட்டவற்றையே எடுத் துக்கொள்வோம். இம்மஹா கவிகள் ஶூர்ப்பணகை யைக்கொண்டு ஸ்ரீ ராமர் ஸீதை லக்ஷ்மணர் இவர் களிட அழகை புகழ்ந்திருப்பதில் ஒரு ஸ்வாரஸ்யமிருக் கிறது. விச்வாமித்ரர் வஸிஷ்டர் வாயால் ப்ரம்ம ரிஷி பட்டம் பெற்ருப்போல் எதிரியால் நம் ச்ரேஷ்ட குணங்களுரைக்கப்படுவது மிகவும் ச்லாக்யமான தன்ரே. அவள் (ஶூர்ப்பணகை) இவர்களுடைய ஸர்வ லக்ஷணங்களையும் சொல்வதிலிருந்து ஸர்வ

காலத்திலும் இவர்கள் சுபமுடையவர்கள். எப்போதும் இவர்களுக்கு தீங்கொன்றும் வராது. இவர்கள் எல்லாவிதத்திலும் நன்மையையே அடைய அருகதை உடையவர்கள் என்றதாகும்.

துளசிதாஸர் மேலும் ஸ்ரீராமருக்கும் ஸீதைக்கும் அகில லக்ஷணங்களும் பொருந்தியிருந்தனவென்றுரே தவிர ஒரு ஸாமுத்ரிகா லக்ஷணத்தையும் குறிப்பாக சொல்லவில்லை. சாஸ்திரப்படி ஸ்ரீராமருக்கு திருவடிகளில் (ஒவ்வொன்றில் 24-ஆக) 48-திவ்யமான சாமுத்ரிகா லக்ஷணங்கள் இருந்ததாக கருதினதாகத் தெரிகிறது. அவைகளை இங்கு எடுத்துரைப்பதைவிட சாஸ்திர விளக்கத்திற்காக * கீழே குறிப்பில் கொடுக்கப்படுகிறது. ஸ்ரீராகவருக்கிருந்தபடியே ஸீதாதேவிக்கும் 48-நல்ல குறிகள் இருந்ததாகவும்

* ஸ்ரீராமரின் திருவடிகளிலிருந்த 48-ரேகைகளாவன: இடது காலில் 1. ஊர்த்வரேகை. 2. ஸ்வஸ்திகரேகை. 3. அஷ்டகோணரேகை. 4. லக்ஷ்மி. 5. கலப்பை 6. உலக்கை 7. சேஷா. 8. அம்பு. 9. ஆகாச. 10. தாமரை. 11. தேர். 12. வஜ்ராயுதம். 13. கோதுமை. 14. கற்பகம். 15. அங்குசம். 16. கொடி. 17. கிரீடம். 18. சக்ரம். (சுதர்சனம்) 19. சிம்மாசனம். 20. யமதண்டம். 21. சௌரி. 22. குடை. 23. மானிட. 24. வெற்றிமாலை. வலது காலில் 1. சரயூநதி. 2. பசுங்குளம்பு. 3. பூமி. 4. குடம். 5. சிறியகொடி. 6. நாகப்பழம். 7. பிறைச்சந்திரன். 8. சங்கு. 9. ஷட்கோணம். 10. முக்கோணம். 11. செங்கோல். 12. ஜீவன்புள்ளி. 13. பிந்து. 14. சக்தி. 15. அமிர்தகலசம். 16. மூன்று ரேகைகள். 17. மத்ஸ்யம் 18. பூர்ணசந்திரன். 19. வீணை. 20. புள்ளாங்குழல். 21. வில். 22. அம்பராத்தூணி. 23. அன்னம். 24. சிரோபூஷணம். ஆக-48.

ஸ்ரீராமசந்திரனின் வலது காலில் இருந்தவை ஜானகியின் இடது காலிலும் பர்த்தாவின் இடதுகாலில் இருந்தவை பார்யையின் வலது காலிலுமிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஸீதாதேவி தன்னிடம் எல்லா சுபக்குறிகளும் இருப்பதாகவும் அவைகளின் நல்ல பலன்களைக் கெடுக்கக்கூடிய கெட்ட குறிகள் எதுவுமில்லாதிருந்தும் தனக்கு எப்படி கஷ்டம் வந்ததென்று வினவிக் கொண்டாள் என்றேமல்லவா - அப்படியும் இருக்குமோவென்றெண்ணக்கூடும். இருந்தமையாற்றான் ஜானகி அதைக் குறிப்பாகச் சொன்னாள். இதற்கு உதாரணம் துளஸிதாஸ் ராமாயணத்தில் பால காண்டம் 67, 68-ம் பத்-ல் மாத்திரம் சொல்லியிருக்கிறது. அதுதான் உமாதேவியின் ஸாமுத்ரிகா லக்ஷணத்தின் தன்மை. ஸீதாதேவியின் தாயார் ராணி ஸுனயனைவைப்போலவே முன்னால்பார்வதியின் கன்னிகைப் பருவத்தில் அவளிட தாயார் ஹிமாலயா தேவி தன்னிட பெண்ணின் ஸாமுத்ரிகா லக்ஷணங்களைப்பார்த்து பலன் சொல்லும்படிநாரதரைக் கேட்டாள். அவர் கிரிஜா தேவியிடம் எல்லா சுபலக்ஷணங்களும் அமைந்திருப்பதாயும் ஆனால் அவளிட கையில் இருக்கும் ரேகை ஒன்றின் காரணமாக அவளுடைய புருஷன் அஸாதரணமானவராய், நவரத்னங்கள், பொன் முதலிய ஆபரணங்கள் பூணாதவராய், நாகாபரணம் பூண்டவராய் ஜடை தரித்தவராய் இருப்பார் என்று சொன்னார். ஹிமவானும் ஹிமாலயாதேவியும் கலக்கமுற்றபோதிலும் மஹா சக்தி அவதாரமான உமாதேவி மட்டும் தத்க்ஷணமே

ஶிவபிரானை நினைத்து ஸந்தோஷப்பட்டாள். அவரை பர்த்தாவாக அடைய விரும்பி பிரார்த்தித்தாள். நாரதரும் அந்த தாம்பத்யம் ஸித்திக்குமென்று ஆசீர்வதித்துப்போனார். இப்போது பார்வதியும் சிவனும் ஸர்வலோக சக்தியாயிருக்கிறார்கள். ஆகவே ஸீதைக்கு இருந்தாப்போல் நல்லவைகளாகவே ஸாமுத்ரிகா லக்ஷணங்கள் இருக்கலாம் அல்லது சந்திரனுக்கு எல்லா அழகுக்கும் நடுவே களங்கம் ஏற்பட்டாப் போலவும் பார்வதிக்கு கைரேகை அமைந்தாப் போலவும் பல நல்லவைகளில் சில கெடுதலானவைகள் கலந்துமிருக்கலாம். இதற்குப் பற்பல உதாரணங்களும் கொடுக்கப்படுகின்றன. ஒன்றே ஒன்று எடுத்துச் சொல்லலாம். ஒருவன் விறகு வெட்டியாய் இருந்தவன் லக்ஷ்மீகடாக்ஷம் பெற்று ராஜாவாய்விட்டான். ராஜசபை ஜோசியரைத் தன்னைப்பற்றிக் கேட்டான். அவர் கையைப் பார்த்தால் விறகு வெட்டுகிறகையாயிருந்தது. ராஜாவிற்கு அதைச் சொல்லலாமோ? ராஜாவை தலையோடு, கால் சோதித்துப் பார்த்தான். வெளிப்படையாய் ஒன்றும் தென்படவில்லை. மனக்கலக்கம் கொண்டான். பிறகு யோசித்து உளுத்தம் மாவைப் பிசைந்து ராஜாவின் தாள்களில் ஒத்தி எடுத்தான். ஒரு பக்கத்தில் சங்கமும் மற்றொரு பக்கத்தில் சக்கரமும் இருந்தது. ஸந்தோஷப்பட்டு இவைதான் உம்மை அரசாக்கினவென்று காண்பித்தான். மன்னன் மகிழ்ந்தான். சாமுத்ரிகா லக்ஷணம் பார்த்து பலன் சொல்பவர்கள் சாஸ்திரத்தை நன்

பக்கம் 102, 11–வது வரியில் 'கலந்துமிருக்கலாம்' என்பதற்குப்பிறகு ' இதற்கு' முன் வரி பிளப்பு "அல்லது நல்லதல்லாதத்துடன் நல்லதுமிருக்கலாம்."

கறிந்து ஸம்பூர்ணமாய் எல்லா லக்ஷணங்களேயும் தீர பரிசோதித்து பலன் கூறவேணும்.

மேலே ஜாதகம், கோசாரம் ஸாமுத்ரிகா லக்ஷணம் முதலியவற்றை பேசுகையில் திரிஜடை புஷ்பக விமானத்தில் ஸீதை அமர்ந்திருக்கவிட்டது ஒரு நல்ல சூசகமென்ருளல்லவா. அதுபோன்ற பல ஹேஷ்யங்களைக்கொண்டு வரப்போகுமவைகளைச் சொல்லலாம் என்ருகிறது. அத்தகையவற்றைப் பேசப்புகுவோம்.

---

# 6. சகுனங்கள்

1. சகுனங்களைப்பற்றி ஸ்ரீ ராமாயணத்தில் நிரம்ப இருக்கிறது. ஸம்பூர்ணமாய் எடுத்துச் சொல்லக் கூடியதல்ல. முன்னறிவிப்பான முக்கியமானவற்றைப்பற்றி மட்டும் சில தலைப்புகளின் கீழ் எழுதலாகும்.

2. சகுனங்கள் என்றால், சிலர் அது மூடநம்பிக்கை என்று சட்டென்று சொல்லிவிடுகிறார்கள். அவர்களுக்குச் சகுனங்களென்றால்என்னவென்றே தெரியாதிருக்கலாம். அவை யாவை? அவைகளையறிய வேணுமா? அதனாலாயபயனென்ன? என்று கேள்வி பிறக்கலாம். சர்வ சாதாரணமாய் நடப்பனவற்றை உற்றுநோக்கி அவைகளைக் கண்டதினாலோ, கேட்டதினாலோ, பின்னால் என்ன நேர்ந்ததென்பதைக் கவனித்து ஒன்றோடொன்று ஒட்டிப் பார்த்தால், பின்னிட்டு நடக்கப்போவது நல்லதென்று காட்டியதும், கெட்டதென்று சூசிப்பித்ததும் ஏற்படும். இதை நம் முன்னோர் பற்பல தடவைகள் பார்த்து நற்சகுனங்களென்றும், துச்சகுனங்களென்றும் பகுத்து விசதமாய்ச் சொல்லி வைத்திருக்கிறார்கள். சகுனங்களால் ஆவதும், கெட்டுப்போகிறதும் ஒன்றுமில்லை. சகுனத்தால் காரியங் கெட்டுவிட்டதாகச் சிலர் நிந்திக்கிறார்கள். இது தவறு. சகுனம் வரப்போவதை முன் காட்டுகிறது. நம் முன்னோர் அநுபவப்பூர்வமாக அறிந்து சகுன சாஸ்திரம் என்று சொல்லலாம் போல் எழுதிவைத்திருக்கிறபடியால், அவை

களைத் தெரிந்துக்கொண்டு கூடுமானவரை அநுஸா ணையில் வைத்துக்கொள்வது உசிதமாகும். "நல்லதோ கெட்டதோ, நேருவது நேருகிறது, சகுனம் பார்த்துத் தொல்லைப்படுவது வேறேயா?" என்கிறார்கள் சிலர். அப்படியல்ல. சிலசமயம் கெட்டதைநிவர்த்திக்கலாம். எண்ணில்லாத அநுபவங்களில் ஒன்றைச்சொன்னால் இது விளங்கும். இது எழுதுபவரும், அவருடைய தெய்வத்தன்மைவாய்ந்த நண்பரும் முன்பு வெளியூரில் கல்வி இலாகாவில் இருந்து இப்போது மதராஸில் உயர்பதவி லா - காலேஜ் ஹிண்டு - லா ஸ்பெஷல் லெக்சரர் Sri. J. V. Bhat, M.A.L.T-யும். ஒரு தெருக் கோடியில் நின்று பேசிக் கொண்டிருக்கையில், ஒருவன் வெகு வேகமாய்த் தெருவே போனான். சகுனம் நன்றாயிராமலிருந்தது. அந்த நண்பர் அவனை, "சற்று நின்று போ, அப்பா" என்றார். அவன் திரும்பி, "என்னய்யா, நான் எவ்வளவு அவசரமாய்ப் போகிறேனென்பது உனக்குத் தெரியுமா, தடங்கல் செய்கிறாயே" என்று அவர் பேரில் கோபித்துக்கொண்டு போனான். அந்தத் தெருவில் புதியவீடு கட்டிக்கொண்டிருந்ததின் மெத்தைக் கைப்பிடிச் சுவர் அகஸ்மாத்தாய் அவன் தோளின்பேரில் விழுந்து சொற்ப காயம்பட்டது. அவன் போன அவசரத்தை மறந்து, 'சற்று நின்று போ' என்றவரிடம் வந்து, "என்னய்யா, உம்மால்தான் சுவர் என் மேல் விழுந்தது" என்றான். அவர், "சுவர் விழுமென்று எனக்குத் தெரியாது, சகுனத் தடையாய் இருந்தது. அதனால் சொன்னேன். நீ போன வேகத்திலேயே போயிருந்தால் சுவர் உன் தலைமேலேயே

விழுந்து பெரும் காயம் உண்டாக்கியிருக்கும்; நின்று போயிருந்தால் அந்தஸ்வல்பகாயம்கூட பட்டிராது." என்றார். அவன் திருப்தி அடைந்து வந்தனம்சொல்லி விட்டுப்போனான். சகுனங்களைத் தெரிந்து கொள்ளாமலே தெய்வத்தினிடம் பூர்ண நம்பிக்கை வைத்து நடப்பது சிலாக்கியம். சகுனங்களை அறைகுறையாய்த் தெரிந்துகொண்டு, எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. நன்றாயறிந்து, சகுனத்தைப் பார்த்து தைரியமாய் நடந்தால் நற்பலனுண்டாகும். கீழே காட்டப்போகிறபடி, பரசுராமர் ஸ்ரீராமரைத் தாக்கியபோதிருந்தபடி ஒரே சமயத்தில் கெட்ட சகுனமும், நல்ல சகுனமும் காட்டும். நமக்கே தெரிந்தாலல்லது, அப்போது தசரத சக்ரவர்த்தி வசிஷ்டரைக் கேட்டறிந்தபடி, சாஸ்திரஜ்ஞர்களைக் கொண்டு விஷயத்தை அறிந்து கொள்ளவேணும். சகுனங்களின்னவை என்று தெரிந்துக்கொள்ளாமலேயே அலக்ஷ்யமாய்த் தள்ளி விடவுங் கூடாது. எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்பட்டிருக்கவுங் கூடாது. செம்மையாய் அறிந்து தைரியமாய் நடந்தால் நற்பலனுண்டு.

3. தேகத்திலேயே தோன்றுங் குறிகளையும், ஆகாசத்திலும் பூமியிலும் நேரும் தோற்றங்கள் சப்தங்களையும், பக்ஷிகள் சப்தம் செய்பவைகளையும், பறவைகளும் மிருகங்களும் இதர ஜந்துக்களும் ஒருபுரமிருந்து மற்றொருபக்கம் போவது முதலியவைகளைப் பற்பல தடவைகளில் உற்று நோக்கியும், கேட்டும் பலாபலன்களைக் கண்டுபிடித்து சகுனங்க

ளாக்கியிருக்கிறார்கள். இந்த அநுபவ அறிவை நமக்குப் பயன்படும்படி சாஸ்திரமாக்கி வைத்துப்போன நம் முன்னோர்களுக்கு நாம் நன்றியறிவுடையவர்களாக இருக்கவேணும்.

## 4. தேகத்தில் தோன்றும் குறிகள்

துளசிதாஸ் ராமாயணம் வால்மீகியைப் பின்பற்றியதாக இருந்தபோதிலும் பக்தி காவ்விய நடை அழகு முதலிய அநேக விஷயங்களில் கம்பராமாயணம் மாதிரியாக இருக்கிறது. இரண்டிலும் ஸ்ரீ ராமரும் ஸீதையும் ஒருவரை ஒருவர் முதல் முதலில் கண்டபோது கண்கள் சந்தித்து காதற் ப்ரேமை உதித்துவிட்டதாக இருக்கிறது. ஸ்ரீ ராமர் தன்மனதை ஸீதையின் அழகு கவர்ந்துவிட்டதாகவும் ரகுவம்சத்தில் பிறந்தவனுடைய மனது அயலான் மனைவி பேரில் செல்லவே செல்லாதென்றும் ஆகவே தான் ஸீதையையே பத்னியாய் அடைவது நிச்சயம் என்றும் அதற்கு அறிகுறியாக தனது **வலது புஜமும் துடையும்துடிப்பதாகவும்** லக்ஷ்மணருடன் சொன்னார். துளசிதாஸ் ராமாயணம் பாலகாண்டம் 231-ம் பத்.

ஸீதா தேவியும் ஸ்ரீ ராமரை தரிசித்து விரஹதாபம் கொண்டு, அதை ஒருவாராக சமாளித்துக்கொண்டு கிரிஜா தேவி (பார்வதி) ஸன்னிதிக்குப் போய் தரிசனம் பண்ணிவிட்டு, ஸ்ரீ ராமனே தனக்குப் பர்த்தாவாய் வாய்க்கவேணுமென்று வரம்கேட்டு பெற்றுத் திரும்பும்போது அத்தேவியினுடைய எண்ணம் கூடிவருமென்பதைக்காட்ட அவளுடைய **இடது புஜமும் துடையும் துடித்தனவாம்.** அதே பா. கா.

236-ம் பத். சகுனத்தைப் பற்றி இவைதான் முதல் ப்ரஸ்தாபம். கம்பராமாயணத்தில் இந்த சமயம் ஸீதைக்கு இதே நற்சகுனங்கள் தோன்றியதாக இருக்கிறது. ஆனல் இந்தசமயத்தில் அது சொல்லப்படவில்லை. அது சுந்திரகாண்டத்தில் திரிஜடைவிற்கு முன் கூறியிருக்கிறது.

கம்பராமாயணத்தில் ஸீதையின் தேகத்தில் தோன்றிய சுபக்குறிகளில் இரண்டான இடது கண்ணும், இடது புருவமும் துடித்தது திரிஜடை கனவிற்கு முந்தியே என்றும், அந்த நன்னிமித்தங்கள் ராக்ஷஸர்கள் மத்தியில் இருக்கும் தனக்கு என்ன நல்லதை சூசிப்பிக்கக் கூடும் என்று அந்த தேவி சங்கித்ததாயும், ஆகிலும் தன்னிட **விவாகத்திற்கு முன் ஸ்ரீராமனை முதன் முதலாக கண்டபோது இதே சுபக்குறிகள் தோன்றி உடனே சுப பலனைக் கொடுத்ததினல்** இப்போதும் இவைகள் நற்பலன் வரப்போவதையே சூசிப்பிக்கக் கூடும் என்று எதிர்பார்ப்பதாயும் ஸீதாதேவி திரிஜடைக்கு சொல்லுவதைக்கேட்டு அந்த ஆத்ம ஸ்நேகிதை அந்த சுப சகுனங்களுடன் மற்றொன்றையுங்கூட அவள் கண்டதாகவும் எல்லாமும் சீக்கிரத்தில் சுபங்கள் வருவனவற்றைக் குறிக்கின்றனவென்றும் சொல்லித் தேற்றினதாக இருக்கிறது. திரிஜடை பார்த்த நற்சகுனமாவது : சீதையின் காதண்டை வண்டு வந்து பாடிவிட்டுப் போனது, அது உடனே தூதன் வந்து நல்ல செய்தி யுரைப்பான் என்பதைக் காட்டுவதாம். அதன்படி அச்சமயம் அங்கேயே விருக்ஷத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீராமதூதர் ஹனுமார் சற்று நேரத்

திற்கெல்லாம் தேவிமுன் ப்ரஸன்னமாகி விஷயங்களை எல்லாம் சீராக எடுத்துரைத்து ஆறுதலளித்தார் என்றறிந்தோம்.

வால்மீகிராமாயணத்தில் கல்யாணதருணத்தில் சகுனம் எதுவும் காணப்பட்டதாக சொல்லப்படவில்லை.

(1) கரதூஷண யுத்தத்திற்கு முன் ஆ. கா. - ஸ. 24, ச். 7½, ஸ்ரீராமருக்கு வலத்தோள் துடித்தது. (2) கபந்தனைப் பார்க்குமுன் ஆ.கா.-ஸ. 69, ச். 21-23, லக்ஷ்மணருக்கு இடது தோள் துடித்தது கெட்டது. வஞ்சுலக பக்ஷி ஜெயத்தைக் காட்டிக் கூவியது. அவன் கோர ரூபமாய் ப்ராதாக்களைத் தாக்கினன். அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். (3) கிஷ்கிந்தா காண்டம் 5-வது ஸர்க்கக் கடைசியில் ஸ்ரீராமரும் சுக்ரீவரும் ஸக்யம் பண்ணிக்கொண்டு, அன்பர்களாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, தாமரைப் புஷ்பத்திற்குச் சமமான சீதையின் இடதுகண்ணும், பொன்னுக்குச் சமானமான வாலியின் இடதுகண்ணும், அக்நிக்குச் சமானமான ராவணனுடைய இடக்கண்களும் ஏககாலத்திலே துடித்தன. பெண்களுக்கு இடதுகண் துடிப்பது நன்மை விளையப் போவதையும், ஆண்களுக்கு இடக்கண் துடிப்பது கெடுதி நேரிடப்போவதையும் காட்டும் என்கிறதினல் சீதைக்கு நல்லதாகவும், மற்ற இருவர்களுக்கும்—வாலிக்கும், ராவணனுக்கும்—பெருந்தீங்கையும் குறிப்பிட்டனவெனவாகும். (4) அந்தப்படியே, சீதையில்லாமல் லக்ஷ்மணரைப் பார்த்தபோது, ஸ்ரீராமருடைய இடது கண்ணும் தோளும், ஹ்ருதயமும் துடித்தனவாம் [ஆ. கா. - ஸ. 59, ச். 4]. (5) சுந்தர காண்டத்தில், சீதாதேவி ராக்ஷஸிகளால் ஹிம்ஸிக்கப்பட்டு,

தற்கொலை புரிந்துகொள்ள யத்தனித்தபோது, திரிஜடை நல்ல கனவுகண்டு தேற்றுகையில், அவளுக்கு பல சுபசகுனங்கள் தோன்றின - என்று 27-வது ஸர்க்கத்தில் 64-66, ச்லோகங்களில் சொல்லி, தோன்றியதை 2-முதல் 4-ச்லோகங்களில் 29-வது ஸர்க்கத்தில் வால்மீகி அழகாய் வர்ணித்திருக்கிறார். அவற்றில் **இடதுகண் மீனால் அடிக்கப்பட்ட தாமரை இதழ்போல் துடித்தது, இடது தோள்** துடித்தது என்பதும், **இடது தொடையும்** துடித்ததென்பதும் உற்று நோக்கத் தக்கவை. எல்லாம் சுபக்குறிகள். பக்ஷியும் கிளையிலிருந்து பரமானந்தத்துடன் நல்ல சொல்லைப் பேசியதாம். (6) யுத்த காண்டம் 4-வது ஸர்க்கம் 7, 8-வது ச்லோகங்களில் ஸ்ரீ ராமர் தமக்குச் சுபக்குறிகள் எவைகளுண்டோ அவைகளெல்லாம் தோன்றினதாகச் சொல்லி, அவைகளில் குறிப்பாக **வலது கண்** துடிப்பதையும், **மனது** கோருகின்ற ஜயத்தைக் கிட்டியிருப்பதாய்ச் சொல்லுவது போலிருந்ததாகவும் கூறுகிறார். அதே காண்டம் 106-வது ஸர்க்கத்தில், ராவணனைக் கொல்ல நினைத்தபோது ஸ்ரீ ராமருக்கு யுத்தத்தில் வீர்யமும், பலமும், களிப்பும், அஸ்திரபலமும் இரட்டிப்பாக ஆயிற்று. அஸ்திரங்கள் அவர் முன் தோன்றின. இந்த சுபக்குறிகளை அறிந்து ராவணனை மறுபடியும் தாக்கினார் என்றிருக்கிறது. அதே காண்டம் 108-வது ஸர்க்கத்தில், ஸ்ரீ ராமருக்கு ஸௌம்யமானவையும் சுபமானவையுமான, சந்தோஷத்தால் மயிர்க்கூச்சறையும்படியான சகுனங்கள் தோன்றினவாம். மனோஜயமும் ஒரு சகுனமாகக் கொள்ளப்பட்டது.

## 5. ஆகாயத்திலும், பூமியிலும் தோற்றங்கள், சப்தங்கள்

(1) தசரதர் ஸ்ரீராமருக்கு இளவரசு பட்டாபிஷேகம் செய்துவைக்க உத்தேசித்ததற்குக் காரணம் சொல்லுகையில், அயோத்யா காண்டம் 2-வது ஸர்க்கம், 43-வது ச்லோகத்தில், ஆகாயத்திலும், பூமியிலும் உத்பாதமான துர்நிமித்தங்கள் காணப்பட்டதாகச் சபையில் சொன்னார். அதை விஸ்தரித்து 4-வது ஸர்க்கம் 17, 19-வது ச்லோகங்களில், "பயங்கரமான அசுபக்குறிகளை சமீபத்தில் பார்த்தேன், இடியுடன் கூடிப் பெருங்கோஷத்துடன் ஆகாயத்தினின்று, என்முன் கொள்ளி விழுந்தது" என்று சொல்லி, சோதிட சாஸ்திரப்படித் தம் நக்ஷத்திரம் க்ரூர க்ரகங்களால் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதாகவும், அதனால், ராஜ (தமது) மரணமோ அல்லது பெரிய விபத்தோ நேருமென்பதாய் சாஸ்த்ரஜ்ஞர்களால் அறிவதாயும் ஸ்ரீராமருக்குச் சொன்னார். இது அவரது மரணத்தை முன் காட்டியதாகும். மறுநாள் இளவரசு பட்டாபிஷேகத்திற்கு அவர் முகூர்த்தம் வைத்த தினமே ஸ்ரீராமர் காட்டுக்குப் போகவும், தசரதர் கைகேயி வசம் அகப்பட்டு மரித்ததும் எல்லாருமறிந்த ராமாயணக்கதை. ஸ்ரீராமருக்கு ஜயங்காட்ட (2) யு.கா. - ஸ. 4, ச். 44-46½-காற்றானது சுபசூசகமாய் மிருதுவாய் வீசியது.

"கம்பராமாயணத்தில் திரிஜடை கனவிற்குமுன், ஸீதையின் காதண்டை வண்டு வந்து பாடிவிட்டுப் போனது தூதன் வந்து செய்தியறிவிப்பானென்று

காட்டுவதாகவும் இலங்கையில் அதேசமயம் உத்பாதங்களான ஆகாசத்தில் மப்பில்லாமலே இடி இடிப்பதுவும், பூமி நிஷ்காரணமாக அதிர்வதுவும் ராக்ஷஸர்களுடைய அழிவைக் காட்டும் கெட்ட சகுனங்கள் என்று சொல்வதுவும் கவனிக்கத் தக்கவை.

## 6. ஜீவ ஜந்துக்களால் சகுனம்

(1) பாலகாண்டம் 74-வது ஸர்க்கத்தில், தசரதர், பிள்ளைகளுக்கு விவாகங்களைச் செய்துகொண்டு அயோத்யைக்குத் திரும்புகையில், பரசுராமர் கல்யாண கூட்டத்தைத் தாக்கிய சந்தர்ப்பத்தை முதலாவது எடுத்துக்கொள்ளலாம். அப்போது, பக்ஷிகள் விகாரமாய்க் கத்தின. மிருகங்கள் ப்ரதக்ஷிணமாய்ப் போயின. பக்ஷிகள் பயங்கரமாகக் கத்தினதினால் ஆபத்து வரப்போவதாகவும், மிருகங்கள் ப்ரதக்ஷிணமாய்ப் போனதினால், வரும் பெருங்கஷ்டம் சுலபமாய் நீங்குமென்றும், வசிஷ்டர் தசரதருக்குச் சொன்னார். அந்தப்படியே, சற்று நேரத்திற்கெல்லாம் பரசுராமர் ஸ்ரீராமரைச் சண்டைக்கு இழுத்துவந்தார். அவரைத் தோற்கடித்து, ஸ்ரீராமர் ஜயப்ரதாபராய் அயோத்யைக்குச் சென்றார். இவை ஒரே சமயத்தில் இருவிதமானவையாகையால், தசரதர் வசிஷ்டரை வியாக்யானம் கேட்டார். (2) ஆ.கா.-ஸ. 69, ச். 21-23, லக்ஷ்மணருக்கு இடதுதோள் துடித்தது வரும் விபத்தைக் காட்டி வஞ்சுலகபக்ஷி ஜயத்தைக் காட்டிக் கூவியதும் ஒரே சமயத்தில் இரண்டுவித சகுனங்களுக்கு மற்றொரு உதாரணம்.

துளசிதாஸ் ராமாயணப்படி, அயோத்யையில் கெடுதல்கள் வரப்போகின்றனவென்று சூசிப்பிக்க

கைகேயியின் வலது கண் துடித்ததாம். அவளுக்கும் கெட்ட கனவுகள் உண்டாயினவாம். (அ.கா. பத். 20) பரதருக்கு தீய ஸ்வப்நங்களுடன் கெட்ட சகுனங்களும் தோன்றினவாம் [அ. கா. பத். 157].

இதன் உத்தரகாண்டத்தில் (பத். I A-B) ஸ்ரீராமருடைய வனவாச முடிவிற்கு முன்னாள் பரதருக்கு நல்ல சகுனங்கள் தோன்றின. வலது கண்ணும் தோளும் துடித்தன. நம்ம தென்னிந்தியாவில் இல்லாமலோ சிறிது மாறுபாடாகவோ வால்மீகி ராமாயணத்தில் இல்லாமல் வடஇந்தியாவில் சகுனங்களென்று கூறப்பட்ட சிலதை எடுத்துக் காட்டுவது நலமாயிருக்கும். ஸ்ரீ ராமர் கல்யாணத்திற்காக கோலம் வந்தபோது.

1. நீலக் கழுத்துடைய அலப்புவாயன் பறவை இடது பக்கத்தில் ஆகாரம் எடுப்பது எல்லா அதிர்ஷ்டங்களும் சித்திக்குமென்னுமாப்போலிருந்தது 2. வலதுபுறத்தில் ஒரு நல்ல நிலத்தில் ஒரு காகமும் கீறிப்பிள்ளையும் தென்பட்டன. 3. மெதுவான குளிர்ந்த வாசனைக்காற்று சுபமான பக்கத்திலிருந்து வீசிற்று. 4. ஒரு சுமங்கலி தலையில் நீர்க்குடத்துடனும் கையில் குழந்தையுடனும் தோன்றினள். 5. ஒரு நரி வெளித்தோன்றி மறுபடியும் மறுபடியும் காணப்பட்டது. 6. ஒரு பசு கோலத்தின்முன் கன்றுக்குப் பால் கொடுத்தது. 7. ஒரு மான்கூட்டம் வலது பக்கம் வந்தது. 8. ஒரு கருடன் வட்டமிட்டு நல்ல ஆசீர்வாதத்தைக் காட்டியது. 9. ஒரு சியாமா பறவை இடது புறம் சுபமான மரத்தின்பேரில் காணப்பட்டது. 10. ஒரு மனிதன் தயிரும், மச்சமும் எடுத்துக்கொண்டு

எதிரே வந்தான். 11. இரண்டு பாண்டித்யமுள்ள பிராம்மணர்கள், ஒவ்வொருவரும் கையில் புஸ்தகத் துடன் எதிரே வந்தார்கள். பா.கா. பத் 304. தும்ம லால் இங்குபோல் அங்கும் சகுனம் பார்க்கப்படு கிறுப்போலிருக்கிறது. அங்கு தும்மல் எந்த பக்கத்தி லிருந்து வருகிறதென்று பார்ப்பதுண்டு. தும்முகிற வன் இடது பக்கத்திலிருந்தால் சுபம்.

2. மற்ற சகுனங்கள் அவ்வப்போது யுத்தங்கள் முதலியவைகளில் தோன்றின. வரப்போகிறவை களை முன்னாலேயே சூசிப்பித்தவைகளாகா. ஜோதிஷ விஷயமாய் எழுதும்போது, அவைகளை ஜாபிதாபோட்டு நல்லவைகளாகவும், கெட்டவைக ளாகவும் பகுத்துக் காட்டவேண்டிய அவசியமில்லை. அதனால் நற்பலனுமிராது.

3. ஆகவே, ஒன்று சொல்ல விரும்பப்படுகிறது. பழைய நூல்களில் சொல்லப்பட்டிருப்பவை போக, சகுனங்களின் தொகுதி அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. அவைகளின் திகைப்பிற் சிக்கிக்கொள் ளாமல், ஐயமற சரியான சகுனங்களைமட்டும் கற்று தெள்ளறிவு கொண்டு, புத்திசாலித்தனத்துடன் சகுனம் பார்த்து வேலைகளை நடத்துதல் நன்மை பயக்கும்.

4. சகுன விஷயத்தை விட்டு மேலே போகுமுன் யஜ்ஞ யாகாதிகளில் தோற்றங்கள் என்பதைப்பற்றி யும் சொல்லவேண்டியிருக்கிறது. யு.கா. 48-வது ஸர்க்கத்தில் ஸீதாதேவி யஜ்ஞ யாகாதிகளில் சம்பவங்களைக் கொண்டும் தனக்கு பலனுரைத்ததாகச் சொல்லியிருக்கிறுள்.

யஜ்ஞ யாகாதிகளில் சம்பவம்

பக்கம் 114, 7-வது வரிக்குப்பிறகு புதுபாரா 1 A.

யுத்தகாண்டம் 23 சர்க்கத்தில் யுத்தம் வரப்போகிற தாகஸ்ரீராமருக்குக்காட்டியஅசுபக்குறிகளும். யுத்தகாண்டம் 35-வது சர்க்கத்தில் மால்யவான் பார்த்ததாக ராவணனுக் குச்சொன்ன அபசகுனங்களும், கெட்ட கனவும் முன்னறி விப்புகளாகும்.

ஸ்ரீராமர் பார்த்த சகுனங்களில் சிலவையாவன :— பூமி நடுங்குகிறது. மலை நுனிகள் ஆடுகின்றன. விருக்ஷங் கள் விழுகின்றன மேகங்கள் செந்நாய் நிறமுள்ளவை களும் கண்ணெடுத்துப்பார்க்க முடியாதவைகளும் குரூரமாய் கர்ஜிப்பதினால் பயங்கரமானவைகளுமாய் [ரக்த பிந்துக் களுடன் கூடிய] ஜலத்தை வருஷிக்கின்றன. நரிகளும் மிக வும் பயங்கரமும் அமங்களமுமான சப்தங்களைச் செய்கின் றன.

மால்யவான்கண்ட கெட்ட சகுனங்களில் சில:— மேகங்கள் லங்கையில் ரக்த வர்ஷங்களை வர்ஷிக்கின்றன. த்வஜங்கள் கிழிந்து தூள்படிந்து முன்ப்ரகாசித்தாப்போல் ப்ரசிக்காமலிருக்கின்றன. கோவரிக்கழுதைகளின் கனைப்பு கள் பயங்கரமாயிருக்கின்றன. அழுகிற குதிரைகளின் கண் ணீர்கள் பெருகுகின்றன. துஷ்ட ஜந்துக்கள நரிகளும், கழுகுகளும் லங்கையில் புகுந்து மிகவும் பயங்கரமாய் ஊளை யிடுகின்றன. ரக்தசம்பந்தமான மழை, நரி ஊளை ஒரேயாதிரி.

ஆனல், எப்போது என்ன யாகமோ, யஜ்ஞமோ நடக்கது அவைகளில் என்னென்ன சம்பவங்கள் நேர்ந்தன அவைகளின் பலன்களென்னவென்று சொன்னர்கள் என்று சொல்லவில்லை. இது சாதாரணமாய் நேரக் கூடியதல்லவாகையால் கடைசியில் இதைப் பற்றி வரையப்படுகிறது. ஸ்ரீராமாணத்தில் இதற்கு ஒரு உதாஹரணம் வ்யக்தமாய் இருக்கிறது. அதென்னவென்ருல் யு.கா.ஸ.80, ச். 9-சுமாரில் இந்த்ரஜித் அபிசாரஹோமஞ் செய்தபோது அக்னி ப்ரதக்ஷிணமாய்ச் சுழலும் ஜ்வாலையுடன் சுத்த சுவர்ணத்திற்குச் சமானமாய் கிளம்பி ஹவிஸ்ஸைப் பெற்றுக் கொண்டது முதலிய பல ஜெயக்குறிகள் தோன்றினவென்றிருக்கிறது. அது முடிந்தவுடனேயே போய் அவன் ஸ்ரீராம லக்ஷ்மணர்களுடன் மறைந்து கொண்டு மஹத்தான யுத்தஞ்செய்தான். ஜெயமும் பெற்ருன். பிசகாய் பூராபலனைப் பெறுவதற்குமுன் திரும்ப யாகஞ்செய்ய உத்தேசித்து பட்டணத்திற்கு திரும்பிவிட்டான். ஆகவே, அபிசாரஹோமத்தில் காட்டிய ஜெயக்குறிகள் பலித்தன. ஆனல், அவைகளை அவன் பூரா பயன்படுத்திக்கொள்ளவில்லை.

5. யஜ்ஞ யாகங்கள் செய்வதென்ருல் மிகப் பெரிய காரியம். அவற்றில் பக்தி லோபமோ, கிரியாலோபமோ, மந்த்ரலோபமோ, திரவ்வியலோபமோ ஏற்பட்டால் கர்த்தாவிற்கு கெடுதல் நேரும். கெட்ட சகுனங்கள்தோன்றும். அதனல் ஒரு குறைவுமின்றி ஸம்பூர்ணமாய்ச் செய்தால் நல்ல சகுனங்கள் தென்பட்டு கோரிய பலனைக் கொடுக்கும்.

---

# 7. கனவு

**1.** கனவுக்குக் காலவளவு கிடையாது. நித்திரையில் க்ஷணமாய்ப் போய்விடுவது. பெரும்பாலும் இது விழித்தவுடன் ஞாபகத்திற்கு வருவதில்லை. அநேகம் பொய்யானதும் அசம்பாவிதமானதாயுமிருக்கும் இது கட்டுப்பாட்டுக்கு வராது. இதை சாஸ்திரமாக்க முடியாதென்றெல்லாம் சொல்லப்பட்டு வந்தது. இப்பால் சாஸ்த்ரஜ்ஞர், கட்டுக்குப் பிடிபடாததுபோலிருக்கும் இதையும், ஒரு சாஸ்திரமாக்கக் கருதி ஆராய்ச்சிகள் செய்து நூல்களும் எழுதி வருகிறார்கள். நம் முன்னோர்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே நூல்கள் எழுதி இருக்கிறார்கள். ஸ்வப்ன பலன் என்று பஞ்சாங்கங்களில் சில ஸ்பஷ்டமாய் ஏற்பட்ட கனவுகளுக்கு பலன்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீராமாயணத்தில் கனவை அவ்வளவு பெரிதாகப் பாராட்டவில்லை. ஆகிலும் சுபஸ்வப்னங்கள் இன்னவை என்றும் துஸ் ஸ்வப்னங்கள் இன்னவை என்றும் அறிந்துக் கொள்ள சிலவைகளைக் கொடுத்து பலன் உரைத்துமிருக்கிறது. ஸ்ரீராமாயணத்தில் முன்னறியும் பொருட்டு சொல்லப்பட்டவைகளில் இந்த விஷயந்தான் மிகச் சிறியது. முக்கியமானது ஒன்றே ஒன்றுதான் எனவும் கூறலாம். அதாவது சுந்திரகாண்டத்தில் 27-வது சர்க்கத்தில் சொல்லப்பட்ட ப்ரபலமான திரிஜடை ஸ்வப்னம். மற்றொன்று அயோத்யகாண்டம் 69-வது சர்க்கத்தில் பரதரின் கனவு சின்னது. முன்னறியும் விஷயத்தில் முக்கியமானதல்ல.

2. இந்த இரண்டாவதாகச் சொன்னது சுலபமாய் முடிக்கத் தக்கதாகையாலும் ஸ்ரீராமாயணத்தில் முன்னடியாய் வருவதாலும் அதை முந்தி எடுத்துப் பிறகு மற்றென்றுக்குப் போவது நலம். பரதரின் கனவு, தசரதசக்ரவர்த்தி மாண்டபின் தூதர்கள் சங்கதியைத் தெரிவிக்க கேகய மன்னரின் ப்ரதான நகராகிய கிரிவ்ரஜப் பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தபின் மரண விஷயத்தைத் தெரிவிப்பதற்கு முன் இரவு உண்டானது. இது பின்னிட்டு வரப்போவதை முன்னறிவிக்கக் கூடியதல்ல. ஆகவே அதைப்பற்றி இந்த சந்தர்ப்பத்தில் விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. பரதர் கனவு கண்டதும் சிந்தை அடைந்தார். கனவு மிகக் கெட்டது. அதனல் தனக்கோ, ராமலக்ஷ்மணர்களுக்கோ அல்லது தசரத மஹாராஜாவுக்கோ மரணம் அல்லது அதற்கு சமானமான பேராபத்து வருமோ என்று பரதர் பயப்படுகிறார். ஏற்கனவே ராஜா காலமாய்விட்டிருக்கிறார். தூதர்கள் கெட்ட செய்தியுடன் நகரத்திற்கு வந்துவிட்டிருக்கிறார்கள். இந்த துக்ககரமான சங்கதி முந்திய இரவு கனவில் காட்டியதுதான். நடந்துவிட்டதை தூதர்கள் தெளிவாய் தெரிவிக்கவில்லை. முன் ஹேஷியம் காட்டினதினல் விசேஷம் ஒன்றுமில்லை. எந்தெந்த மாதிரி கனவுகண்டால் கெடுதலை உண்டாம் என்பதை அது சூசிப்பிக்கிறதென்று தெரிந்துக் கொள்ள வேண்டியதுதான். கறுப்பு வஸ்திரம், மாலை, சாணியில் விழுவது முதலியவை கெட்டவை. இதேதான் பரதர் கண்ட கனவிலும், ராக்ஷஸர்கள் விஷயத்தில் திரிஜடை கண்ட கனவிலும் தோன்றின.

3. கறுப்பு கெட்டதென்று அப்போதைக்கு முன்னிலிருந்து இப்போதும் கருதப்படுகிறது. கறுப்பு யமனுடைய வர்ணம். இப்போதும் சாவோலை யில் கறுப்பு ஓரங்கட்டி செய்தி அனுப்பப்படுகிறது. திருசங்கு குரு சாபம் பெற்றபோதும் எல்லாம் கறுப்பாய்விட்டது. அப்படி இருந்தும் ஒரு சாரார் அதையே தங்கள் சின்னமாகக் கொண்டு கொடிபோட்டுக் கொண்டு பெருமையாய் இருக்கிறார்கள். இது ஒரு வியசனிக்கத்தக்க விஷயமாயிருக்கிறது. கறுப்பு நான்காவதாகிய அதர்வண வேதத்தின் குறி. நம் நாட்டில் மட்டுமல்லாமல் மேல்நாடுகளிலும் கறுப்பு நிஷித்தம் (Black-art, Black-Guard, Black-market என) கெட்ட குணங்களோடு கறுப்பு சம்பந்தம்.

4. மற்றொரு ஸ்வப்னம், இதுதான் முன்னறிவிப்புக் கனவு, திரிஜடையால் காணப்பட்டது. அது ஸ்ரீராமர், ஸீதை, லக்ஷ்மணர் இவர்களுக்கு ஜயத்தையும் மற்ற சுபங்களையும் காட்டுவதுடன் ராக்ஷஸர்களுக்கு நாசத்தைக் காட்டினதாக இருக்கிறது. இது ஒரு பூரா ஸர்க்கம் எனலாம். அதில் முன்பாகம் ஸ்ரீராமர் ஸீதை லக்ஷ்மணர் இவர்களுக்கு வெற்றியையும் ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் வந்து ஸீதையை மீட்டு, அயோத்யைக்குத் திரும்பி பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளப் போவதையும் சூசிப்பித்தது. இது சில ச்லோகங்களால் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளின் மொழிபெயர்ப்பையே கொடுத்துவிடுவது சுலபமாயும் நலமாயுமிருக்கும். அவையாவன :- ஸ்ரீராகவர் வெளுத்தமாலையும், வஸ்திரமும் தரித்து லக்ஷ்மணருடன், வெள்ளை யானைத் தந்தங்களால்

செய்யப்பட்ட ஆயிரம் ஹம்ஸங்களால் பூட்டப்பட்டு ஆகாசத்தில் செல்லும் திவ்ய பல்லக்கில் ஏறிவந்தார். ஸீதையும் பீதாம்பரம் தரித்து ஸமுத்ரத்தால் சூழப் பட்ட வெளுத்த பர்வதத்தில் உட்கார்ந்து சூரியனோடு ப்ரபைபோல் ஸ்ரீராமரோடு சேர்ந்திருந்தாள். ஸ்ரீராம ரோடும் லக்ஷ்மணரோடும்கூடி, பர்வதத்திற்கு ஸமான மான, நான்கு தந்தங்களையுடைய யானையின்மீதேறி திரிந்தாள். பிறகு புருஷோத்தமர்கள் இருவரும் வெளுத்த மாலையும் வஸ்திரமும் தரித்தவர்களாய் ஜானகியின் ஸமீபத்திலிருந்தார்கள். ஸீதையும் யானை மீதேறினள். வைதேஹி பர்த்தாவின் மடியினின் றேடி சூரிய சந்திரர்களைக் கையினல் தொட்டாள். பிறகு அந்த யானை இவர்களுடன் லங்கைக்கு வந்தது. பிறகு ஸ்ரீராமர் ஸீதையோடு எட்டு வெள்ளை எருது கள் பூட்டப்பட்ட ரதத்தின்மீதேறி வடக்கே போனர் பிறகு புஷ்பக விமானத்தின்மீதேறி எல்லோரும் வடக்கே போனர்கள். சுபத்தைக் காட்டக்கூடிய வைகளெல்லாம் வெளுப்பும் மேலோங்கிப் போகி றவைகளுமானவை. வெள்ளை வஸ்திரங்கள், மாலை கள், பர்வதம், ஹம்ஸங்கள், எருதுகள் முதலியவை. ஏறுவது யானை. இவைகளைக்கொண்டு பெரும்பான் மையான கனவுகளுக்கு வியாக்யானம் பண்ணக் கூடும். சில நடக்கப்போவதை அப்படியே சொன் னவை; புஷ்பக விமானத்திலேறி வடக்கே போனர் கள் என்பதுபோல் வியக்தமானவை.

5. இந்த ஸர்க்கத்தில் சில ச்லோகங்கள் "ப்ர க்ஷிப்தம்" பின்னல் சேர்க்கப்பட்டவை என்று குறிப்பிருக்கிறது. அவற்றை ஊன்றிப் படித்தா

லேயே வால்மீகி மஹரிஷியின் ச்லோகங்கள் அல்லாதவைபோலும், சொன்னதையே மறுபடி சொல்வதென்பது போலவும் இருக்கிறதாக அறிஞர்கள் சொல்லுகிருர்கள். முன் சொன்னவைகளில் சிலகூட அப்படி ஒதுக்கப்பட்டிருக்கலாம். ஆகிலும், அவைகளை விட பின்னல் சொல்லப்பட்டவைகளில் அதிக கலப்பிருப்பதாக ஏற்படுகிறபடியால் பின்னிட்டவைகளின் சாராம்சம் மட்டும் தரப்படுகிறது.

6. பிறகு வருபவை ராவணனிடவும், ராக்ஷஸர்களிடவும் அழிவைக் காட்டுபவை. இவை சுமார் 17-ச்லோகங்கள். இவற்றின்படி ராவணன் **சிவந்த** வஸ்திரந்தரித்து **சிவந்த அலரிமாலை** பூண்டு **சிவந்த பூச்சூடன்** புஷ்பக விமானத்திலிருந்து இழுக்கப்பட்டு சாணிக் குழம்பில் தள்ளப்பட்டு கழுதை பூட்டிய தேரில் தென்திசை நோக்கி தலைகீழாய் தள்ளப்பட்டவனுய் காணப்பட்டான். [சிவப்பு அபாயக்குறி.] கும்பகர்ணனும், ராவணனுடைய பிள்ளைகள் எல்லோரும் எண்ணெய் பூசிக்கொண்டு மேற்சொன்னபடியும் இதரவையுமான அபசகுனக் குறிகளுடனும் **கறுப்பு** வஸ்திரங்களுடன் **கறுப்புப்** பெண்களால் கீழே வீழ்த்தப்பட்டனர். [தசகண்டன் பன்றிமீதும் முதலைமீது இந்திரஜித்தும், ஒட்டைமீது கும்பகர்ணனும் தென்திசை நோக்கி அல்லோகோலமாய் ஓடினூர்கள். இது பின்னிட்டு சேர்க்கப்பட்டதாய் குறிப்பு]. லங்கை நாசமாக்கப்பட்டதாகவும், குரங்கு லங்கையைக் கொளுத்தியதாகவும் தெரிந்தது என்ருள் திரிஜடை. மறுநாள் ஹநுமார் லங்கையை த்வம்ஸம் பண்ணி கொளுத்திவிட்டார்.

பின்னல் காட்டி யிருக்கலாம்.

121 பக்கத்தில் 17 வரிக்குப்பிறகும் 8 பாராவிற்குப் பிறகும் 9 பாராவிற்குமுன் ராவணனுடன் மால்யவான்தான் கண்டதாகச்சொன்ன ராக்ஷஸர் நாசத்தைக்காட்டக்கூடிய தான கனவாவது.

நீலவர்ணஸ்திரீகள் வெண்மையான பற்களுடன் எதிராய்ப்பேசிக்கொண்டு வீட்டிலுள்ள வஸ்துக்களை அபஹரித்துக்கொண்டு எதிர்நின்றுக்கொண்டு சிரிக்கிறார்கள். [யு. கா. ச. 35. சு. 29]

7. ராக்ஷஸ வம்சத்திற் பிறந்தவரான சுத்தாத்மா விபீஷணர் வெளுத்த வஸ்திரமும் வெளுத்த மாலையும் தரித்து வெளுத்த பரிமளம் பூசிக்கொண்டு சங்க துந்துபி வாத்யங்களுடன் நான்கு மந்திரிகளுடன் யானையின்மீதேறி பவனி வருகிறார் எனவும் கண்டாளாம். ராவணஸம்ஹாரத்திற்கும் பிறகு வீபீஷணர் லங்காதிபதியாக பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டார்.

8. ஸ்வப்னங்கள் வரிசைக் கிரமமாகக் காணோம், பின் ஜாமத்தில் காணப்பட்டவை முன்னும் முன் ஜாமங்களில் காணப்பட்டவை பின்னிட்டும் பலனளிக்கும் என்கிறார்களே; அப்படியும் காணோம். வெவ்வேறு காலமாகவுமில்லை. ஒன்று நிச்சயம். ஸ்ரீ ராமருடைய வெற்றியும் ஸீதையை மீட்டு அழைத்துக்கொண்டு போவதும் ப்ரதானம். அவை முன்னிட்டு சூசிக்கப்பட்டு இருக்கலாம். அசுர ரழிவைப் பின்னால் காட்டி யிருக்கலாம்.

9. வெளுப்புத் தவிர இரண்டு வர்ணங்கள் கறுப்பும் சிவப்பும் அலரிமாலையும் கெடுதல். வெளுப்பு சுத்தத்தையும் சுபத்தையும் காட்டக்கூடியது.

துளசிதாஸ் ராமாயணத்தில் கைகேயி மந்தரையால் தூண்டுவிக்கப்பட்டபோது அவளுக்கு (அ. கா. பத். 20) தேஹத்தில் தோன்றிய கெட்ட குறிகளுடன் பிரதி இரவும் கெட்ட கனவுகள் தோன்றியதாகவும் தான் முட்டாள்தனத்தினால் கூனியிடம் அவைகளைச் சொல்லவில்லை என்றும் சொல்லுகிறாள். இவைகளெல்லாம் அவள் நினைத்தபடி கூனிகாட்டிய கெடுதல்

கள் வரப்போவதைக் காட்டியவையல்ல. ஏழரை நாட்டுச் சனி உபத்ரவம்போல் மந்தரை அயோத்தியைக்கு விளைவித்த மகத்தான துன்பங்களை சூசிப்பித்தனவே.

ஸ்ரீவால்மீகி ராமாயணப்படி அயோத்யையிலிருந்து சேதி கொண்டுவந்தவர்கள் கிரிவ்ரஜ பட்டணம் சேர்ந்த ராத்ரி [மறுநாள் சங்கதி சொல்வதற்கு முன்] துஸ்வப்னம் பரதருக்குத் தோன்றியதாக இருக்கிறது. துளசிதாஸரோ அயோத்யையில் விஷயங்கள் கெடுதலாகப் போகத் தொடங்கிய நாள்முதல் கெட்ட கனவுகள் காணப்பட்டதினாலும், சகுனங்களும் கொடுமையாயிருந்ததினாலும் பரதர் பயந்து சிவபிரானுக்கு பூஜைபண்ணி பிராம்மண போஜனம்பண்ணி வைத்துக்கொண்டு வந்தார் என்கிறார். அந்த பிராந்தியத்தில் அக்காலத்தில் பிராம்மணர்களுக்கு ரொம்ப மரியாதை வைத்திருந்ததாய் தெரிகிறது. இப்போது எப்படி யிருக்கிறதோ?

10. வரப்போவதை முன்னறிவிப்பாகக் கனவில் காணும்படி ஸ்வப்நங்களை மனிதன் காணக்கொடுத்து வைத்திருப்பது கடவுளால் அளிக்கப்பட்ட அருமையான நன்கொடை. இந்த சமயத்தில் ஒப்புயர்வற்ற சாக்ஷாத் லக்ஷ்மியினுடைய அவதாரமான ஸீதா தேவியின் உயிரை விடாதபடி தேர்தலளிக்க திரிஜடை ஸ்வப்னம்போலவே பற்பல தருணங்களில் அதைரியத்தை நீக்கி ஊக்கமளிக்கக்கூடிய கனவுகள் அநேகரால் காணப்படுகின்றன. இம்மாதிரி கனவுகளைக் காணக் கொடுத்திருப்பது பெரிய பாக்கியம்.

# 8. முன்னறிவிப்புக் கொண்டாட்டங்கள்

1. ஒரு ராஜ்யத்தில் ராஜாவிற்கு புத்ரோத்ஸவமானல், ராஜாவும் அவரைச் சேர்ந்தவர்களும் ஜனங்களும் ஆரவாரஞ்செய்வதும் நகரத்திலும் நாடெங்கும் விழாக்கொண்டாடுவதும் உண்டு. ஆனல் தசரத சக்ரவர்த்திக்கு புத்திரர்கள் பிறந்தபோது, பூமியில் மட்டுமல்லாமல் ஆகாசத்தில் தேவர்களாலும், கந்தர்வர்களாலும் ஸந்தோஷம் கொண்டாடப்பட்டது இதேப்படி ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் விச்வாமித்ர யாக ஸம்ரக்ஷணைக்கு புறப்பட்டபோதும், ஸ்ரீராமருடன் ஸீதா கல்யாணம் நடந்த உடனேயும், ரகுமுக்யர்கள் நால்வருடைய விவாஹங்கள் பூர்த்தியான உடனேயும் தேவலோகத்திலும் உத்ஸவம் கொண்டாடினர்கள். இதெல்லாம் இந்த விபவங்களால் பின்னிட்டு ராவணவதத்திற்காக ஸ்ரீராமர் அவதாரமானதையும், விச்வாமித்ரருடன் யாக ஸம்ரக்ஷணைக்குப் போனது தாடகை வதத்திற்காகவும்,ஸீதா கல்யாணம் ராவண வதத்திற்குக் காரணமாவதற்காகவும் என்பதை தேவர்கள் திண்ணமாய் அறிந்து அவ்வப்போதே ஸந்தோஷித்தார்களாம்.

2. ஸ்ரீராமாவதாரம் பாலகாண்டம் 18-வது ஸர்க்கத்தில் வரையப்பட்டிருப்பதைக் கண்ணுற்றோம். நான்கு ப்ராதாக்களுடைய ஜனனமும் ஆனவுடனே கந்தர்வர்களும் சுந்திரமாய் பாடினர்கள். அப்ஸரஸ் ஸ்திரீகளும் கூட்டங்கூடி ஆட்டமாடினர்கள் தேவர்

களின் துந்துபிவாத்யங்கள் கணகணவென்று முழங்கின. புஷ்பவர்ஷம் ஆகாசத்தினின்று வருஷித்தது.

3. பாலகாண்டம் 22-வது ஸர்க்கம் ப்ரதமத்தில் ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் விச்வாமித்ரருடன் புறப்பட்டபோதும் புஷ்பவர்ஷங்கள் பொழிந்தன. தேவதுந்துபி சங்கதுந்துபி வாத்தியங்கள் முழங்கின. பாலகாண்டம் 73-வது ஸர்க்கம் 28-வது ச்லோகம் சுமாரில் ஸ்ரீராமருடன் ஸீதா கல்யாண பாணிக்ரஹணம் நடந்த உடனேயே, **தேவர்களும்,** ரிஷிகளும் "நல்லது நல்லது" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் தேவர்களின் துந்துபி வாத்யகோஷங்கள் கேட்டதுடன் மஹத்தான புஷ்பவர்ஷமும் வருஷித்தது. பிறகு மற்ற மூன்று ப்ராதாக்களுடைய பாணிக்கிரஹணங்களும் ஆனதும் சாஸ்திரோக்தமாய் நால்வருடைய விவாஹங்களும் பூர்த்தியானவுடன் மறுபடி புஷ்பமாரி பொழிந்தது. தேவதுந்துபி வாத்யங்களின் மஹாகோஷமும் கேட்டது. நாநாவிதவாத்யங்ளோடும், இனிய ஸ்வரத்தோடுங்கூடி அப்ஸரஸஂக் கூட்டங்கள் நர்த்தனஞ் செய்தார்கள். கந்தர்வர்களும் மதுரமாய் பாடினார்கள். இவை ரகு ச்ரேஷ்டர்களுடைய விவாகமஹோத்ஸவத்தில் அற்புதமாய் காணப்பட்டது. இதெல்லாம் மேற்சொன்னபடி ஒரே அர்த்தத்துடனேயே தோன்றின.

ஸ்ரீ வால்மீகி இந்த கொண்டாட்டங்கள் நிகழ்ந்தனவெனக் கூறி இவை முன்னறிவிப்பானவையென்று வியாக்யானம் பண்ணி அறிந்துகொள்ள

விடுத்திருக்கிறார். துளசிதாஸரும் தேவர்கள் ஆகாசத்தில் தோன்றி ஆரவாரித்தனர் என்றார். கம்பரோ ஸ்ரீ ராமாவதாரம் ஆன உடனேயும், ஸீதா கல்யாணமானவுடனேயும் தேவர்கள் ஸந்தோஷித்ததற்குக் காரணம் "**வீடினர் அரக்கர்**" ராக்ஷஸர்கள் அழிவு வந்துவிட்டதென்று திண்ணமாய்த் தெறிந்து விட்டதாக வியக்தமாய் சொல்லுகிறார். ஸ்ரீராமாவதாரத்தார் என்றவுடனே அரக்கர் அழிந்தார்கள் என்றே எண்ணி மகிழ்ந்து பூரிப்பினால் அரம்பையர், தேவமாதர்கள் கூத்தாடினார்கள். கின்னரர் அமிர்தம்போல் இனிய சப்தங்களைப் பாடினார்கள். அநேக வாத்தியங்கள் ஒலித்தன. தேவர்கள் முற்றும் ஓடி உலாவினர் என்றும், ஸீதா கல்யாணமானவுடனே, ராக்ஷஸர்களின் கொடுமையால் எல்லா உலகங்களும் கஷ்டப்பட்டதை எண்ணி வருந்திக்கொண்டிருந்த தேவர்கள் முதலியவர்கள் ஸீதா விவாஹ மஹோத்ஸவத்தால் தங்களுடைய நல்லகாலம் உதித்துவிட்டதென்று, ராக்ஷஸர் கூட்டம் அழிவடைவது **இன்றைய தினமே நிறைவேறியது** என்றெண்ணி, ஆகாசத்தில் நிரம்பி, அரம்பையர் முதலிய மாதர்களுடன் இசைபாடி ஆனந்தக் கூத்தாடினர். திவ்விய வாத்தியங்களை கோஷித்தனர். பூமாரி பொழிந்தனர். தேவர்கள் சொரிந்த மலர்மாரியும், அரசர்கள் பொன்னலாகிய மலர்மாரி பெய்ததும், மற்றவர்கள் சொரிந்த ஒளியுடைய முத்துக்களும், தானாக அன்று அலர்ந்த பூக்களும் என்றிவைகளாலெல்லாம் இந்தப் பூமியானது நக்ஷத்திரங்களால் விளங்குகிற ஆகாசம் போலப் ப்ரகாசித்தது. ஆனந்தபேரிகள் முழங்கின,

சங்கங்கள் பூரித்தன வேதகோஷங்கள் ஆர்த்தன, தேவர்கள் ஆரவாரித்தார்கள். அநேக தருமநூல்கள் இசைத்தன. பல்லாண்டு பாடுகிற இசைகளும் வண்டினங்கள் ஆர்த்தலும் ஆகாசத்தை அளாவியது. கடல்களும் தெளிந்திருந்தன. துளசிதாஸரும் (பாலகாண்டம் பக். 324) இதேவிதமாய், வேதகோஷம், வாத்திய முழங்கல், ஆகாசத்திலிருந்து புஷ்ப மாரி பெய்தல், ஆனந்தமாய் தேவர்கள் பாடுதல் ஆகியவற்றை வருணித்திருக்கிறார்.

நம் விஷயத்திற்கு கவனிக்க வேண்டியது இவை எல்லாம் முன்னறிவிப்பு கொண்டாட்டங்கள் என்று கம்பர் ஸ்பஷ்டமாய் சொன்னது வரப்போவதை முன்னறிவதற்கு முக்காலங்களுமுணர்ந்த மஹான்களுக்குப்போல் தேவர்களுக்கும் சாத்யம். மனிதர்களுக்குத்தான் மார்க்கங்கள் தேவை. வெகு சின்ன ஜெந்து எறும்புக்கு மழை வருவது முன்னடியாய் தெரிந்துக்கொள்ள இயற்கையாய் சக்தி கொடுத்திருக்கிறன் பகவான். எல்லாம் அவனுடைய ஸ்ருஷ்டி விநோதம்.

# श्रीसीताविवाहः

## ( बालकाण्डे ७३ - सर्गे )

ततः सीतां समानीय सर्वाभरणभूषिताम् ॥ २५ ॥
समक्षमग्नेः संस्थाप्य राघवाभिमुखे तदा ।
अब्रवीज्जनको राजा कौसल्यानन्दवर्धनम् ॥ २६ ॥

इयं सीता मम सुता सहधर्मचरी तव ।
प्रतीच्छ चैनां भद्रंते पाणिं गृह्णीष्व पाणिना ॥ २७ ॥

पतिव्रता महाभागा छायेवानुगता सदा ।
इत्युक्त्वा प्राक्षिपद्राजा मन्त्रपूतं जलं तदा ॥ २८ ॥

साधु साध्विति देवानामृषीणां वदतां तदा ।
देवदुन्दुभिनिर्घोषैः पुष्पवर्षो महानभूत् ॥ २९ ॥

एवं दत्त्वा सुतां सीतां मन्त्रोदकपुरस्कृताम् ।
अब्रवीज्जनको राजा हर्षेणाभिपरिप्लुतः ॥ ३० ॥

लक्ष्मणागच्छ भद्रंते ऊर्मिलामुद्यतां मया ।
प्रतीच्छ पाणिं गृह्णीष्व माभूत्कालस्य पर्ययः ॥ ३१ ॥

तमेवमुक्त्वा जनको भरतं चाभ्यभाषत ।
पाणिं गृहाण माण्डव्याः पाणिना रघुनन्दन ॥ ३२ ॥

शत्रुघ्नं चापि धर्मात्मा अब्रवीज्जनकेश्वरः ।
श्रुतकीर्त्या महाबाहो पाणिं गृह्णीष्व पाणिना ॥ ३३ ॥

सर्वे भवन्तः सौम्याश्च सर्वे सुचरितव्रताः ।
पत्नीभिस्सन्तु काकुत्स्था मा भूत्कालस्य पर्ययः ॥ ३४ ॥

जनकस्य वचः श्रुत्वा पाणीन् पाणिभिरस्पृशन् ।
चत्वारस्ते चतसृणां वसिष्ठस्य मते स्थिताः ॥ ३५ ॥

अग्निं प्रदक्षिणं कृत्वा वेदिं राजानमेव च ।
ऋषींश्चैव महात्मानः सभार्या रघुसत्तमाः ॥ ३६ ॥

यथोक्तेन तदा चक्रुर्विवाहं विधिपूर्वकम् ।
काकुत्स्थैश्च गृहीतेषु ललितेषु च पाणिषु ॥ ३७ ॥

पुष्पवृष्टिर्महत्यासीदन्तरिक्षात्सुभास्वरा ।
दिव्यदुन्दुभिनिर्घोषैर्गीतवादित्रनिस्वनैः ॥ ३८ ॥

ननृतुश्चाप्सरस्सङ्घा गन्धर्वाश्च जगुः कलम् ।
विवाहे रघुमुख्यानां तदद्भुतमदृश्यत ॥ ३९ ॥

# 9. பத்ரம்தே

ரகுவீரர்கள் விவாஹங்கள் சந்தர்ப்பத்தில் வெகு முக்யமான சூக்ஷமம் ஒன்றிருக்கிறது. அதை வெகு பான்மையார் குறிப்பாய் எடுத்துச் சொல்வதில்லை. அதாவது ஸீதையை ஸர்வாபரண பூஷிதையாய் அக்னிமுன் நிறுத்தி, கௌஸல்யானந்தவர்த்தனை ஸ்ரீராமரைப் பார்த்து ஜனக மஹாராஜா "இயம் ஸீதாமமஸுதா ஸஹதர்மசரீதவ ப்ரதீச்சசைநாம்" 'பத்ரம்தே பாணிங்க்ருஹ்ணீஷ்வபாணிநா,பதிவ்ரதா மஹாபாகா சாயேவாநுகதாஸதா" என்று சொன்னதில் சாதரணமாக எல்லா பதங்களுக்கும் அதிலும் "இயம்ஸீதா மமஸுதா" என்பதற்கு பற்பல அர்த்தங்களுடன் ஸீதா விவாஹத்தைக் குறித்து காலக்ஷேபங்களும் பிரசங்கங்களும் செய்யவும் சிறு கிரந்தங்கள் எழுதவும்பார்த்திருக்கிறோம். இதில் பத்ரம்தே என்கிற பதத்தின் அரும்பொருளையும் அது அந்த குறிப்பான இடத்தில் அமைக்கப்பட்டிருப்பதையும், பின்னிட்டு லக்ஷ்மணருக்கு ஊர்மிளையைக் கொடுக்கும்போது 'லக்ஷ்மணாகச்ச "பத்ரம் தே"' என்பதின் முக்கியத்தையும் உற்று நோக்கி அழுத்திச் சொல்வதில்லை. இதில் ஒரு பெரிய முன்னறிவிப்பு உட்பொருள் அமைந்திருக்கிறது. "பத்ரம் தே" என்றால் "தே பத்ரம்" "உனக்கு மங்களமுண்டாகுக" என்று அர்த்தமல்லவா. இவ்விருவர்களுக்கு (ஸ்ரீராமருக்கும் லக்ஷ்மணருக்கும்) மட்டும் மங்களமுண்டாகுக என்று சொல்லி, மற்ற ப்ராதாக்களுக்கு சொல்லாத

தற்குக் காரணமென்ன? அவர்களுக்கு அந்த ஆசீர்வாத மில்லையா? அதிலும் ஸ்ரீராமருக்கு ஸீதையைப் பிடித்துக்கொடுத்து, கையைப் பிடித்துக்கொள் அங்கீகரி என்றதுமே '**பத்ரம்தே**' என்கிறதைச் சொல்லி "பதிவ்ரதா மஹாபாகா சாயேவாநுகதாஸதா" என்றல்லவா சொல்லியிருக்கிறது. அடுத்தபடி "லக்ஷ்மண வா" என்று சுதந்திரமாய்க்கூப்பிட்டு உடனே '**பத்ரம் தே**' என்று சொல்வானேன்? இதில் ஒரு முக்யத்வம் இருக்கிறது. ஸ்ரீராமரும் ஸீதையும் காட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. அவர்களுடன் லக்ஷ்மணரும் மட்டும் போகப்போகிறார். ஆகவே, இவர்கள் மூன்று பேருக்கும் மாத்திரம் ரக்ஷை வேண்டியது அவசியம். அதனல் '**பத்ரம் தே**' என்று ஆசீர்வதித்து விவாஹ காலத்திலேயே காப்புக்கட்டப்பட்டது. இதுவும் ஒரு முன்னறிவிப்பு சூசனையல்லவா? இந்த சமயம் பரதரை 'ரகுநந்தன' என்றதிலும் சத்ருக்நரை மஹாபாஹோ என்றதிலும் கூட ஒரு உள்ளர்த்தம் இருக்கிறது. பரதர் ரகுகுலத்தின் பெருமையை மேன்மைப்படுத்துவதற்கு பாதுகையை முன்னிட்டு நாடாளப்போகிறார்.

5. இதே மாதிரியாகவே பா. கா. ஸ. 27, ச். 3-4, விச்வாமித்ரர் ராமலக்ஷ்மணர்களுக்கு அஸ்த்ரங்கள் கொடுக்கும்போதும், ஸ. 28 ச். 10-மந்த்ரங்களை உபதேசிக்கும்போதும், ஸ.34 ச். 14-நித்ரைக் குறைவால் கஷ்டமில்லாமலிருந்து வழி நடக்க ஆசீர்வதிக்கும் போதும் ச்ரமத்தை எதிர்பார்க்கிறபோதெல்லாம் மங்களாசாஸனம் பண்ணி இருக்கிறது கவனிக்கத் தக்கது. மற்றும் சில இடங்களில் மரியாதைக்காக

வும், குலாவி அளவளாவவும், ஒருவருக்கு விருப்பமில்லாததை மற்றவர் செய்யாமலிருக்க நல்லதனம் பண்ணவோ, ஒரு கெடுதலையானதோ செய்யத்தகாததோ செயலைச்செய்ய ஊக்கமளித்துத் தூண்டுவதற்கோ, ஒருவருடைய நற்செய்கைகளுக்காக புகழும் போதோ பற்பலவிதமாய் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு வாழ்த்துச்சொல். பெரியோர் சிறியோர் ஸ்நேகிதர் விரோதிகள் என்றில்லாமல் ஸமயோசிதமாய் வழங்கப்பட்டுள்ளது.

1. குசநாப ராஜாவிற்கு 100-பெண்கள். அவர்களை மணக்கவிரும்பி தன்னிஷ்டத்தை வாயுபகவான் அவர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள் அவரிடமனோரதத்தைத் தாங்களாகவே பூர்த்திசெய்வதற்கில்லை யாகையால் அவரை நோக்கி "பத்ரம் தே" - "உமக்கு மங்களம்" [பா. கா. ஸ. 33 ச. 3.] எங்கள் தகப்பனார் எங்களை உமக்குக் கொடுப்பாரானால் எங்களுக்கு சம்மதம். எங்களைக் கேட்பதை நீர் விட்டுவிடும் என்றார்கள். அவர் கோபித்து அவர்களைக் குலைத்துவிட்டார். அவர்களுக்கு கல்யாணம் செய்விப்பதைப் பற்றி குசநாபர் சிந்தித்துக் கொண்டிருந்தார். இது இப்படி இருக்கையில் முன்னால் சூலை என்னும் மஹரிஷி பெருந்தவம் புரிந்துக் கொண்டிருந்தவருக்கு ஸோமதை என்ற கந்தர்வப்பெண் அவர் மனமகிழும்படி நல்லபடியாய் வெகுகாலம் சிச்ருஷை பண்ணிக் கொண்டிருந்தாள். அவர் ஸந்தோஷமாயிருந்த சமயம்பார்த்து மஹரிஷியே "பத்ரம் தே" நல்லவேளை பார்த்து எனக்கு ஒரு ஸத்புத்ரனைத் தரவேணுமென்று அவள் பிரார்த்தித்தாள் [பா. கா.

ஸ. 33 ச். 13]. அவர் மனமுவந்து ஸோமதே "பத்ரம் தே" அப்படியே யாகுக என்றார். [பா. கா. ஸ. 33 ச். 17]. அவர்களுக்கு ப்ரம்மதத்தர் என்ற புத்திரர் உண்டானர். அவருக்கு குசநாபருடைய பெண்களைக் கொடுத்து விவாகம்செய்விக்கப்பட்டது. விச்வாமித்ரர் தன் யாக பூர்த்தியானபின் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு ஜனகருடைய யாகத்திற்கு வந்ததும் அவரை ஜனகர் வரவேற்று "பத்ரம் தே" என்றார். [பா. கா. ஸ. 50 ச். 17]. உம்முடன் வந்திருக்கும் குமார பர்வமுடையவர்களும், தேவஸமானமான பராக்ரமமுடையவர்களும் ஸிம்ஹத்தினுடையவும் யானையினுடையவும் நடையையும் விற்களையும் அம்பறாத் தூணிகளையும் உடையவர்களான ராஜ குமாரர்களான இவ்விருவர் யார் என்று வினவினர். ஜனகமஹாராஜாவிற்கு விச்வாமித்ரர் பதில் "தசரதரபுத்ரர்கள்" என்றார். பிறகு விச்வாமித்ரர் சரித்திரம் சொல்லப்பட்டது. அதில் திரிசங்குவின் கதை வருகிறதல்லவா. திரிசங்கு வஸிஷ்டரால் சபிக்கப்பட்டு புகலிடம் தேடித் திரிகையில் வஸிஷ்ட புத்ரர்களைப் பார்த்து "பத்ரம் தே" எனக்கு அபயமளியுங்கள் என்றார் [பா. கா. ஸ. 57 ச். 17]. அவர்கள் ஸாத்யமில்லையென்று சொன்னார்கள். திரிசங்கு விச்வாமித்திரரை அடுத்தார். அவர் திரிசங்கு சரீரத்துடன் ஸ்வர்க்கமடையச் செய்தார். அவர் தலைகீழாக தள்ளப்பட்டார். விஸ்வாமித்ரர் கோபாவேசங்கொண்டு மற்றொரு இந்திரனும் ஸ்வர்க்கமும் உள்பட லோகமே ஸ்ருஷ்டித்து விடுவதாகச் சொல்லி ஸ்ருஷ்டித்துக்கொண்டேபோகையில் தேவர்கள்பயந்து விச்

வாமித்ரரை நோக்கி "**பத்ரம் தே**' நீர் ஸ்ருஷ்டித்திருக்கும் நக்ஷத்திங்கள் முதலியவைகளெல்லாம் இருக்கட்டும் திரிசங்குவும் ஆகாசத்திலேயே தலைகீழாக இருக்கட்டும் என்றார்கள் [பா. கா. ஸ.60 ச், 30]. விச்வாமித்ரர் தபஸை தொடர்ந்து மும்மரமாய்ச் செய்தார். ப்ரஹ்மா மகிழ்ந்து அவரைப் பார்த்து "**பத்ரம் தே**" நீ ராஜரிஷியாய்விட்டாய் என்றார் [பா.கா. ஸ. 63 ச். 2]. விச்வாமித்ரர் திருப்தி அடையவில்லை. முன்னிலும் கடினமான தவஞ்செய்தார். அதைக் கெடுக்க இந்திரன்செய்த பல ப்ரயத்னங்களில் ரம்பையை அனுப்பியது ஒன்று. அவள் அதற்கு உடனே ஸம்மதியாதபோது அவளை நோக்கி "**பத்ரம் தே**" என்று சொல்லி இந்திரன் உத்ஸாஹப்படுத்தினன் [பா. கா. ஸ.64 ச்.5]. அவள்போய் விச்வாமித்ரருடைய தபஸை தடங்கல்செய்தும் மீண்டும்தொடங்கி தபஸ்செய்ததில் ப்ரஹ்மா ப்ரஸன்னமாகி "குழந்தாய் "**பத்ரம் தே**" நீ **ப்ரஹ்ம ரிஷியாய்விட்டாய்**" என்றார் [பா. கா. ஸ. 65 ச்.20]. ராத்ரி கதை பூர்த்தியாய் மறுநாள் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு விச்வாமித்ரர் ஸ்ரீராம லக்ஷ்மணர்களுடன் ஜனகருடைய சபாமண்டபத்திற்குத் திரும்பி வந்ததும் ஜனகர் விச்வாமித்ருக்கு "**பத்ரம் தே**" என்று சொல்லி "**சிவ வில்லை**" ராஜபுத்ரர்களுக்கு காண்பியும்" என்றார் [பா.கா.ஸ. 66 ச். 6].

ஜனக மஹாராஜா தசரத சக்ரவர்த்திக்கு ஸ்ரீமுகம் அனுப்புகையில் "சக்ரவர்த்தி! "**பத்ரம் தே**" ஸ்ரீராமனல் தனுசு முறிக்கப்பட்டது. ஸீதையை ஸ்ரீராகவனுக்குக் கொடுக்க நிச்சயித்திருக்கிறேன் மிதிலைக்கு நீர் வரவேணும்" என்றபோதும் [பா. கா.

ஸ. 68 ச். 11], வந்தபின் விவாஹங்களுக்கு ஏற்பாடு களெல்லாமாய் முகூர்த்த விஷயம் பேசுகையில் ஜனகர் தசரதரை நோக்கி "ரகு குலத்தரசே! "பத்ரம் தே" இன்று மகாநக்ஷத்திரம். இன்று கோதானம் நாந்தி முதலியவைகளை செய்துவையும் மூன்றும் நாள் உத்தர பல்குனியில் கல்யாணம் நடப் பிக்கலாம்" என்றபோதும் [பா. கா. ஸ. 71 ச். 23] வஸிஷ்ட ப்ரஹ்மரிஷி ஸ்ரீராமருக்கு ஸீதையை வரித் தாப்போலவே லக்ஷ்மணருக்கு ஊர்மிளையை வரிக்கி றேன் என்றபோதும் ஜனகர் 'பிரஹ்ம ரிஷே! "பத்ரம்தே" என்றதும் மரியாதைக்காக என்றறிய வும் [பா. கா. ஸ. 71 ச். 1].

இதை ஸுந்தர காண்டத்திலும் பலவிடங்களில் உபயோகப் படுத்தியிருப்பதைக் காணலாம். ஸ. 20, ச். 16-17 சீதைக்கு ராவணனும், ஸ.24, ச்.22, விகதை சீதைக்கும் (விரோதிகள்) ஸ. 34, ச். 18 ஸீதை ஹநு மாருக்கும் ஸ. 36, ச். 3, ஸ. 39, ச். 14, ஹநுமார் ஸீதைக்கும் ஸ. 50, ச். 7-ல் ப்ரஹஸ்தன் ஹநுமா ருக்கும் ஸ. 64, ச். 25-ல் ஸுக்ரீவன் ஸ்ரீராமருக்கும் உபயோகித்திருக்கிறார்கள் என்றால் அதைப் பிரயோ கிப்பதை ஸமயப்படி பார்த்துக் கொள்ளவேண்டியது தான்.

6. மேலே சொன்னதினால் விவாக காலத்தி லேயே ஜனகர், ஸ்ரீராமர் ஸீதை, லக்ஷ்மணர் இம் மூவருக்கும் ரக்ஷைகட்டினது முன்னறிவிப்பு சாஸ் திர விளக்கத்திற்காக முக்யமாய் கியாபகத்தில் ஊன்றி வைத்துக்கொள்ள வேண்டியதாகும்.

---

# 10. முடிவுரை.

1. ஸ்ரீராமாயணத்தில் வரப்போவதை முன்னுடியாய் அறிவிக்கும் விஷயமாய் என்னென்ன சொல்லியிருக்கிற தென்பதைத் தெரிந்துகொள்ள விரும்பி அவைகளை பொறுக்கியெடுத்துத் தொடுத்து சில முக்கியமான பகுதிகளாகப் பிரித்து கூடுமான வரை விளக்கமாய் எழுதப்பட்டது. இதனால் ஸ்ரீராம சரிதத்தைப்பற்றி எவ்வளவு விஷயங்கள் தெரிந்திருந்தனவோ அவைகளைவிட பன்மடங்கு அதிக சங்கதிகள் உணரப்பட்டு அவைகளை எவ்வாறு நோக்கி பலனடையக்கூடுமென்று புதிய மார்க்கம் காட்டப்பட்டது. இதனால் சோதிட ஞானமும் ஸ்ரீ

நூல் நூதனம்

ராம பக்தியும் அதிகரித்திருக்குமெனத் திண்ணமாய்ச் சொல்லலாம். இது ஒரு நூதன சர்ச்சையின் விளைவு. இவ்வகையில் இது முதல் நூல். இதனுடைய ப்ரதம நோக்கம் கடைத்தேறியதாவென்று பின்னோக்கிப் பார்த்தால் ஸம்பூர்ணமாயாகாதிருப்பதோடு உத்தேசித்த அளவு கூடவரவில்லை என்றாலும், இவ்வளவாவது ஒரு நூலாயிற்றே என்று மகிழ்ச்சி அடைகிறோம். இப்

விஷய நிறைவு

புது முறையில் ஸ்ரீராமாயணத்தைப் படிக்கச்செய்யக் கருதி சுருக்கியவளவில் எவ்வளவு விஷய பூரிதமாக்கக்கூடுமோ அவ்வளவும் செய்யப்பட்டது. கொஞ்சம் தாமதித்தால் இதை சிறிதளவாவது பெரிதாக்கலாம். அந்த அநுகூலத்தைவிட புஸ்தகத்தை சீக்கிரத்தில் உருவாக்கி வெளியிடுவது மேலாகத் தோன்றியபடியால்

வால்மீகி பகவான் பன்முறை சொல்லி யிருப்பது போல் "மா பூத் காலஸ்ய பர்யயஃ" "கால விளம்பம் வேண்டாம்" என்றெண்ணி த்வரிதமாய் வெளியிடப்பட்டது.

2. இந்தச் சிறிய புஸ்தகத்தில் 3-ராமாயணங்களோடில்லாமல் பல கிரந்தங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட அற்புதமான சங்கதிகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை அறிந்துக்கொள்ள வேண்டியதற்காக கூடுமான ஸகல ப்ரயத்னங்களும் செய்யப்பட்டன. பல பொதுநூல் நிலையங்களும் சொந்தக்காரர்களுடைய புத்தகசாலைகளும் போய்ப் பார்க்கப்பட்டன. பல வியாக்யானங்கள், மொழிபெயர்ப்

பல ப்ரயத்னங்கள்

புக்கள், வெவ்வேறு விதமான ராமாயணங்கள், வானசாஸ்திர நூல்கள், சோதிட கிரந்தங்கள், காலநிர்ணய நூல்கள் (Chronological Works) முதலியன ஆராயப்பட்டன. அநேக ஸ்ரீராமாயண வித்பன்னர்கள், ஸ்ரீராம பக்தர்கள், வான சாஸ்திரம் சோதிடம் முதலியவற்றில் விசேஷ ஞானமுடையவர்களுடன் வார்த்தையாடப்பட்டது. ஸ்ரீ ராமாயணத்தைப் படித்து விசேஷ தத்வார்த்தங்களையும் பக்தி விஷயங்களையும் பருகிய மஹான்கள் ஸேவிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் ஜ்யோதிஷ பரிச்சயமில்லாததால் இந்நூலைப் பூரா அறிந்து மதிப்பிட்டுச் சொல்ல இயலாதென்றார்கள். வானசாஸ்திர நிபுணர்களும், ஜோஸ்யர்களும் ராமாயண பயிற்சியில்லாததினால் இதில் வரையப்பட்டிருப்பனவற்றைக் குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கத் தாங்கள் தகுதி

யுள்ளவர்களல்லவென்றார்கள். இந்நூலாசிரியனின் அதிர்ஷ்டக் குறைவினால் இரண்டிலும் பாண்டித்ய முள்ளவர்கள் இவனுக்கு அகப்படவில்லை. ஆனால் பார்க்கப்பட்டவர்கள் எல்லாரும் விஷயங்களைத் தெரிந்துக்கொண்டவரை, இதில் கையாளப்பட்ட முறை நூதனமானதென்றும், புஸ்தகத்தில் அதிசயமாய் விஷயங்களை மிக உயர்ந்த முறையில் தெளிவாய் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறதாக ஏற்படுகின்றதென்றும் புகழ்ந்துபேசி இதுவரை இம்மாதிரி கிரந்தமே எழுதப்படவில்லை என்றும், இதனால் ராமாயணமே இனி இந்தப் புது மார்க்கத்தைக் கைப்பற்றி அற்புதமாய் படிக்கப்பட கூடுமென்றும் மெச்சினார்கள். ஆகவே, அறிஞர்கள் இதைப் படிக்கும்போது என்ன குற்றங்களிருந்தாலும் அவைகளைப் பாராட்டாமலும் மறந்தும் இதை ஒரு பெரிய ஸாதனமாகக் கருதி இதிலுள்ள நல்லவைகளை யெல்லாம் அங்கீகரிககவேணுமாய்ப்பிரார்த்திக்கப்படுகிறது.

புகழ்

3. ஸ்ரீராம சரிதத்தை இவ்விதமாயும் கவனஞ் செலுத்தி வாசித்து அமிர்தத்தைத் தானும் பருகி இதராளும் பானம் பண்ணச் செய்யக்கூடுமென்கிற ஆசையினால் இச்சிறிய அத்புத புஸ்தகம் எழுதப்பட்டது. இது ஜ்யோதிஷம், சாமுத்ரிகா லக்ஷணம், சகுனம், கனவு, முன்னறிவிப்புக் கொண்டாட்டங்கள், பத்ரம்தே என்று 6-பெருந்தலைப்புகளாகவும் ஜோஸ்யத்தில் ஜாதகம், கோசாரம், முகூர்த்தம், கிரக நக்ஷத்திர ஸம்பந்தாதிகள்என 4-உட்பிரிவுகளாகவும் பிரித்து எழுதப்பட்டிருக்கிறது. முக்யமான ஜாத

கந்தான் ரொம்ப இடம் எடுத்துக்கொண்டது. அதிலும் **ஸ்ரீராமர் ஜாதகத்தில் கூட 5-கிரகங்கள் உச்சமெனக் காட்டியது,** பலருக்கிருந்த ஸந்தேகத்தை வேராறுக்குமென்பது திண்ணம். ஜனன ஜாதகத்திற்கும், முகூர்த்தத்திற்கும், நக்ஷத்திரங்களின் அதிதேவதை முக்யமாக பாராட்டப்பட்டதென்பதை எடுத்துக்காட்டியது ஒரு விசேஷம். கம்பர் ஜாதக விஷயமாவது பேசியும் பங்குனி உத்திரத்தில் ஸீதா கல்யாணம் என்றும் ஜோஸ்யத்தில் ஈடுபட்டார். துளசிதாஸ் ஜோஸ்ய பாபத்தில் ப்ரவேசிக்கவே இல்லை. ஒன்பது கிரகங்களும் சுப ஸ்தானங்களிலிருக்கையில் சைத்ரமாத நவமி திதி என்று சொல்லி நக்ஷத்ரங்கூட அபிஜித் என்று கூறிப்போந்தார். வால்மீகி காலத்திலேயே அபிஜித் ஒரு நக்ஷத்திரமாகப் பாராட்டப்படவில்லை என்றும் 27-நக்ஷத்திரங்களாகக் கொண்ட வான சாஸ்திரம் வழங்கப்பட்டதென்றும் அபிஜித் நக்ஷத்திரமாயிருந்ததாகக் கருதிலுங்கூட எப்போதும் அங்கிருந்திருக்க முடியாதென்றும் ஏற்படுகிறது. வேத ரிக்கில் நக்ஷத்திரங்களுடைய அதி தேவதைகளைச் சொல்லிக்கொண்டேபோகையில் திருவாதிரைக்கு ருத்ரனென்றும் புனர்வசுவிற்கு அதிதி என்றும் பூசத்திற்கு குருவென்றும், ஆயில்யத்திற்கு ஆதிசேஷன் என்றுமிருக்கிறது. **அபிஜித் முகூர்த்தமாகத்தான் ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.**

*கம்பர் துளசிதாஸ்*

ஸ்ரீராமாயணத்தில் இப்போது வழங்கிவரும் வருஷப் பிரிவினைகளாகிய அயனங்கள், ருதுக்கள்

(ஸௌரமானப்படி மேஷமாத ப்ரவேசத்தைக் காட்டக்கூடியது) சாந்த்ரமான மாதம் இரண்டு பக்ஷங்களுடையது, திதி நக்ஷத்திரங்கள் இருந்திருக்கிறது. சில காலநிர்ணய ஆராய்ச்சியாளர்கள், வான சாஸ்த்திரத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் நிபுணர்கள் கிருஸ்து பிறப்பதற்கு முன் 1194 - வருஷம் சுமாரில் மஹாபாரத யுத்தம் நடந்திருக்கக் கூடுமென்றும் அதற்குப் பின்தான் அதாவது சுமார் 3150-வருஷங்களுக்கு முன்னர் குரு வருஷ சக்ரமென்னும் பிரபவாதி 60-வருஷச் சுற்று (Cycle of 60 years) தொடங்கிற்றென்றும் சொல்லுகின்றார்கள். சில சோதிட நூல்களில் ஒரு தடவை வந்தபடியே பல ஆயிர வருஷங்களுக்குப்பின் கிரகநிலை முதலியவை மற்றொருமுறை சுற்றி வருமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே ஸ்ரீராம ஜனன காலத்திலிருந்த நிலை இப்பாலும் பல தடவை வந்திருக்கக்கூடும். எத்தனை சுற்றுகளுக்குமுன் ஸ்ரீராம ஜனன காலத்திய சுற்று வந்ததென்று நிர்ணயிக்க முடியாது. ஆகவே இக் காரணத்திற்காகவும் வால்மீகி பாடியது சரி என்றும் பெரியோர் செய்த அர்த்தங்களே சரி என்றும் கொள்ளவேணும்.

60-வருஷ சக்கிரம்

இப்போது வானசாஸ்திரமும் சோதிடமும் மற்ற ஸாமுத்திரிகா சாஸ்திரம், கை அமைப்பு அதன் ரேகைகள் கையெழுத்து சாஸ்திரம் முதலிய பற்பல சாஸ்திரங்கள் விஞ்ஞானங்களாய் கருதப்பட்டு பற்பல நுட்பங்களுடன் சொல்ல முடியாத அவ்வளவு விருத்தியாயிருக்கின்றன. ஆகிலும் ஸ்ரீராமாயண

காலத்திலிருந்த அடிப்படை கற்கோட்டையாய் நிற்கிறது. அவ்வப்போது பூமியில் புதைபட்டிருக்கும் பொருள்கள் அகப்படுவதுபோல் இராமாயணத்தில் உள்ளவைகளைத் தோண்டி எடுத்து ஆராய்ந்தறிந்தால் அவை எல்லா காலங்களுக்கும் பொருந்தியவையாகும்.

உலகத்தின் தன்மையைப் பற்றி முன்னோர் கொண்டிருந்த அபிப்பிராயங்களே இப்போது மாறிப்போயிருக்கின்றன. இப்போது அணுசக்தியால் அணுகுண்டு, ஜலகுண்டு முதலிய உலகை அழிக்கும் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரீராமாயண காலத்தில் இவைகளைப்போல் அஸ்திரங்கள் இருந்ததாகத் தெரிகிறது. அப்போது வில்லும் அம்பும் மட்டும் கண்கண்ட ஆயுதங்கள். அவைகளிலிருந்தே எல்லா அஸ்திரங்களும் மந்த்ர பலத்தால் கிளப்பப்பட்டன. ஸ்ரீராமர் ஆக்னேயாஸ்த்ரத்தால் ஸமுத்ரத்தையே வறட்டி விடுகிறேனென்றார். ஒரு துரும்பை மந்த்ரித்து காகாஸுரன்பேரில் விட்டது, அவனை அனைத்துலகம் துரத்திச் சென்றது அதற்கு எந்த (Radio Controlled) தனிவிசை கொடுக்கப்பட்டது? முன்னால் நடந்த ஸ்ரீராம சரிதம் மொத்தமும் வால்மீகிக்கு ப்ரத்யக்ஷமாய் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்தது? அப்போது எந்த (Television) விஞ்ஞான விசேஷ பார்வை இருந்தது. Television ஆல் இப்போது மற்றொரு இடத்திலிருப்பது தானே தெரியும் கடந்துபோனது தெரியாதே. ஸ்ரீராமர் சேனைகளில் மறித்தவர்களை உயிர்ப்பித்து அழைத்து

வந்தார்? இறந்தவரை உயிர்ப்பிப்பதும் ஸ்ருஷ்டிப்பதும் (அழிப்பதைவிட) ச்லாக்யமல்லவா? விச்வாமித்ரர் இன்னொரு உலகம் ஸ்ருஷ்டிக்கப் புகுந்து பலவைகளை சிருஷ்டித்துவிட்டார் த்ரிசங்குவை சரீரத்துடனேயே ஸ்வர்க்கத்திற்கு அனுப்பி அங்கிருந்து தள்ளப்பட்டும் பூமியில்விழாதபடி ஆகாசத்திலேயே இருக்கும்படி செய்தார் இதை எழுதுபவன் சிறுவனுயிருந்தபோது ராமாயணமும் மஹாபாரதமும் (Christian Literature Society யாரால் சுருக்கமாய் எழுதப்பட்டதை பார்த்திருக்கிறான் அதில் புஷ்பக விமானமென்பது மனோராஜ்யமான வெறுங்கதைஎன்பதுபோல்(MagicCar என்று) எழுதப்பட்டிருந்தது. இப்போது ஆகாய விமானங்கள் ஸர்வ ஸாதாரணமாய்விட்டன. மிகப் பெரிய ஆகாய யுத்தக் கப்பல்களு மிருக்கின்றன. விஞ்ஞானம் எவ்வளவோ விருத்தியாய் வருகிறது. இப்போது ஆகாயத்தில் பூமியைச் சுற்றிவரக்கூடிய (Robot) குண்டுகள் கண்டுபிடிக்கப்பட் டிருப்பதாகவும் இரண்டு மூன்று வருஷங்களில் செயற்கைச் சந்திரன் வெளியே விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. த்ரிசங்கு சரித்திரத்தை ஸந்தேஹித்தவர்கள் இப்போதாவது நம்புவார்களா? முன்னுக்கும் இப்போதைக்கும் ஒரே ஒரு வித்யாஸந்தான். முன்னால் எல்லாம் மந்த்ரத்தால் நடந்தது. இப்போது ஜ்ஞான சக்தியால் நடக்கிறது. முன்னுலிருந்ததாகச் சொல்லப்பட்டு நம்பப்படாதிருந்தவைகள் ஸாத்யமாயிருந்திருக்கக் கூடும் என்று நம்பும் காலம் வந்திருக்கிறது.

துளசிதாஸ் அவர் ஸ்ரீராமரை ஸர்வ வியாபி ஸர்வஜ்ஞன் ஸர்வசக்தியர் வேறே தெய்வமே கிடையாதென்று போற்றியிருக்கிறார். வால்மீகி க்ஷீராப்தியிலும் கம்பர் இன்பக்கடலிலும் துளசிதாஸ் ராமசரித மானஸ மஹாதடாகத்திலும் அமுதத்தைப்பருகினால் ஆனந்தம் பெருகி இஹலோகத்தில் ஸகல நன்மைகளையும் அடைந்து பரலோகத்தில் ஸாயுஜ்ய பதவியையும் அடையமுடியும். துளசிதாஸ் ராமாயணத்தை Original அசல் ஹிந்தியில் வாசிக்க முடியாவிடினும் கொஞ்சம் ஹிந்தி தெரிந்த இவனைப்போல் Kalyana Kalpataru பதிப்புப்போல் நல்ல மொழிபெயர்ப்பில் படித்தால் இன்பம் தரும்.

இதற்குள்ளேயே இந்நூலில் கண்ட இரண்டொரு விஷயங்களுக்கு ஆக்ஷேபங்கள் கிளம்பி இருக்கின்றன. அவை பரவாதபடி இப்போதே பதில்சொல்லக் கூடுமாகையால் அப்படி வணக்கத்துடன் செய்யப்படுகிறது. ஸ்ரீராமர்வனமேகியபோது பரதர் ராஜப்ரதிநிதியாய் இருந்தார் என்றும் ஸ்ரீராகவன் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டபின் இளவரசரா யிருந்தார் என்றும் இதற்குக் காரணம் அவருடைய நக்ஷத்திரத்தின் அதிதேவதை, சம்பத்தைக் கொடுக்கக் கூடிய லோககுருவென்றும் சொல்லிப் போந்தோம். இதற்கு ஒரு ஆக்ஷேபணை இருப்பதாகத் தெரிந்தது. பரதாழ்வார் நாடாளவில்லை. ஸ்ரீராம பாதுகைகள்தான் ஆண்டனவெனப்படுகிறது. பரதரின் தாயாருக்குத் தந்தைமுன் தந்த வரங்களை

பரதர் பாதுகை பேரால் ஆளுகை

அவள் அவரைக்கேட்டு அகண்ட ராஜ்யத்தைப் தன் பிள்ளைக்கு வாங்கி வைத்தாள். அத்தரணியைத் தீவினை என்று நீத்ததினால் ஆயிரம் ராமர் ஒரு பரதர் கேள்வராவரோ என குகனால் புகழப்பட்டார். பிறகு சித்திர கூடத்திற்குப் போய் ஸ்ரீராமரைத் தரிசித்து ராஜ்யத்தை அவர் திருவடிகளில் ஸமர்ப்பித்து அதற்குப் பிரதியாக ஸ்ரீராம பாதுகைகளைப் பெற்று சித்ர கூடத்தில் சிரமேற்றாங்கிய திருவடிச்சுவடுகளை நந்திக்கிராமத்திற்கு எள்ளப் பண்ணிக்கொண்டு போய் **பாதுகாபட்டாபிஷேகம்** செய்வித்து நாடாள வைத்தார். அத்திருவடிச்சுவடுகளைச் சிரஸா வணங்கித் தொழுது எல்லாவற்றையும் அவைகளுக்கு அர்ப்பணம் பண்ணிவந்தார். நம்முடைய ஜ்யோதிஷ விஷயத்திற்கு வேண்டியது பெரியதானது பரதர் ஸம்பாதித்தது ஒன்றுண்டு. அதுதான் உலகளாவிய சாச்வதமான **பாக்கியம்.** தரணி திரவ்வியம் முதலிய எல்லாவற்றையும்விட அதீதமான **பெருங் கீர்த்தி.** பாதுகைகள் பேரால் ஆண்டது யார்? பரதரன்றோ? 'யதா ராஜா ததாப்ரஜாஃ' என்கிறபடி ராஜா ஜடையும் மரவுரியும் தரித்து வனவாசம் போனால் அவருக்குப் பிரதியாக ராஜ்யத்தைப் பார்ப்பவர் அவரைப் போலவே தானிருப்பர். ஸ்ரீ ராமருக்குத் திருப்பி ராஜ்யத்தை ஒப்புவித்த போது பரதர் "**என்னால் ரக்ஷிக்கப்பட்டிருந்த இந்த ராஜ்யம் உமக்கு ஸமர்ப்பிக்கப்படுகிறது.**" என்றல்லவா விண்ணப்பித்தார். ஒரு சமயம் இந்த சந்தர்ப்பத்தில் "என்னால் திருப்பிக் கொடுக்கப்பட்டது" என்று அர்த்தம் செய்யவேணும் என்றாலும், அடுத்த-

ச்லோகத்தில் "நீர் கருவூலத்தையும் தான்யசாலையை யும் பட்டணத்தையும் ஸைந்யத்தையும் பார்த்துக் கொள்ளவேணும். உம்முடைய பராக்ரமத்தால் ஸர் வமும் '"**என்னுல்**" பத்து மடங்கு ஆக்கப்பட்டது' [யு. கா. ச. 130. ஸ். 53-55]. என்ற போதாவது தான் ஆட்சி செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லையா? அப் போது பாதர் ராஜ்ய பரிபாலனத்தை, பாதுகைகள் பேராலேயே யானுலும், பார்த்தார் என்ருயிற்றல் லவா. அந்த கிரகபலம் இல்லாவிடில் எக்காரணத்தி னுலேயாகிலும், கடைசி தம்பி சத்ருக்நருக்கு இந்த சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கக் கூடாதா? துளசி தாஸ் ராமாயணத்தில் இம்மாதிரி ஒரு யோசனையும் ஆலோசிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நம்மிட சோதிட ஆராய்ச்சிக்கு நக்ஷத்திரத் தின் அதிதேவதைக்குப் பலம் உண்டென்கிற சாஸ் திரம் உண்மையானதை எடுத்துக்கொள்வோம்.

10. கடைசியாக ஒ'ரு விண்ணப்பம். இந் நூலில் சிலவிடங்களில் இதை எழுதுபவன், இவ னுக்குத் தெரிந்தாப்போல் படிப்பவர்கள் எல்லாருக் கும் விஷயம் தெரிந்திருக்குமென் றெண்ணிவிட்ட தாக அச்சு Proof பார்த்தவர்களில் சிலர் காட்டினுர்கள். உதாரணமாக 73-பக்கத் தில் 'நிமேஷாந்திரமாத்ரேண' என்ற விடத்தில் **நிமிஷத்திற்குள்** ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸுக்ரீவ மஹாராஜாவை அடைந்தார் என்று விளக்கமாய் எழுதியிருந்தால் நன்ருயிருக்கும் என்ருர்கள். இன் னும் இம்மாதிரி ஏதாவது விஷயங்களில் விளக்கம்

வேண்டு கோள்

வேணுமாயிருக்குமோ என்னவோ தெரியவில்லை. நூலின் கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு போனால் எல்லோரும் சுலபமாய் எல்லாவற்றையும் தெரிந்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஸகலருக்கும் தெளிவாயிருக்கும்படி எழுதவேணுமென்றுதான் உத்தேசம். அதைப் பாராட்டி குறைகளிருந்தால் பெரிய மனசு செய்து அவைகளை மிகைப்படுத்தாதொழிகவேணுமென்று வேண்டிக்கொள்ளப்படுகிறது. ஸ்ரீ ராமாயணத்தில் வித்பத்தி உள்ளவர்களுக்கு சுட்டிக்காட்டின உடனேயே விஷயம் விளங்கிவிடும். ஆராய்ச்சியாளர்கள் எல்லாவற்றையும் தாங்களே பார்த்துத் திருப்தி அடைவார்கள். ஸாமான்யர்களுக்கு சற்று ச்ரமம்போல் தோன்றலாம். கவனம் செலுத்தினால் எல்லாமும் நன்றாய் விளங்கும்.

ஸ்ரீ ராமாயண ஜ்யோதிஷாதி முடிவடைவது ஸந்தோஷம். இச்சுப மங்கள வேளையில் ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹநுமத் ஸமேத ஸ்ரீ ராமரை ஸ்தோத்திரஞ்செய்து ஆர்த்தி பண்ண வேணும். நம் பிராந்தியத்தில் பூஜையில் தூப தீபார்த்தி கற்பூரார்த்தி சமர்ப்பிக்கிறோம். உத்ஸவம் ஆரம்பிக்கும்போதும், பூர்த்தியாகும்போதும் கற்பூரார்த்தி ஸமர்ப்பிக்கிறோம். துளசிதாஸ் காலத்தில் **தீபாராதனை**யை வெகு விசேஷமாகப் பாராட்டியதாகத் தெரிகிறது. நம் பத்ததியில் அது அடங்கிப் போகிறபடியால் நம் வழக்கம்போல் கீர்த்தனங்களைப்பாடி கற்பூரார்த்தி ஸமர்ப்பிப்போம்.

---

ஸ்ரீராமஜெயம் கோடான கோடிதரம்.

கோடானகோடி மஹௌகம் ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம்.

ரகுபதிராகவராஜாராம்
பதீத பாவன ஸீதாராம்

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே.

மங்களம் கோஸலேந்த்ராய மஹனீய குணாப்தயே,
சக்ரவர்த்தி தநூஜாய ஸார்வ பௌமாய மங்களம்.

मंगळं कोसलेंद्राय महनीय गुणाब्धये ।
चक्रवर्तितनूजाय सार्वभौमाय मंगळम् ॥

మఙ్గళం కోసలేన్ద్రాయ మహనీయ గుణాబ్ధయే
చక్రవర్తి తనూజాయ సార్వభౌమాయ మఙ్గళమ్.

சுபம்.

# விளக்க உரை

---

இந்நூலின் 142, 143-பக்கங்களில் கண்டபடி சில விஷயங்களில் விளக்கம் தேவையாயிருக்குமென்று இந்த குறிப்பு எழுதப்படுகிறது.

இதன் 21-23-பக்கங்களில் கண்ட விச்ரவஸ் கைகஸியின் முன்னிட்ட துஷ்ட சந்ததிகள் ராவணன், கும்பகர்ணன், சூர்ப்பநகை. கடைசி ஸத்புத்ரன் தர்மாத்மா விபீஷணன்.

26-பக்கத்தில் ரகுவம்சம் சர்க்கம்-3, ஸ்லோகம்-13-ல் இருப்பதாகக் கண்டிருப்பது ரகுமஹாராஜாவின் பிறந்த வேளையைச் சொல்வது.

சூரியனின்றி ஐந்து கிரகங்கள் உச்சமாயிருக்கையில் பாக்யவானுயிருக்கக்கூடிய புத்திரர் பிறந்தார், என்று இருக்கிறதே தவிர மற்றவிவரங்களில்லை.

उच्चस्थे ग्रहपञ्चके सुरगुरौ सेन्दौ नवम्यां तिथौ
लग्ने कर्कटके पुनर्वसुयुते मेषं गते पूषणि ।
निर्दग्धुं निखिलाः पलाशसमिधः मेध्यादयोध्यारणेः
आविर्भूतमभूतपूर्वमपरं यत्किंचिदेकं महः ॥ (भोजचम्पू)

𑌉𑌚𑍍𑌚𑌸𑍍𑌥𑍇 𑌗𑍍𑌰𑌹𑌪𑌞𑍍𑌚𑌕𑍇 𑌸𑍁𑌰𑌗𑍁𑌰𑍌
𑌸𑍇𑌨𑍍𑌦𑍌 𑌨𑌵𑌮𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌥𑍌
𑌲𑌗𑍍𑌨𑍇 𑌕𑌰𑍍𑌕𑌟𑌕𑍇 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌸𑍁𑌯𑍁𑌤𑍇
𑌮𑍇𑌷𑌂 𑌗𑌤𑍇 𑌪𑍂𑌷𑌣𑌿 ।
𑌨𑌿𑌰𑍍𑌦𑌗𑍍𑌧𑍁𑌂 𑌨𑌿𑌖𑌿𑌲𑌾𑌃 𑌪𑌲𑌾𑌶𑌸𑌮𑌿𑌧𑌃
𑌮𑍇𑌧𑍍𑌯𑌾𑌦𑌯𑍋𑌧𑍍𑌯𑌾𑌰𑌣𑍇𑌃
𑌆𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌮𑌭𑍂𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌪𑌰𑌂
𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍇𑌕𑌂 𑌮𑌹𑌃 ॥ (𑌭𑍋𑌜𑌚𑌮𑍍𑌪𑍂)

போஜரின் சம்பூ ராமாயணத்திலிருப்பது ஸ்ரீராமருடைய ஜாதகம் பூராவும். ஸ்ரீராமாயணத்திலுள்ள எல்லாத் தகவல்களும் மேஷத்தில் சூரியனிருக்கும்போது என்று வியக்தமாய்ச் சொல்லி எழுதப்பட்டிருக்கின்றன.

ஐந்து கிரகங்களும் உச்சாமயிருக்க தேவ குருவும், சந்திரனும் ஒரு ராசியிலிருக்கும்போது நவமி திதியில், கடகலக்னத்தில், புனர்வசு நக்ஷத்திரத்தில், மேஷத்தில் சூரியனிருக்கும்போது [ராக்ஷஸ ஸம்ஹாரத்திற்காக] முன்னிம்மாதிரி யில்லாதவிதமாய் அயோத்தி மாநகரில் ஒரு திவ்ய தேஜஸ் உண்டாயிற்று. ஸ்ரீராமர் அவதரித்தார்.

---

# ஸ்ரீ ராமாயண ஜ்யோதிஷாதி

## மன்னிப்புக் குறிப்பு.

இந்தச் சின்ன புஸ்தகம் இதன் வழியில் நூதனமும் அதிசயமுமானதென பெருமை படைத்தேன். அந்த தெம்பைச் சிறிது குறைக்க சில காரணங்கள் எற்பட்டன. பிழை திருத்த ஜாப்தா எடுப்பதற்காக ஊன்றிப் படித்ததில் இம்மாதிரி புஸ்தகத்தில் இருக்கக்கூடியதை விடவும், இதிலிருப்பதாக எண்ணியதைவிடவும் அதிக பிழைகளிருப்பது தென்பட்டது. இவ்வளவு பிழைகளிருப்பதற்கு என்னிட தேக மனநிலையும் புஸ்தகம்போட அநுபவமின்மையும் காரணம். அதற்கு எவ்வளவோ வருத்தப்படுகிறேன். பயந்து அவசரப்பட்டு அச்சடிக்க விடுத்ததற்கு எவ்வளவோ வருந்துகிறேன். அதற்கு வாசிப்பவர்கள் தயவுபண்ணி என்னை மன்னிக்க வேணுமாய் வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

# சேர்க்கப்பட்டவைகளும் திருத்தங்களும்.

| பக். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 34 | 22 | கேட்கிறார்கள் | கேட்கிறார்கள். |
| 39 | 20 | பார்த்தோம் | பார்ப்போம் |
| 40 | 16 | சாந்த்ரமாணமாதம் | சாந்த்ரமான மாதம். |
| 41 | 3 | அவர்தான் | அவர், தான் |
| 43 | 25 | 0.0.2225 T | .002225 T |
| 44 | 2 | வருஷமாதப் | வருஷப் |
| 57 | 8 | கிழமை, திதி, நக்ஷத்ரம் அமிர்தாதி | கிழமை அமிர்தாதி |
| 62 | 26 | முகூத்தம் | முகூர்த்தம். |
| 62 | 27 | நக்ஷத்ரதிரம் | நக்ஷத்திரம் |
| 64 | 27 | 2-முதல் 10 வரிகளுக்கு | 147-வது பக்கத்தில் உள்ள குறிப்பு பார்க்க. |
| 69 | 3, 4 | விழித்துக்கொண்டு விரதம் | விழித்துக்கொண்டு இருக்க விருதம் |
| 71 | 1 | பாரத்து | பார்த்து |
| 72 | 14 | பொருள்தரும் | பொருள் தரும். |
| 73 | 26 | Twinking | Twinkling |
| 74 | 2 | Instent | Instant |
| 81 | 25 | அ. கா. ஸ. 41 ச். 1 | அ. கா. ஸ. 41 ச். 11. |
| 81 | 28 | ... ... ... | யு. கா. ஸ. 4 ச். 49½ [த்ருவன்<br>யு. கா. ச. 4 சு. 50½ [திரிசங்கு |
| 85 | 9 | வசயக்ர | வச்யகர |
| ,, | 11 | எனவாகும். | எனலாகும். |
| 86 | 8 | அறியாதவர்கள் ஓடி | அறியாதவர்கள் ஓடி. |
| 86 | 20 | சலாகிக்க | ச்லாகிக்க |
| 95 | 4 | ராவணன் | ராவணன். |

| பக். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 102 | 11 | கலந்து மிருக்கலாம். இதர்குப் | கலந்து மிருக்கலாம் அல்லது நல்ல தல்லாததுடன் நல்லதும் இருக்கலாம். இதற்குப் |
| 102 | 22 | ராஜாவின் தாள்களில் ஒத்தி | ராஜாவின் தாள்களில் (உள் தவடைகளில்) ஒத்தி |
| 105 | 101 | ஹிண்டுலா ஸ்பெஷல் லெக்சரர் | Secretary to the Director of Legal Studies. |
| 108 | 6 | விர்கு | கனவிற்கு |
| 108 | 25 | போனது | போனது. |
| 120 | 21 | பன்றிமீதும் | பன்றிமீதும், |
| 125 | 6 | தெறிந்து | தெரிந்து. |
| 125 | 7,8 | ஸ்ரீ ராமாவதாரித்தார் | ஸ்ரீ ராமர் அவதரித்தார் |
| 126 | 12 | சொன்னது | சொன்னது. |
| 136 | 12 | சுபஸதானங்களில் | சுப ஸ்தானங்களில் |
| 132 | 19 | வரிக்குப் பிறகு 20-க்கு முன் | யு. கா. ச. 117 ஸ். 9. விபீஷணன் ஸீதைக்கும் யு. கா. ச. 122 ஸ. 29 தசரதர் லக்ஷ்மணனுக்கு |
| 138 | 19 | சென்றது | சென்றது. |
| 139 | 4 | விட்டார் | விட்டார். |
| 139 | 7 | செய்தார் | செய்தார். |
| 139 | 9 | (Christian | Christian |
| 139 | 25 | ஜஞான | விஞ்ஞான |
| 141 | 4 | கேள்வராவரோ | கேள் ஆவரோ |
| 141 | 24 | ரஷிக்கப் | ரக்ஷிக்கப் |

குறிப்பு :—64-வது பக்கத்தில் 2-வது வரியில் 'எந்த புஷ்யத்தில்' என்பது முதல் 10-வரிகளிலுள்ள விஷயம் தெளிவின்மையால் சரியாயில்லை என்று தோன்றுவதினால் இந்த சுத்தமொழி எழுதப்படுகிறது :—

இளவரசு பட்டாபிஷேகத்திற்கு புஷ்யத்தைத் தெரிந்தெடுத்தற்குக் காரணம் சொல்லப்பட்டபோதிலும், அந்த ஸந்நிவேசத்தில் புஷ்யம் விக்னகரமாயிருந்தது. ஆகவே முகூர்த்தம் நடவாமல் போயிற்று. ராவணவதத்திற்குப் பிறகு ஸ்ரீராமர் நாடுதிரும்பிய போது அதே புஷ்யம் நிர்விக்னமான அமைப்பிலிருந்தது. அதில் ஸ்ரீராமரைக் காணச்சொல்லி ஆஞ்ஜநேயர் பரதருக்குச் சென்றார். அவரும் ஜெயசீலராய் வந்த திருத்தமயனாரை தரிசித்தார்.

11. விவாஹ காலத்தில் மகத்தையும் உத்திரத்தையும் சொல்லி மேற்சொன்ன இரண்டு ப்ரகரணங்களிலும் புஷ்யத்தைக் குறிப்பிட்டு ஹஸ்தம் உதவாதென்றதினால் தாராபலன் ஒரு முகூர்த்த அம்சமாக பார்ப்பதிருந்ததோ என்று நினைக்க இடமிருக்கிறது.

பட்டாபிஷேகம் பூசத்திலேயே நடந்ததாக இல்லை. இன்ன நக்ஷத்திரத்தில் நடந்ததென்றும் காணக்காணோம். அதற்குத் தயாராகச் சிறிது அவகாசம் பிடித்திருக்கும். ஸகலவிதத்திலும் ஸித்தம் பண்ணி நல்லதினத்தில் சுப பலனைக் கொடுக்கக்கூடிய அதிதேவதையையுடைய நக்ஷத்திரத்தில் ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடந்ததென்றே கொள்ளவேணும்.

அப்யஷிஞ்சந் நரவ்யாக்ரம் ப்ரஸந்நேந ஸுகந்திநா,
ஸலிலேந ஸஹஸ்ராக்ஷம் வஸவோ வாஸவம் யதா.

சுஹ்யஷிஞ்ஞநரவ்யா஘்ரம் ப்ரஸனெந ஸுமஂந்நா ।
ஸலிலெந ஸஹஸ்ராக்ஷம் வஸவொ வாஸவம் யயா ॥

अभ्यषिञ्चन्नरव्याघ्रं प्रसन्नेन सुगन्धिना ।
सलिलेन सहस्राक्षं वसवो वासवं यथा ॥

சுபம்! சுபம்!! சுபம்!!!